விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 பங்குனி 25 புதன்கிழமை (08.04.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 110

ராம்கோ
THE RAMCO CEMENTS LIMITED
RAMCO
SLS 107 தரம் கொண்டதும், உலகதர 14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ

## திறைசேரி யோசனை பாராளுமன்றில் தோல்வி

# அரசின் திட்டத்தை எதிரணி தோற்கடிப்பு

(கொழும்பு)


**திறைசேரி உண்டியல் மூலம் பணம் பெற்றுக் கொள்ளும் அரசாங்கத்தின் யோசனை பாராளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான புதிய அரசாங்கம் ஆட்டம் காணத் தொடங்கியுள்ளமை உறுதியாகியுள்ளது.**

400 பில்லியன் ரூபாய் பணம் பெற்றுக் கொள்ளும் நோக்கில் திறைசேரி பிணைப்பத்திரங்களை பெற்றுக் கொள்ளும் அரசாங்கத்தின் திட்டத்தை எதிர்க்கட்சிகள் தோற்கடித்துள்ளன.

புதிய அரசாங்கம் பாராளுமன்றில் முன்வைத்த யோசனை ஒன்று தோற்கடிக்கப்பட்ட முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.

அரச ஊழியர்களுக்கு தமிழ் சிங்கள புத்தாண்டை முன்னிட்டு சம்பளங்களை வழங்க இவ்வாறு கடன் பெற்றுக்கொள்ள அரசாங்கம் முயற்சிப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் நேற்றைய தினம் பாராளுமன்றில் திறைசேரி உண்டியல்களை பெற்றுக்கொள்வது குறித்த யோசனை முன்வைக்கப்பட்டு விவாதிக்கப்பட்டது.



விவாதத்தின் இறுதியில் இது குறித்த வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

வாக்கெடுப்பின் போது ஆதரவாக 31 வாக்குகள் மட்டுமே அளிக்கப்பட்டன எதிராக 52 வாக்குகள் அளிக்கப்பட்டன.

இதன்படி குறித்த திறைசேரி

23ஆம் பக்கம் பார்க்க

வலம்புரி ADZ உள்ளே...

### முதலமைச்சரிடம் ரணில் மன்னிப்பு கோரவேண்டும்

(யாழ்ப்பாணம்)

நாட்டின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனிடம் பகிரங்கமாக மன்னிப்பு கோர வேண்டுமென வடக்கு மாகாண சபையின் ஆளுங்கட்சி உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண முதலமைச்சரினை ரணில் விமர்சித்தமை தொடர்பிலேயே மன்னிப்பு கேட்க வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு மாகாண சபையின் 27

24ஆம் பக்கம் பார்க்க

## தூய நீருக்காக மாபெரும் பேரணி

### உண்ணாவிரத போராட்டமும் நேற்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கழிவு எண்ணெயினால் மாசடைந்துள்ள சுன்னாகம் மற்றும் அதனை அண்டிய நிலத்தடி நீரினை சுத்தமாக்குமாறு கோரியும் தூய நீருக்கான செயலணியொன்று வடக்கு மாகாண முதலமைச்சர், ஆளுநர் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் ஆகியோரது தலைமையில் அமைகக்கப்பட வேண்டும் என வலியுறுத்தி மாபெரும் ஆர்ப்பாட்ட பேரணியொன்று

23ஆம் பக்கம் பார்க்க



### இராணுவ சிப்பாய் சடலமாய் மீட்பு

(யாழ்ப்பாணம்)

வேலணை, அராலி சந்திக்கருகிலுள்ள காட்டுக்குள் இருந்து இராணுவச் சிப்பாய் ஒருவர், நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பதுளையைச் சேர்ந்த லான்ஸ் கோப்ரல் டபிள்யூ.எஸ்.வீரசிங்க என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர், அராலி சந்தி சோளவத்தையில் அமைந்துள்ள 11ஆவது கெமுனு வோச் படைப்பிரிவைச் சேர்ந்த இராணுவ சிப்பாய ஆவார்.(செ-11)

## 19ஆம் திருத்தத்தை நிறைவேற்ற அவசரப்படுவதே பிரச்சினைக்கு காரணம்

### இப்போது உசிதமல்ல என்கிறார் அமைச்சர்-ராஜித



(கொழும்பு)

அரசியலமைப்பின் 19ஆவது திருத்தத்தை அவசர அவசரமாக நிறைவேற்ற முற்படுவதே பிரச்சினைகளுக்குக் காரணம் என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

19ஆவது திருத்தத்தை அவசரமாகக் கொண்டு வருவது உசித மல்ல என தெரிவித்த அமைச்சர், கலந்துரையாடல்களுக்கு வாய்ப்பளித்து இரு தரப்பினரதும் கருத்துக்கள் பெறப்படுவது முக்கியமெனவும் இவ்விடயத்தில் அவசரமாக முடிவெடுப்பது உகந்ததல்ல என்றும் தெரிவித்தார்.

19ஆவது திருத்தச் சட்டத்துக்கு எதிராக செயற்பட ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி முயற்சித்து வருகின்ற நிலையில் ஹெல உறுமய கட்சியின் அமைச்சர் சம்பிக்க ரணவக்கவும் 19ஆவது திருத்தத்தை நிறைவேற்ற இடமளிக்கப் போவதில்லை

23ஆம் பக்கம் பார்க்க

## எனக்கு இலஞ்சம் கொடுக்க மகிந்த முயற்சித்தார்-சரத்

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனக்கு இலஞ்சம் வழங்குவதற்கு முயற்சித்ததாக பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கம்பொல நகர சபையில் இடம் பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது தகவலுக்கு மேல் தகவல் வந்துகொண்டிருந்தது.

ரூபாய் 2000 மில்லியன் பணம தருகிறேன், கொழும்பில் வசிப்பதற்கும் காணி தருகிறேன், ஜெனரல் அதிகாரத்தை மீண்டும் தருகிறேன, பாதுகாப்பு வழங்குகின்றேன், மனைவிக்கும் வேலை பெற்றுக்கொடுக்கிறேன், பிள்ளைகளுக்கும் அவசியமானதை செய்து தருகிறேன் என தகவல் வந்துகொண்டே இருந்தது. ஆனால் அதனை நான் பெற்றுக் கொள்ளவில்லை.

நாட்டை பற்றியே சிந்தித்த காரணத்தினால் நாங்கள் யாரிடமும் மண்டியிடவில்லை. சிறையில் இருந்தாலும் மண்டியிடவில்லை. ஆனால் இன்று ராஜபக்ஷ மண்டியிட்டுள்ளார் என பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளராக தெய்வேந்திரராஜா நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண வலயத்தின் கல்விப் பணிப்பாளராக நடராஜா தெய்வேந்திரராஜா நியமிக்கப் பட்டுள்ளார்.

உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இவருக்கான நியமனத்தை வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்திய சீலன் வழங்கியுள்ளார்.

யாழ்ப்பாண வலயத்தின் கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள ந.தெய்வேந்திரராஜா வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் உதவிச் செயலாளராகக் கடமையாற்றி வந்தார்.

இதற்கு முன்னதாக பருத்தித்துறை ஹாட்லி கல்லூரியின் அதிபராக ஒன்பது ஆண்டுகள் கடமை யாற்றியவர் என்பதும் குறிப்பிடத் தக்கது.



யாழ்.வலயத்தின் கல்விப் பணிப் பாளராக இருந்த செ.உதயகுமார் வடக்கு மாகாணக் கல்விப் பணிப் பாளராகப் பதவி உயர்வு பெற்றதை அடுத்து அவரின் இடத்திற்கு தெய்வேந்திரராஜா நியமிக்கப்பட்டுள் ளார். (ந)

## நாட்டை விட்டு வெளியேற டிரான் அலஸ் எம்.பிக்கு தடை

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் டிரான அலஸ் நாட்டை விட்டு வெளியேறத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ராதா என்ற நிறுவனத்தின் பணிப் பாளர் சபை உறுப்பினர்களில் ஒருவரான டிரான் அலஸ் உள்ளிட்ட ஐந்து பணிப்பாளர்களுக்கு இவ்வாறு நாட்டை விட்டு வெளியேறத் தடை விதிக்கப்பட டுள்ளது.

கோட்டே நீதிமன்ற நீதவானால் இவ்வாறு தடை விதிக்கப்பட்டுள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட வீடுகளை புனரமைப்பது தொடர்பிலான பணிகளில் இந்த நிறுவனம் ஈடுபட்டிருந்ததாகவும் அதில் பாரிய மோசடிகள் இடம்பெற்று உள்ளதாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

டிரான் அலஸ் தலைமை யி ல

இந்த ராதா நிறுவனம் 2006-ம் ஆண்டு நிறுவப்பட்டது.

சுனாமியினால் பாதிக்கப்பட்ட மகளுக்கு வீடுகளை அமைத்துக் கொடுக்கும் நோக்கில் உருவாக்கப் பட்ட நிறுவனம், திறைசேரியிட மிருந்து 645 மில்லியன் பணம் பெற்றுக்கொண்டுள்ளது. இதற்கு ஜனாதிபதி செயலகத்தின் அனுமதியும் கிடைக்கப் பெற்றிருந்தது என தெரியவருகிறது. (செ-11)


### தவறவிடப்பட்டுள்ளது

E tel I2 கையடக்கத் தொலைபேசி 06.03.2015 அன்று யாழ்ப்பாண நகரப் பகுதியில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (033)

தொடர்புகளுக்கு :- 0770529405


### பிரத்தியேக வகுப்பு

தரம் 9,10,11,O/L Day Class நெல்லியடி, பருத்தித்துறை பிரதேசத்தில் உள்ள மாணவர்கள் கணிதம், விஞ்ஞானம் பாடங்களில் அதிக விசேட புள்ளிகளைப் பெற்றிட குழுவாக/தனியாக கல்வி கற்றிட அழையுங்கள். (C-610)

R.S.Ruban (B.Sc) :- 0779688671


## வடக்கு மாகாண சபையின் புதிய உறுப்பினராக நட்ராஜ் நியமனம்

வட மாகாண சபையின் முல்லைத்தீவு மாவட்ட உறுப்பினர் திருமதி மேரி கமலா குணசீலனுக்கு பதிலாக புதிய உறுப்பினராக எம்.பி. நட்ராஜ் நியமிக்கப்பட்டுள்ளார். வட மாகாண சபையின் மாதாந்த அமர்வு கைதடியில் அமைந்துள்ள வட மாகாண சபையில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற போது, புதிய உறுப்பினர் சபைக்கு வருகை தந்து சபை அமர்வுகளில் பங்கேற்றார்.



சுழற்சிமுறையில் வடமாகாண சபை உறுப்பினர் பதவியை வகிப்பதாக வடமாகாண சபை உறுப்பினர்கள் பதவியேற்ற போது, மேரிகமலா குணசீலன் உறுதிமொழி வழங்கியிருந்தார். அதனடிப்படையில் ஒரு வருடம் நிறை வடைந்ததை யடுத்து அவருடைய உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்தார்.

அவரது இடத்துக்கு முன்னாள் வவுனியா கோட்டக் கல்விப் பணிப் பாளர் நட்ராஜ் நியமிக்கப் பட்டுள்ளார். ஈ.பி.ஆர். எல்.எப் கட்சியை சேர்ந்த இவர் கடந்த வடமாகாண சபை தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாக போட்டியிட்டமை குறிப்பிடத்தக்கது. (செ-11)


### ANNAMALAI UNIVERSITY

DISTANCE EDUCATION UNIT

Head Office :- 12 1/1 Sebastian Mawatha, Wattala
Eastern Office :- 17 Central Road Batticaloa
Northern Office :- ஆதவன் மண்டபம், ஆவரங்கால்

இசை, நடன துறையில் சிறுவர்களுக்கான Certificate உடன் அரங்கேற்ற நிகழ்வுக்கான Courses இசை, நடனம், கலை. வர்த்தகம், கணிதம். விஞ்ஞானம், சட்டம், IT ஆகிய துறைகளில் பட்டப்படிப்பு, முதுமாணி, கலாநிதி (M Phil, PHD)

(035)

பதிவுகள் ஆரம்பம்

T.P :- 0768668353 / 0766357242

### நீங்கள் பாடும் திறமை உள்ளவரா?

பிரபல இசைக்குழுவில் பாடுவதற்கு நீங்கள் ஒரு பாடகராக, பாடகியாக இருந்தால் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள். (C-612)

தொடர்புகளுக்கு :- 0776320962

### வாழ்க்கையில் வெறுப்பா?

பிரச்சினை எதுவானாலும், எம்முடன் தொலைபேசியில் அல்லது நேரில் பேசுங்கள். இரகசியங்களைப் பேணுவோம்.

காலை 9.00 – பி.ப 1.00

மதச்சார்பற்றது

(C-978)

கைகொடுக்கும் நண்பர்கள்

104, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

021 222 8117, 0779008776

### அக்குபஞ்சர் சிகிச்சை நிலையம்

அக்குபஞ்சர் வைத்திய முறையில் சகல ரோகங்களுக்கும், நாட்பட்ட, கைவிடப்பட்ட ரோகங்களுக்கும் சிகிச்சையுடன், ஆலோசனைகளும் வழங்கப்படும்.

திங்கள்–புதன்–வெள்ளிக்கிழமைகளில் முன் பதிவுடன் சிகிச்சை பெறலாம்

சித்தாயுர் வேத அக்குபஞ்சர் நிலையம்

பருத்தித்துறை வீதி, புத்தூர்

தொடர்புகளுக்கு:– நவீன வைத்திய நிலையம், அச்சுவேலி. (9997)

Dr.T.Puviraasan MD.M.A D.I.M & S


### அறிவித்தல்

மானிப்பாய் கிராம உப அலுவலகம், ஆனைக்கோட்டை
வட்டாரம் :– 04
ஆதன இலக்கம் : 10/16
எச்சாட்டி வைரவர் கோவில் வீதி

வட்டாரம் 04 எச்சாட்டி வைரவர் கோவில் வீதி ஆதன இலக்கம் 10/16 இல் அமைந்துள்ள (உறுதிப்படி வட மாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்குப்பகுதி மானிப்பாய் கோவில்பற்று சுதுமலை இறை " துன்னலியன் " என்னும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு 01 குளி 09 கொண்ட இவ்வாதனமானது சுதுமலை தெற்கை சேர்ந்த சின்னப்பு கைம்பெண் சௌந்தரம் ஆகிய இவர்களால் நன்கொடை உறுதி மூலம் சுதுமலையைச்சேர்ந்த சின்னதம்பி நாகராசா குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிஸ் திரு.மா.தியாகராசா முகதாவில் நிறைவேறிய 1985 ஆம் இலக்க 05.12.1994 ஆம் திகதிய நன்கொடை உறுதி மூலம் குறித்த ஆதனமானது தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். " துன்னலியன்" நிலப்பரப்பு 01 குளி 09 கொண்ட இவ்வாதத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாட்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். அவ்வாறு யாராவது எவ்வுரிமையும் கோரப்படாதவிடத்து இவ்வாதனம் சின்னத்தம்பி நாகராசா என்பவர் பெயருக்கு மேற் குறித்த ஆதனத்தினை பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

தவிசாளர்
வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,
மானிப்பாய். (034)


### பணிநிலை வெற்றிடங்கள்

ஜெயந்திநகர், கிளிநொச்சியில் அமைந்துள்ள மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லத்தில் கீழ்வரும் ஆசிரியர்களுக்கான பணிநிலை வெற்றிடங்கள் காணப்படுகின்றன. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்படி பாடங்களில் பட்டத்தினைப் பூர்த்தி செய்த ஆண், பெண் பட்டதாரிகள் இருபாலாரும் தங்கள் விண்ணப்பங்களை 17.04.2015 க்கு முன்பாக தபால் மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ எமக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். பட்டதாரி அல்லாதோர் விண்ணப்பிக்க வேண்டியதில்லை.

**பாடங்களின் விபரம்**

**கணிதம், விஞ்ஞானம், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (ICT)**

குறிப்பு :-

- இல்லத்தில் தங்கியிருந்து கல்வி பயிற்றுவித்தல் வேண்டும்
- உணவு, தங்குமிடம், பராமரிப்பு செலவு இல்லத்தினால் இலவசமாக வழங்கப்படும்.
- சம்பளம் மாதம் ரூபாய் 18000/- க்கு குறையாது வழங்கப்படும்.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் எந்தப்பதவிக்கான விண்ணப்பம் என்பதைத் தவறாது குறிப்பிட்டு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அனுப்பி வைக்க வேண்டிய முகவரி
தி.இராசநாயகம, தலைவர், மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லம்
ஜெயந்தி நகர், கிளிநொச்சி.
தொலைபேசி இல. :- 0770604950, 0214923118
மின்னஞ்சல் முகவரி :- rasa46@yahoo.com
(C-611)



மிக குறுகிய காலத்தில் யாழ் மக்களின் நன் மதிப்பைப் பெற்ற ஷைலோ ஐஸ் கிறீம் நிறுவனத்தினர் ஆகிய நாம் சுத்தமான, சுவையான, ஆரோக்கியமான, இயற்கையான ஊட்டங்கள் நிறைந்த உயர் தொழில்நுட்ப முறையில் தயாரிக்கப்படும் SYLO ICE CREAM விற்பனை நிலையத்தை யாழ் நகர் பஸ் நிலையம் முன்புறம் ஆஸ்பத்திரி வீதியில் திறந்துள்ளோம் என்பதை அனைவருக்கும் அறியத் தருவதோடு அன்புடன் அழைக்கின்றோம்.

ஷைலோ ஐஸ் கிறீம்

Sylo Natural Ice Cream

இல. 442, ஆஸ்பத்திரி வீதி, (சைக்கிள் பார்க் எதிரில்), யாழ்ப்பாணம்.

T.P :- 021 221 7885

(9988)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழைபோட்டு கணவாய் பிடித்த 7 மீனவர்கள் நேற்றுக் கைது

(கரணவாய்)

**யாழ். வடமராட்சி கிழக்குக் கடற்பகுதியில் குழை மூலம் கணவாய் பிடித்துக் கொண்டிருந்த 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.**

நேற்றுப் பிற்பகல் 1.30 மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது,


மரக்கொப்புகளை கடலில் போட்டு அவற்றின் உதவியுடன் மீன்பிடியில் ஈடுபடுவது தடை செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் நேற்றையதினம் மூன்று படகுகளில் இவ்வாறு கணவாய் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த 7 பேர் வடமராட்சி கிழக்கு மீனவர் சங்கங்களின் சமாச அங்கத்தவர்கள், முனை கடற்றொழிலாளர் சங்க உறுப்பினர்கள், நீர்வள உத்தியோகத்தர்கள் மற்றும் கடற்படையினர்களின் உதவியுடன் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட இவர்கள் பருத்தித்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன.

மேலும் இவ்வாறான மீன்பிடி தடைசெய்யப்பட்டுள்ளதால் அதனை கைவிடுமாறும் இல்லாவிட்டால் அதனைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் தொடரும் எனவும் வடமராட்சி கிழக்கு மீனவர் சங்கங்களின் சமாசத் தலைவர் தெரிவித்துள்ளார். (இ-3-60)

## ஐ.நா.பிரதி பொதுச்செயலாளர் நிதியமைச்சர் ரவியுடன் சந்திப்பு



6 நாட்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்துள்ள ஆசிய அபிவிருத்திக்கான ஐ.நா. பிரதி பொதுச் செயலாளர் ஹவுலியங்ஷ்விற்கும் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவிற்கும் இடையிலான சந்திப்பொன்று நேறறு முன்தினம் காலை இடம்பெற்றது.

இச்சந்திப்பின் போது ஐ.நாவுடனான உறவை மேம்படுத்த மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள்,முன்னேறுதல் மற்றும் வாய்ப்புக்களை ஏற்படுத்தல் என்பன தொடர்பிலும் அரசாங்கத்தின் பங்களிப்பு தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது. (இ-5)

### செயற்றிறன் அரங்கின் தனி நடிப்பு

## இறுதிச் சுற்றுப் போட்டி சனி, ஞாயிறு தினங்களில்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபையும் செயற்றிறன் அரங்க இயக்கமும் இணைந்து நடத்தும் தனிநடிப்பு போட்டியின் இறுதிச் சுற்றுப் போட்டி எதிர் வரும் 11 ஆம் 12ஆம் திகதிகளில் மாலை 6.30 மணிக்கு யாழ். மாநகர சபை முன்பாகச் செல்லும் நல்லூர் குறுக்கு வீதியில் அமைந்துள்ள செயற்றிறன் அரங்க இயக்கத்தின் திறந்தவெளி அரங்கில் நடைபெறவுள்ளது.

சிறுவர்களுக்கான தனிநடிப்புப் போட்டியில் முதலிடம் மற்றும் இரண்டாமிடத்தைப் பெற்ற யாழ். உடுப்பிட்டி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த செல்வி சசிகுமார் தனுவின் கொம்பறை, நசியும் பிஞ்சுகள் ஆகிய நாடகங்களுக்கும் மூன்றாமிடத்தைப் பெற்ற கோண்டாவில் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த செல்வன் சி.உதயச்சந்திரன் கோமாளிகளின் வலிகள் ஆகிய நாடகத்திற்கும் சான்றிதழ் வழங்கப்படவுள்ளன.

இரண்டாம் சுற்றில் வெற்றி பெற்ற மேற்படி நாடகங்களும் மேலும் 9 நாடகங்களும் இறுதிச் சுற்றுக்குத் தெரிவாகியுள்ளன.

மேலும் திறந்த போட்டியில் முதலாமிடத்தைப் பெற்ற சாவகச்சேரி கச்சாயைச் சேர்ந்த சி.சுமணனின் தாகம் எனும் நாடகமும் இரண்டாமிடத்தைப் பெற்ற அல்லைப்பிட்டியைச் சேர்ந்த செல்வி நிதர்சனாவின் வலிகள் எனும் நாடகமும் மூன்றாம் இடத்தைப் பெற்ற குருநகரைச் சேர்ந்த வி.ஜோன் கலிஸ்ராஸின் ஒரு கூத்தனின் குறிப்பேடு எனும் நாடகமும் சான்றிதழ்களைப் பெறவுள்ளன.

இந்த மூன்று நாடகங்களுடன் மேலும் தெரிவு செய்யப்பட்ட ஒன்பது நாடகங்கள் இறுதிச் சுற்றுக்கு தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3-23)

## விசேட போக்குவரத்து சேவைகள்


(கொழும்பு)

பண்டிகைக் காலத்தில் ஊர்களுக்குச் செல்லும் மக்களுக்காக நாளை மறுதினம் 10 ஆம் திகதியிலிருந்து விசேட பேருந்து மற்றும் தொடருந்து சேவைகள் இடம்பெறவுள்ளன.

பயணிகள் அசௌகரியத்திற்கு உள்ளாகாமல் இருக்கும் வகையில் இவ்வாறு மேலதிக பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக இலங்கை பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

இதனிடையே நாளை முதல் விசேட பேருந்து சேவைகள் இடம்பெறும் என்று இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவர் ரமால் சிறிவர்தன தெரிவித்தார்.

தொடருந்து திணைக்களமும் நாளை மறுதினம் 10 திகதி முதல் விசேட தொடருந்து சேவைகளை ஆரம்பிக்க வுள்ளதாக தொடருந்து போக்குவரத்து அதிகாரி எல். ஏ.ஆர். ரத்நாயக்க தெரிவித்தர். (இ-5)




## அபிவிருத்தி நிலையம் நடத்தும் கண்காட்சியும் விற்பனையும்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் வலிகாமம்மேற்கு மகளிர் அபிவிருத்தி நிலையம் நடத்தும் கண்காட்சியும் விற்பனையும் நாளை வியாழக்கிழமை காலை 9.30 மணியளவில் சுழிபுரம் மேற்கு பெரியதம்பிரான் கோவிலடியில் அமைந்துள்ள பாரதி கலைமன்ற பாரதி முன்பள்ளி வளாகத்தில் சங்கானை வலிகாமம் மேற்கு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆ.கோகுலன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வலிகாமம் மேற்கு பிரதேச செயலாளர் அ.சோதிநாதனும் வடக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர் ஜே.ஜே.சி. பெலிசியனும் சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் மேற்கு உதவி பிரதேச செயலாளர் கே.செந்தூரனும் யாழ்.கச்சேரி மாவட்டஉத்தியோகத்தர் இ.பரராஜசேகரமும் கௌரவ விருந்தினர்களாக சுழிபுரம் மேற்கு கிராம உத்தியோகத்தர் எஸ். ஜீவராசா, சுழிபுரம் மத்தி கிராம உத்தியோகத்தர் ம.ஸ்ரீ முருகவேள் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

## இராசி பலன்

08.04.2015
(பங்குனி 25, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 6.07 மணிக்கு
சதுர்த்தி முன்னிரவு 9.08 மணிவரை
அனுசம் பின்னிரவு 4.55 மணிவரை
இராகுகாலம் 12.07-1.37 மணிவரை
சுபநேரம் 4.37-6.07 மணிவரை
சங்கடகர சதுர்த்தி விரதம்
அமிர்த சித்தம்

வளவன்

**மேடம்:** குழப்பங்கள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், மறதியால் சில தொல்லைகளுக்கு ஆட்பட நேரிடலாம், கொடுக்கல்-வாங்கல்களில் கவனம் தேவை.

**இடபம்:** சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், காரிய அனுகூலமுண்டு.

**மிதுனம்:** வீட்டை பராமரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், செய்தொழில் மேன்மையுண்டு, ஆரோக்கியம் சீராகும், கௌரவமான நாள்.

**கடகம்:** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், கல்வி நலன் கருதி எடுத்த முயற்சிகள் வெற்றி தரும், விருந்தினர் வருகையுண்டு, சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**சிம்மம்:** சிந்தித்து செயற்பட்டு சிறப்புகளைக் காண வேண்டிய நாள், வாகன யோகத்தால் வளம் காண்பீர்கள், தாய்வழி உறவில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம்.

**கன்னி:** எடுத்த செயலை எளிதில் செய்து முடிப்பீர்கள், நேற்றைய பிரச்சினையொன்று இன்று நல்ல முடிவுக்கு வரும், உடன் பிறப்புக்கள் வழியில் உதவிகள் கிடைக்கும் நாள்.

**துலாம்:** பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கப் பெறுவீர்கள், உங்கள் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும், எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், வாக்கு மேன்மையுண்டு.

**விருச்சிகம்:** தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், குடும்ப உறுப்பினரை அனுசரித்துச் செல்வது நல்லது, பயணத்தால் பலன் கிடைக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**தனுசு:** நண்பர்கள் வழியில் சுப விரயங்கள் ஏற்படலாம், சயன சுகக் குறைவான நாள், திட்டமிட்ட பயணமொன்றில் திடீர் மாற்றங்கள் ஏற்படலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மகரம்:** உறவினர் வருகையால் குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பொதுவாழ்வில் புகழ்கூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கும்பம்:** புதிய தகவல்கள் வந்து சேரலாம், நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு.

**மீனம்:** விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், சுணங்கிய காரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெறலாம், தொழில் ரீதியான பயணங்கள் அனுகூலம் தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

## ஆன்மீகம் 175

## பயத்தை எதிர்கொள்ளல்


அவன் பதிலளித்தான். தயவுசெய்து என்னை இப்பொழுது அங்கே பார்க் கச் சொல்லாதீர்கள். அது அங்கே இருக்கும் என்பதுதான் என்னுடைய ஒரே நம்பிக்கை.

(சிரிப்பு)

நாம் பார்ப்பதற்கு மிகவும் பயப்படுகிறோம்! நமது பயங்களைப் பார்ப்பதற்கே மிகவும் பயப்படுகிறோம். அதுதான் முழுப் பிரச்சினையும்; அதனால் ஆறுதல் பிரதேசங்களில் நம்மையே நாம் ஏமாற்றிக் கொண்டு தொடர்ந்து சென்று கொண்டிருக்கிறோம்.

பார்ப்பதற்கு ஒருபோதும் அஞ்சாதீர்கள். பார்க்க பயப்படுவதால் இன்னும் அதிக பயத்தையே உருவாக்குகிறீர்கள். ஏனெனில், அது உங்களுக்கு மேலும் தெரியாததாகிவிடுகிறது.

வெறுமனே பயத்தைப் பார்த்து, நீங்கள் பயத்தில் இருக்கிறீர்கள் என்பதை ஏற்றுக்கொள்ளுங்கள். பயம் தானாகவே கரைந்துபோய் விடும். ஒவ்வொன்றாக உங்கள் பயங்களை விழிப்புணர்வுடன் எதிர்கொள்ள ஆரம்பித்தீர்களானால் ஒரு காலகட்டத்தில் அறிவால் உங்கள் பயம் அகற்றப்பட்டு உங்கள் பய உணர்ச்சி கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து



விடும்.

எப்படியாயினும் தெரியாதவற்றைப் பற்றிய பயத்தைப் பற்றிப் பேசும்பொழுது ஆவிகள் மற்றும் பேய்களைப் பற்றிய பயம் மிகவும் பொதுவானது. அவைகளைப் பற்றி பயப்பட வேண்டிய தேவையில்லை.... பேய்களும் ஆவிகளும் நம்மை விட மிகவும் சக்தி குறைந்தவை என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். நாமே அவைகளுக்கு அவற்றிடம் இருப்பதை விட மிக அதிகமாக சக்தியைக் கொடுத்து அவைகள் நமது பயங்களைக் கட்டுப்படுத்துமாறு செய்து விடுகிறோம். அங்குதான் பிரச்சினை ஆரம்பமாகிறது.

ஆவிகள், பேய்கள் ஆகியவை பற்றிய விடயங்களில் அதிக கவனம் செலுத்த வேண்டாம். அதனால் எந்தப் பயனும் இல்லை. நீங்கள் உங்களுக்குள் நன்றாக மையம் கொண்டிருந்தாலே உங்களைப் பற்றித் தெளிவுடன் இருந்தாலே போதுமானது. தானாகவே எதுவும் உங்களைத் தொட முடியாது; உங்களிடமும் அவற்றைப் பற்றிய அச்சம் இருக்காது.

இருளைப் பற்றிய பயமும் தெரியாதவற்றைப் பற்றிய பயம்தான். இருளைப் பற்றிய பயம் இறப்பைப் பற்றிய பயத்தைத் தவிர வேறல்ல.

எண்ணிப் பாருங்கள்..... உங்கள் வீட்டிலுள்ள, பகல் நேரத்தில் நடந்து செல்லும் அதே தோட்டத்தில், நீங்கள் இரவில் நடந்து செல்வீர்களா? மாட்டீர்கள்!

நீங்கள் பயப்படுகிறீர்கள்! ஏன்? உங்களுக்கு அதன் எல்லைகள் நன்றாகவே தெரியும். இல்லையா? பிறகு ஏன் பயப்படுகிறீர்கள்?

நீங்கள் தோட்டத்தைக் கண்டு பயப்படவில்லை; இருளைக் கண்டு பயப்படுகிறீர்கள். *(தொடரும்)*

பரமஹம்ஸ சுவாமி



# அதிசய உலகம்

### 252 தளம், 1 கி.மீ உயரத்தில் சவுதியில் கிங்டம் டவர்....


சவுதி அரேபியாவில் 1 கிலோமீட்டர் உயரமுள்ள கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. அந்த கட்டடத்தில் மொத்தம் 252 தளங்கள் அமைக்கப்படுகிறது.

சவுதி அரேபியாவில் உள்ள ஜெத்தா நகரில் **கிங்டம்** டவர என்ற பெயரில் 1 கிலோமீட்டர் உயரமுள்ள அடுக்குமாடி கட்டடம் கட்டப்பட்டு வருகிறது.

கடந்த 2008 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இந்த கட்டடத்தின் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. கிங்டம் டவரில் மொத்தம் 252 தளங்கள் அமைக்கப்படுகின்றன.

முதலில் 1.6 கிலோமீட்டர் உயரத்தில் கட்ட திட்டமிடப்பட்டது. ஆனால் அந்த பகுதியில் அவ்வளவு உயரமான கட்டடம் கட்ட வசதி இல்லாததால் 1 கிலோமீட்டருடன் நிறுத்திக் கொண்டுள்ளனர்.

கிங்டம் டவர் கட்டிடத்தை துபாயில் உள்ள உலகின் மிக உயரமான கட்டடமான புர்ஜ் கலிபாவை வடிவமைத்த அமெரிக்காவைச் சேர்ந்த ஏட்ரியன் ஸ்மித் தான் வடிவமைத்துள்ளார்.



புர்ஜ் கலிபாவில் மொத்தம் 163 தளங்கள் உள்ளன. கிங்டம் டவரில் அதை விட கூடுதலாக 89 தளங்கள் அமைக்கப்படுகின்றது. ஏட்ரியன் ஸ்மித் மற்றும் கார்டன் கில் ஆர்கிடெக்ட்ஸ் நிறுவனங்கள இணைந்து கட்டும் கிங்டம் டவரின் கட்டுமானப் பணிகள் வரும் 2018ஆம் ஆண்டு நிறைவு பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கிங்டம் டவரில் அலுவலகங்களுக்கு 7 மாடிகள், ஹோட்டல்களுக்கு 7 மாடிகள், சர்வீஸ் அபார்ட்மென்ட்களுக்கு 11 மாடிகள் தற்போது ஒதுக்கப்பட்டுள்ளது. 252 தளங்கள் இருந்தாலும் அதில் 167 தளங்கள் மட்டுமே பயன்படுத்தப்படக்கூடும் என்று கூறப்படுகிறது. டவரில் மிகப்பெரிய தளம் எது என்றால் அது கார் நிறுத்தும் தளம்தான். அங்கு ஒரே [illegible] 200 கார்கள் நிறுத்தும் வசதியுள்ளது.



# சமைப்போம் சுவைப்போம்

## கரட் சாலட்

தே.பொருட்கள்:

துருவிய கரட்-1 கிலோ

முளைக்கட்டிய

பச்சைப்பயறு -1/4 கிலோ

தேங்காய்த்

துருவல் - 1 கப்

எலுமிச்சம்பழம் - 1ள

நறுக்கிய குடை மிளகாய்

- 50 கிராம்



நறுக்கிய கறிவேப்பிலை - 1கட்டு, உப்பு, மிளகுப்பொடி - தேவைக்கு ஏற்ப

செய்முறை:

திருகிய கரட், முளைகட்டிய பச்சைப்பயறு, தேங்காய்த் துருவல், நறுக்கிய குடை மிளகாய், கறிவேப்பிலை இவற்றை ஒன்றாக சேர்த்து கலக்கவும்.

அதன் மீது எலுமிச்சம்பழத்தை சாறு பிழிந்து சேர்த்து, உப்பு, மிளகுப்பொடி கலந்து மீண்டும் கலக்கவும்.

ஆரோக்கிய குளிர்ச்சியான உணவு ரெடி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணாவை விசாரணை செய்யுமாறு உலமா கட்சித் தலைவர் கோரிக்கை!

(கொழும்பு)

**முன்னாள் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரனை விசாரணை செய்யுமாறு இலங்கை உலமா கட்சி தலைவர் முபாரக் அப்துல் மஜீத், காணாமற போனோரை கண்டறியும் ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**



கல்முனையில் நேற்று நடைபெற்ற காணாமற்போனோரை கண்டறியும் ஜனாதிபதி ஆணைக் குழுவின் முன் உலமா கட்சித் தலைவர் மௌலவி முபாரக் அப் துல் மஜீத் சாட்சியமளித்தார்.

இதன்போது 1990ஆம் ஆண்டு புலிகளால் கைது செய்யப்பட்டு காணாமற்போன தனது சகோதரர் அக்ரம் மற்றும் தந்தை சம்பந்த மாகவும் முன்னாள் அமைச்சர் முரளிதரனிடம் விசாரிக்கப்பட வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார்.

காணாமற் போனோரை கண் டறியும் ஜனாதிபதி ஆணைக்குழு வின் அம்பாறை மாவட்டத்திற்கான விசாரணைகள் கடந்த இரு நாட் களாக கல்முனையில் நடைபெற்று வருகிறது. ஆணைக்குழுவின் தலை வர் மெக்ஸ்வல் பராக்கிரம பரணகம தலைமையில்நிகழ்வுநடைபெற்றுவரு கின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## முற்றோதல் ஞானவேள்வி பிற்போடப்பட்டுள்ளது

நல்லூர் ஸ்ரீ கைலாசப்பிள்ளை யார் தேவஸ்தானத்தில் எதிர்வரும் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம் பமாகி 48 தினங்கள் நடை பெறவிரு ந்த பன்னிரு திருமுறை முற்றோ தல் ஞானவேள்வி ஆலய ஆதீன கர்த்தா வும் பிரதம சிவாச் சாரியாருமானமணி க்குருக்கள் மறைந்து தேகவி யோகமா னமையால் முற்றோதல் ஞான வேள்வி பிற்போடப்பட்டுள்ளது. ஞானவேள்வி ஆரம்பமாகும் திகதி பின்னர் அறிவி க்க ப்படவுள்ளதாக தேவஸ்தான ஓது வார் மூர்த்திகளும் அகில இலங்கைதிருமுறை மன்ற அமைப்பாளருமான சி.கிருஸ் ணமூர்த்தி அறிவித்துள்ளார். (இ-5)

# மரக்கறி செய்கையை ஊக்குவிக்க பயனாளிகளுக்கு நாற்றுக்கள்

### மன்னார் மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் தெரிவிப்பு

(மன்னார்)

புதிய அரசின் 100 நாட்கள் வேலைத்திட்டத்தின் கீழ் மன்னார் விவசாயத் திணைக்களமும் கமநல அபிவிருத்திதிணைக்களமும் இணை ந்து சாதகம் அற்ற காலங்களில் மரக்கறி பயிர்ச்செய்கையை ஊக் குவிக்கும் முகமாக புதிய வீட்டுத் தோட்டங்கள் சாதித்தல் எனும் திட்டத் தின் கீழ் மன்னார் மாவட்டத்தில் 3ஆயிரத்து 600 வீட்டுத்தோட்டங் கள் அமைக்கப்படவுள்ளதாக மன் னார் மாவட்ட பிரதி மாகாண விவ சாயப் பணிப்பாளர் பொ.அற்புதச் சந்திரன் தெரிவித்துள்ளார்.

இதற்கான சம்பிரதாயபூர்வ நிக ழ்வு இன்று புதன்கிழமை பி.ப 3மணிக்கு மன்னார் தீவின் உப்பு க்குளம் வடக்கு கிராம அலுவலர் பிரிவிலுள்ள மீளெழுச்சி கட்டட பயி ற்சி நிலையத்தில் நடைபெறவுள் ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தி னராக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் எம்.வை.எஸ்.தேசப்பிரிய கலந்து கொண்டு சிறப்பிக்கவுள் ளார்.

வீட்டுத்தோட்டத்திற்கான மரக் கறி நாற்றுக்களை தற்போது மன் னார் விவசாயத் திணைக்களத்தின ரும் கமநல அபிவிருத்தி திணைக் களத்தினரும் இணைந்து மன்னார் மாவட்டத்தில் உள்ள பயனாளிகளு க்கு வழங்கி வருகின்றனர். (2)

# ஜனாதிபதியின் நிலைப்பாட்டினை உடனடியாக வெளியிட வேண்டும்

### ஜே.வி.பி.வலியுறுத்து

19ஆவது அரசியல் அமைப்பு சீர் திருத்தம் தொடர்பில் ஜனாதிப தியின் நிலைப்பாட்டை உடன் நாட்டுக்கு அறிவிக்க வேண்டும் என்று ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். அக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று முற்பகல் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பின் போதே இவ்வாறு இதனை தெரிவித்தார்.

19ஆவது அரசியல் அமைப்பு சீர்திருத்தம் தொடர்பில் ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு தமது கருத்தை தெரியப்படுத்த வேண்டும். இந்த விடயம் தொடர்பில் மற்றவர்கள் கூறும் கதைகளை ஏற்க முடியாது.

நாட்டின் தலைவர் என்ற வகை யில் இது தொடர்பில் அவர் நாட்டு மக்களுக்கு அறிவிக்க வேண்டியது கடமையாக உள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.(இ-5)

# ஆசிரியையின் கணவனின் மோட்டார் சைக்கிளில் மோதுண்டு மட்டக்களப்பில் மாணவன் உயிரிழப்பு


மட்டக்களப்பு, காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள கிரான்குளம் பிரசேத்தில் நேற்று காலை பாடசாலை மாணவன் ஒருவனை மோட்டார் சைக்கிள் மோதியதில் மாணவன் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளதாக காத் தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

கிரான்குளம் சரஸ்வதி வித்தியாலயத்தில் 2ஆம் தரத்தில் கல்வி கற்கும் கே.மதுதர்சன் (8 வயது) எனும் மாணவன் காலை தனது வீட்டிலிருந்து பாடசாலைக்கு சென்று கொண்டி ருந்த போது குறித்த பாடசாலையில் கட மையாற்றும் ஆசிரியை ஒருவரை அவரது கணவர் இறக்கி விட்டு மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது குறித்த மாண வன் மீது மோட்டார் சைக்கிள் அடித்துள்ளது.

இதனால் படுகாயமடைந்த மாணவன் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளார். சடலம் தற்போது ஆரையம்பதி மாவட்ட வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணையை காத்தான குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(இ-5)

# பனை அபிவிருத்திச் சபையின் புதியதலைவர் நேற்று நியமனம்



பனை அபிவிருத்திச் சபையின் புதிய தலைவராக சோமசுந்தரம் கோகுலதாசன் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

மீள்குடியேற்றம், புனர்நிர்மாணம் மற் றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர் டி.எம். சுவாமிநாதனால் இந நியமனக் கடி தம் நேற்று வழங்கிவைக்கப்பட்டுள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விவசாய விஞ்ஞானப் பட்டதாரியான இவர் 1981 தொடக்கம் 2003 வரையில் பனை அபிவிருத்திச் சபையில் அபிவிருத்தி உத்தி யோகத்தராகவும், தலைமை நிர்வாக அலு வலகம் மற்றும் பிராந்திய அலுவலக பொது முகாமையாளராகவும் கடமையாற்றியுள் ளதோடு 2011 தொடக்கம் 2014 வரையான காலப்பகுதியில் ஐரோப்பிய ஒன்றிய வேலைத்திட்டத்தின் கிளிநொச்சி, முல் லைத்தீவுமாவட்டங்களின் நிகழ்ச்சி இணைப் பாளராகவும் சேவையாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 45.75 சூரி செவ் 9 இல்<br>உயரம்: 5’6"<br>தகைம்ம/தொழில்: A/L/ தனியார் தொழில்<br>தொ.இ: B/4378 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 7.75<br>தகைமை/தொழில்: A/L/<br>தொ.இ: G/829 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 15.25<br>உயரம்: 5’7"<br>தகைமை/தொழில்: A/L/Telecom<br>தொ.இ: B/4379 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 27.25<br>உயரம்: 5’2"<br>தகைமை/தொழில்: BA<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/830 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 25.5<br>உயரம்: 5’7"<br>தகைமை/தொழில்: AAT/லண்டன்PR<br>தொ.இ: B/4380 | பிறப்பு: 1973 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 02<br>உயரம்: 5’<br>தகைமை/தொழில்: A/L ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம் விரும்பத்தக்கது<br>தொ.இ: G/838 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 53<br>உயரம்: 5’10"<br>தகைமை/தொழில்: O/L/ தனியார்<br>தொ.இ: B/4381 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 16.25 செவ்.2இல்<br>உயரம்: 5’<br>தகைமை/தொழில்: A/L/ தனியார்<br>தொ.இ: G/841 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
...யாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தினால் அமைக்கப்பட்ட தொழிற்சாலைகள் திறப்புவிழா

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தினால் (யு.என்.டி.பி) நோர்வே அரசின் நிதிப் பங்களிப்பில் தம்பாட்டிக் கிராமிய கடற்றொழிலாளர் சங்கத்திற்காக அமைக்கப்பட்ட நண்டு பதனிடல் தொழிற்சாலையானது இன்று புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக இலங்கை மற்றும் மாலைதீவிற்கான நோர்வே தூதுவர் கிரற் லொஹெறன் மற்றும் ஐக்கிய நாடுகள் உதவிச் செயலாளர் நாயகம் ஹோலி யாங் சூ ஆகியோர் கலந்து கொள்வதுடன் சிறப்பு விருந்தினர்களாக ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி சுபினே நண்டி, மாகாண அமைச்சர்களான பொ.ஐங்கரநேசன் மற்றும் பா.டெனீஸ்வரன், யாழ் .மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். 21.75 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள இத் தொழிற்சாலையின் ஊடாக நூறுக்கு மேற்பட்ட இளைஞர் ,யுவதிகள் வேலைவாய்ப்புப் பெறுவதுடன் ஊர்காவற்றுறைப் பிரதேசத்தின் கடற்றொழிலாளர்களின் வருமான அதிகரிப்பிற்கும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தொடர்ந்து ஊர்காவற்றுறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்திற்கு விஜயம் செய்யும் இக் குழுவினர் அங்கு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தினால் அமைக்கப்பட்டுள்ள பனை வெல்ல உற்பத்தித் தொழிற்சாலை கையளிப்பு நிகழ்விலும் கலந்து கொள்ள்வுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)




# யாழ்ப்பாணம் நிலத்தடிநீர் மாசடைவு தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்கக் கோரி மகஜர்

### முதலமைச்சர்,ஆளுநர்,அரச அதிபர் ஆகியோரிடம் நேற்று கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

**கழிவு எண்ணெயால் மாசடைந்துள்ள யாழ்ப்பாணம் சுன்னாகம் மற்றும் அதனையண்டிய பிரதேசங்களின் நிலத்தடி நீர் மாசடைவு தொடர்பில் உடன் நடவடிக்கை எடுக்கக் கோரி நேற்றைய தினம் யாழில் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் முடிவில் வடக்கு மாகாண முதலமைச்சர், ஆளுநர், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ஆகியோருக்கு மகஜர் கையளிக்கப்பட்டுள்ளது.**

அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, கடந்த 5 வருடத்திற்கு மேலாக வெளிவராமல் மூடி மறைக்கப்பட்டிருந்த, நீரில் ஒயில் மற்றும் கிறீஸ் கலந்த பிரச்சினையை வெளிக்கொண்டுவந்து பொறுப்புடன் செயற்பட்டுவரும் மக்கள் அமைப்பு என்ற அடிப்படையில், இன்று வரை மக்களுக்கு அடிப்படை நம்பிக்கையைத்தானும் ஏற்படுத்தும் எந்தவிதமான ஆக்கபூர்வமான நடவடிக்கை இதுவரை எடுக்கப்படவில்லை என்பதால் விசனமடைந்திருக்கும் நாம் பின்வருவனவற்றை தங்களுக்கு தயவுடன் தருகின்றோம்.

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைபபுச்சபை செய்த நீரபரிசோதனை அடிப்படையிலும், சுகாதார வைத்திய அதிகாரிகளின் அறிவுறுத்தலுக்கு அமையவும் பௌசர் மூலம் விநியோகிக்கப்பட்டுவரும் நீரை பருகிவரும் நாம் 20-03-2015 அன்று தூய நீருக்கான செயலணியின் நிபுணர் குழுவால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கைமூலம் குழப்பமடைந்துள்ளோம். எனவே மேற்படி நிபுணர்குழு வெளியிட்ட அறிக்கையின் தெளிவின்மை காரணமாக "பாதிக்கப்பட்ட மக்களின் கருத்துக்களும் சந்தேகங்களும்" என்ற தலைப்பில் இதற்காக அமைக கப்பட்ட விசேட செயலணியிடம் திறந்த பதிலை மக்களிற்கு உடனடியாக தெரியப்படுத்துமாறு 23-03-2015 அன்று ஊடகங்கள் வாயிலாகவும் பதிவுத்தபால் மூலமாகவும் கேள்வி கேட்டிருந்தோம். மேலும் இவ்விடயம் தொடர்பாக தங்களுக்கு ஏற்பட்டிருந்த விளக்கமின்மையை தெளிவுபடுத்துமாறு பாரளுமன்ற உறுப்பினர்கள், மருத்துவர்கள், கல்வியியலாளர்கள், மற்றும் பொது அமைப்புக்கள் என்பனவற்றாலும் கேள்வி கேட்கப்பட்டமை அறிந்ததே. ஆனால் இதுவரை எம்மக்களுக்குரிய எந்தப் பதிலும் கிடைக்கவில்லை.

மக்கள் தமது கிணற்று நீரினை பருகமுடியுமா? அல்லது முடியாதா? எனும் சாதாரண கேள்விக்குக் கூட உரிய பதிலை இதுவரைக்கும் வழங்க முடியாத ஓர் ஆய்வின் முடிவு எந்த நோக்கத்திற்காக அவசர அவசரமாக வெளியிடப்பட்டது. இவ்வாறு அவசரமாகவும் அரை குறையாகவும் தெளிவற்ற முடிவு களை வெளியிட்டுவரும் செயலணியானது மக்களுக்கு நிரந்தர தீர்வினை பெற்றுத்தரும் என்ற நம்பிக்கையினை அற்றுப்போகச்செய்துள்ளது.

தூய நீருக்கான செயலணி அதன கடந்த கால கூட்டங்களில் மக்களுக்கு தீர்வை வழங்கக்கூடிய வகையிலான ஆக்கபூர்வமான எந்த முடிவுகளையும் எட்டாது ஆரம்பகட்ட தற்காலிக தீர்வான குடிநீர் வழங்கலிலும் வினைத்திறனற்ற செயற்பாட்டையே இன்றுவரை கொண்டுள்ளது.

மேலும் ஏற்கனவே அமைக்கப்பட்ட நிபுணர்குழுவின் வெளிப்படைத்தன்மை, ஆய்வின் நோக்கம, அதன் காலவரையறை மற்றும் நிபுணர்களின் துறைசார்ந்த பொருத்தப்பாடு என்பன தொடர்பாக தெளிவற்ற நிலை காணப்படுகின்றது. இவ்வாறான நிலையில் இவர்களால் வெளியிடப்பட்ட அறிக்கையானது தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச்சபை ஏற்கனவே இவ் விடயம் தொடர்பில் நீண்டகால ஆயிவினை மேற்கொண்டு வெளியிட்ட விரிவான அறிக்கைக்கு எதிரான ஓர் அறிக்கை தயாரிப்பது போன்ற எண்ணப்பாட்டினை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது.

இலங்கை ஜனநாயக சோசலிஷ குடியரசில் சாதாரண தவறுகளுககே பலவேறுபட்ட விசாரணைகளை மேற்கொள்ளும் அரசியல்யாப்பு சட்டங்கள் நடைமுறைப்படுத்தலிலிருந்தும் கடந்த 5 வருடங்களாக இந்தப் பாரிய அனர்த்தம்மக்களால்வெளிக கொண்டுவரப்பட்டபோதும் இன்று வரை இதற்கு காரணமானவர்களுக்கும் தமது கடமையினை சரிவர மேற் கொள்ளாமல் இரு ந்தவர்களுக்கும் எந்த வித விசாரணைகளும் மேற் கொள்ளாது இருந்தமை மிகவும் வேதனை தருகின்றது.

இவ்விடயம் தொடர்பில் குடிநீருக்காக திரண்ட யாழ்ப்பாண மக்கள் ஆகிய நாம் தங்களிடம் வேண்டி நிற்பது.

•பாதிக்கப்பட்ட பிரதேசத்தின் நீர் குடிநீர் பயன்பாட்டிற்கு உகந் ததா இல்லையா?

•தூய நீருக்கான விசேட செயலணியானது ஆளுநர், முதலமைச்சர், அரசாங்க அதிபர் ஆகியோரின் கூட்டுத் தலைமையின் கீழ் மீள் ஒருங்கமைக்கப்பட வேண்டும்.

•மின் உற்பத்தி நிறுவனங்களால் ஏற்படுத்தப்பட்ட ஒயில் மற்றும் கிறீஸ் கழிவுகளை அகற்றி எமது நீரை நாமே பயன்படுத்தக் கூடியதாக குறுகிய, இடைத்தர, நிரந்தர தீர்வினை வழங்குவதற்கான திட்டங்களை வகுத்து அவற்றினை சிறப்பாக அமுல்படுத்தப்படவேண்டும்

•தற்காலிகமாக வழங்கப்படும். குடிநீரினது தரஉறுதிப்பாடு, சீரான வழங்கல், நீர் பெறப்படும் மூலம் தொடர்பில் பொருத்தமான அதிகாரிகளின் உறுதிப்படுத்தலும் மேற்பார்வையும் இருத்தல் வேண்டும்.

•இந்தப் பாரிய அனர்த்தம் ஏற்பட காரணமாகவிருந்தவர்களுககும், தங்கள் கடமைகளை சரிவர செய்யத் தவறியவர்களுக்கும் எதிராக மத்திய மற்றும் மாகாண அரசு மட்டங்களில் விசாரணைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

•இவ் விடயங்களை வெளிக் கொணரும் அரச அதிகாரிகள், மக்கள் பிரதிநிதிகள் போன்றோர் மீது ஏற்படுத்தப்படும் மறைமுக அழுத்தங்கள், பழிவாங்கல்கள் என்பன ஏற்படாதிருப்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

•மீள் ஒருங்கமைக்கப்படும் செயலணியானது இவ்விடயம் தொடர்பில் உலக சுகாதார நிறுவ னம (WHO) போன்ற துறைசார் ந்த நிறுவனங்களின் ஆலோச னைகளை பெற்றுக்கொள்ள வேண்டும்.

•நிபுணர் குழுவின் குறைபாடுகள் நீக்கப்பட்டு மீளமைப்புச் செய்யப்பட வேண்டும்.

•மக்களின் நம்பிக்கையை உறுதிப்படுத்தும் பொருட்டு மீள் ஒருங்கமைக்கப்படும் செயலணியின் ச்செயற்பாடுகள் பற்றி வாராவாரம் மக்களுக்கு தெரியப்படுத்துதல் வேண்டும்.

எம்மால் கோரப்பட்ட மேற்கூறிய கோரிக்கைகளை நடைமுறைப் படுத்துவதற்கு ஏதுவாக மீள் ஒருங் கமைக்கப்படும் செயலணியானது மிகவிரைவாக (குறைந்தது எழுபத் திரண்டு (72) மணித்தியாலங்களுக்குள்) கூட்டப்படுவதை மக்களாகிய நாம் வேண்டி நிற்கின்றோம். மேலும், இவற்றுக்கான எழுத்து மூலமான திறந்த பதில் கிடைக்கும் வரை உணவும் நீரும் அற்ற சாத் வீகமான உண்ணாவிரத போராட்டம் நல்லூர் முன்றிலில் தொடரும் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## மழலை மொழியிலான பேச்சுத்திறன் நாளை

(யாழ்ப்பாணம்)

யாழ்.பாலர் கல்விக் கழக நிர்வாகத்தின் கீழுள்ள பாலர் பாடசாலைகள் இணைந்து வழங்குகின்ற தேனென இனிக்கும் மழலை மொழியிலான பேச்சுத்திறன் காணும் வைபவம் நாளை வியாழக்கிழமை காலை 9 மணியளவில் ராஜா கிறீம் ஹவுஸ் சரஸ்வதி மண்டபத்தில் பாலர் கல்விக் கழகத் தலைவர் எஸ்.பி. காசிநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடபிராந்திய சத்தியசாயி சேவா நிலைய முன்னாள் தலைவர் வே.சேனாதிராஜா கலந்து கொள்ளவுள்ளார். (இ-3)

## சர்வதேச மகளிர் தினம் - மார்ச் 8; விடுமுறை தினமாக அறிவிக்கவும்

### வலி.மேற்கு தவிசாளர் வலியுறுத்து

சர்வதேச மகளிர் தினமான மார்ச் 8ஆம் திகதியை தேசிய விடுமுறை தினமாக அறிவிக்க வேண்டுமெனக் கோரி 10ஆயிரம் பெண்களின் கையொப்பத்தினை வலி.மேற்கு பிரதேச சபை தவிசாளர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன் இலங்கையின் முதற்பெண்மணிக்கு அனுப்பியுள்ளார்.

அண்மையில் தொல்புரம் மாதர் சங்கத்தினால் சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்பட்டது. இதன் போதே தவிசாளர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், இன்று பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகள் மீது எமது சமூகம் கொண்டுள்ள பற்றுறுதியின் நிலையில் மேலும் பல மாற்றங்கள் ஏற்பட வேண்டும்.

எமது நாட்டில் 50 வீதத்திற்கும் அதிகமாக பெண்களே காணப்படுகின்றனர். அத்துடன் தேசிய உற்பத்தியிலும் பெண்களின் பங்களிப்பே மிக அதிகமாகவுள்ளது.

மேலும் நாட்டின் முதற் பெண் மணிக்கு 10 ஆயிரம் கையொப்பங்களைத் திரட்டி அனுப்பியுள்ளோம். இது தொடர்பில் மேலும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளேன். எமது நாட்டில் சாதனை படைத்த பெண்கள் பலர் இருந்துள்ளனர். இருந்தும் வருகின்றனர்.

இனத்தின் விடுதலைக்காக களமாடி காவியமான பெண் போராளிகள் வாழ்ந்த மண் இது.

இவ்வாறான சிறப்புக்களைக் கொண்ட எமது தேசத்தில் பெண்கள் மீதான அடக்கு முறைகள் தொடர்பில் மாற்றங்கள் பல ஏற்படுத்தப்பட வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)






## மஹோற்சவ விஞ்ஞாபனம்

புங்குடுதீவு கிழக்கு கண்ணகைபுரம் அருள்மிகு கண்ணகை அம்மன் என வழங்கும் ஸ்ரீஇராஜராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 15 தினங்கள் தொடர்ந்து நடைபெறும். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகிஸ்தானுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட இலங்கைக்குழுவினர் நேற்று முன்தினம் அந் நாட்டு பிரதமர் நவாஷ் ஷெரீப் உள்ளிட்டவர்களைச் சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.


பாகிஸ்தான் பிரதமர் மாளிகையில் நேற்றுமுன்தினம் முற்பகல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இராணுவ மரியாதையுடனான உத்தியோக பூர்வ வரவேற்பு வைபவம் வழங்கப்பட்டது.



பாக். பிரதமரின் தேசிய பாது காப்பு மற்றும் வெளியுறவு ஆலோசகர் சர்தாஜ் அசிஸுடன்



பாக். வர்த்தக அமைச்சர் தஸ்தகிர் கானுடன்



பாக்.பாதுகாப்பு அமைச்சர் முஹம்மத் ஆசிப்புடன்

# தொடர்ந்து முயற்சி

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மற்றும் மகிந்த ராஜபக்ஷ ஆகியோரை ஒரே மேடைக்கு கொண்டுவர முயற்சிகள் இடம்பெறுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுதந்திர கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று இந்த நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் விதுர விக்ரமநாயக்க தெரிவித்துள்ளார்.

ஹொரணையில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அவர் இதனை தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சிக்கு அடிபணியாது ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி மூன்று தலைவர்களையும் ஒன்றிணைத்து முன்னோக்கிச் செல்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தற்போது இடம்பெறும் அநீதிகளுக்குஎதிராகவீதியில்இறங்கவும் தமது குழு தயங்காது எனவும் விதுர வக்ரமநாயக்க மேலும் தெரிவித்தார். (இ-5)

# புலமைப்பரிசில் கொடுப்பனவுகள் இன்னமும் அதிகரிக்கப்படவில்லை

(கொழும்பு)

5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவு தொகை இதுவரையில் அதிகரிக்கப்படவில்லை என இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

கொடுப்பனவு அதிகரிப்பு தொடர்பில் அளிக்கப்பட்ட வாக்குறுதி இதுவரையில் நிறைவேற்றப்படவில்லை என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களின் மாதாந்த கொடுப்பனவு 500 ரூபா முதல் 1500 ரூபாவாக உயர்த்தப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் கொடுப்பனவு அதிகரிப்பு அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், இந்த ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு 500 ரூபா கொடுப்பனவு வழங்கவே போதுமானதாக உள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த குற்றச்சாட்டு தொடர்பில் கல்வி அமைச்சு எவ்வித கருத்துக்களையும் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# தூயநீருக்காக உண்ணாவிரதம் இருக்கும் இளைஞர்களை அழைத்துப் பேசுங்கள்

## கஜதீபன் முதலமைச்சரிடம் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

**தூய நீருக்காக நல்லூர் கந்தசுவாமி கோவில் வளாகத்தில் உண்ணாவிரதம் மேற்கொண்டு வரும் இளைஞர்களை வடக்குமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அழைத்து, அவர்களின் கோரிக்கைகள் தொடர பாகப்பேச்சுவார்த்தை நடத்தி பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என உறுப்பினர் பா.கஜதீபன் முதலமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற வடக்கு மாகாண சபை அமர்வின் போதே அவர் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தண்ணீரைக்குடிக்கலாமா? இல்லையா? என்பதை சட்டபூரவமாக கையெழுத்திட்டு தெரிவிக்க வேண்டிய கடப்பாட்டிலிருந்து நாம் வழுவிச் செல்ல முடியாது. எங்களால் எல்லாம் முடியுமென்று நாங்கள் கருத வேண்டியதில்லை. எமக்கு வரையறுக்கப்பட்ட அதிகாரங்களே உண்டு. தண்ணீர் தொடர்பான அதிகாரங்களைப் பொறுத்த வரை மாகாண அரசாங்கத்துக்கு முற்றுமுழுதான அதிகாரங்கள் இல்லை. மத்திய அரசே பெருமளவான அதிகாரங்களைக்கொண்டுள்ளது. அந்தவகையில் எமது அதிகார எல்லைகளைத்தாண்டி செய்யவேண்டிய சில செயற்பாடுகளுக்கு நாம் மத்திய அரசாங்கத்திடம் உதவிகளைக்கேட்டுப்பெற வேண்டும்.ஏனெனில் மிகவும் பிரமாண்டமான முறையில் மக்கள் மத்தியில் தங்களுடைய கிணற்று நீர் தொடர்பான பல்வேறுபட்ட எதிரும் புதிருமான கருத்துக்கள் காணப்படுகின்றன.

அப்படியான நிலையில் அம் மக்களுக்குத்தகவல்களை வழங்குகின்ற போது மிகவும் கவனமான முறையில் சட்டபூர்வமான, உத்தியோகபூர்வமான கையெழுத்திடப்பட்ட செய்திகளையே நாம் வழங்க வேண்டும். அப்பொழுது தான் அதன் உண்மைத்தன்மை பற்றி யாரும் கேள்வியெழுப்ப முடியாமல் இருக்கும். இல்லாவிடில் மக்களிடையே நிலவிவரும் குழப்பமான தெளிவின்மையான நிலை தொடரலாம். அதற்கு நாம் இடமளிக்காமல் சட்டபூர்வமான அதிகார பூர்வ தகவல்களைப்பெற்று மக்களுக்கு வழங்க வேண்டும்.

இன்றைய தினம் (நேற்று) இக்கோரிக்கையை வலியுறுத்தி நல்லூர் வீதியிலே நூற்றுக்கணக்கான இளைஞர்கள் ஒன்றுகூடி கவனயீர்ப்பில் ஈடுபட்டு இருக்கிறார்கள்.

எங்களுடைய முதலமைச்சரை அழைத்து, அவர்களுடைய கோரிக்கைகளை உள்வாங்கி, எங்களால் இதுவரைக்கும் எவ்வாறான விடயங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன? எவ்வாறான விடயங்கள் மேற்கொள்ளப்பட்டுக்கொண்டிருக்கின்றன? என்பன தொடர்பாகவும் எதிர்வரும் காலத்தில் நாங்கள் எவ்வாறான விடயங்கள் மேற்கொள்ளவுள்ளோம் என்பன தொடர்பில் பேச வேண்டுமென வேண்டுகோளொன்றை முன்வைக்க விரும்புகின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# 5 ஆயிரம் போலி அடையாள அட்டைகள் மீட்பு

கொட்டாவ, சிறிமல் வத்தையிலுள்ள வீடொன்றில் நடத்தப்பட்டு வந்த போலி கச்சேரியை கொட்டாவ பொலிஸ் குற்றப்புலனாய்வு பிரிவினர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை சுற்றிவளைத்துள்ளனர்.

அந்த வீட்டிலிருந்து போலியான முறையில் தயாரிக்கப்பட்டிருந்த தேசிய அடையாள அட்டைகள் 5 ஆயிரத்தையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

கட்டடங்களை நிர்மாணிப்பதற்கு தேவையான உபகரணங்களை குத்தகைக்கு வழங்கும் நிறுவனங்களில் பொருட்களை பெற்றுக்கொள்வதற்காகவே இந்த போலியான தேசிய அடையாள அட்டைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அவ்வீட்டிலிருந்த சந்தேகநபரை கைது செய்த பொலிஸார், அவரை ஹோமாகம நீதவான் நீதிமன்றத்தில் நேற்றையதினமே ஆஜர்படுத்தினர். நீதவான், அவரை எதிர்வரும் 9 ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (இ-5)

# 38 இலங்கையர்களை மீட்க சீனத் தூதரகம் உதவி

கிளர்ச்சி இடம்பெற்று வரும் ஏமனில் சிக்கியிருந்த 38 இலங்கையர்கள் சீன தூதரகத்தின் உதவியுடன் மீட்கப்பட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட இலங்கையர்கள் பஹ்ரேனுக்கு அழைத்துச் செல்லப் படவுள்ளனர்.

இதேவேளை, கிளர்ச்சி இடம்பெறும் பகுதிகளில் இருந்து காப்பாற்றப்பட்ட 8 இலங்கையர்களை பாதுகாப்பாக இலங்கைக்கு அனுப்பி வைக்க ஒத்துழைப்பு வழங்குவதாக பஹ்ரேன் அரசாங்கம் இலங்கைக்கு அறிவித்துள்ளது.


கிளர்ச்சி இடம்பெற்று வரும் ஏமன் தலைநகர் சனாவில் 40 இலங்கையர்களும் ஹொடிடா பகுதியில் 11 இலங்கையர்களும் சிக்கியுள்ளதாக வெளிவிவகார அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஏமன் கிளர்ச்சியால் சனா, ஹொடிடா, அதேன், முக்குல்லா நகரங்களில் உள்ள இலங்கையர்களை மீட்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூய நீருக்கான போராட்டம்








சுன்னாகம் நிலத்தடி நீர் மாசடைவு தொடர்பில் உரிய நடவடிக்கையினை விரைந்து எடுக்குமாறு கோரியும் தூய நீருக்கான செயலணி மாபெரும் போராட்ட மொன்றினை முன்னெடுத்துள்ளது. வடக்கு மாகாண முதாலமைச்சர் சி.வி விக்னேஸ்வரன் வடக்கு மாகாண ஆளுநர் டபிள்யு.எச்.எம். பள்ளிக்கார மற்றும் யாழ்.மாவட்ட அரசஎன்.வேதநாயகன் ஆகியோருக்கு மகஜரும் கையளிக்கப்பட்டுள்ளது. நல்லூர்கந்தன்ஆலய முன்பாகநேற்று முற்பகல் 10 மணியளவில் ஆரம்பமாகிய போராட்டம் வீதி வழியாக பேரணியாக சென்று வடக்கு மாகாண முதலமைச்சர் வடக்கு மாகாண ஆளுநர் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் ஆகியோருக்கு மகஜரும் கையளிக்கப்பட்டிருந்தது. இப்போரா ட்டத்தில் பெருமளவிலான பொதுமக்கள், பல்கலைக்கழக மாணவர்கள, வைத்தியர் கள் என பெருமளவிலா ன மக்கள் கலந்து கொண்டிருநதனர.

படங்கள்:-உ.சாளின்

## ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினது மேதின ஊர்வலம் ஹைட்பார்க்கில்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மேதின ஊர்வலம் ஹைட்பார்க் பிரதேசத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் வழிகாட்டலில் நடைபெறவுள்ளது என அக்கட்சியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பிருமான அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார்.

எதிர்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு தலைமையில் சுதந்திரகட்சி அமைக்கும் எதிர்கால அரசாங்கம் இம்முறை மே தினத்தின் சுதந்திரக்கட்சியின் தொனிப் பொருளாக அமைந்துள்ளது.

இம்மேதின நிகழ்விற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன- முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த ராஜபக்ஷ மற்றும் சந்திரிகா பண்டாரநாயக்க ஆகியோரும் அழைக்கப்படவுள்ளனர் என்று பொதுச் செயலாளர் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிகாலத்தில் தொழிலாளரின் நலனைப் பேண பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன என்று பொதுச் செயலாளர் மேலும் சுட்டிக்காட்டினார்.(இ-5)

## ஜனாதிபதித் தேர்தலின் போது மைத்திரியுடன் இணைந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைக் காப்பாற்றி விட்டோம்!

### துமிந்த திஸாநாயக்க தெரிவிப்பு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசிய கட்சிக்கும் இடையில் அன்று இருந்த வெறுப்பு சகோதரத்துவமாக மாறியுள்ளதாக அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் நேற்று இடம் பெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் நாங்களும் அன்று கட்சியை விட்டு வெளியில் வந்ததும் நாங்கள் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி அல்ல என கூறியிருந்தார்கள். அன்று நாங்கள் அப்படி செய்திருக்காவிட்டால் இன்று ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி தோல்வியடைந்திருக்கும்.

அப்படி செய்யாமல் இருந்திருந்தால் 1994 ஆம் ஆண்டில் இருந்து பாதுகாத்து வந்த ஜனாதிபதி அதிகாரத்தை வேறு ஒரு கட்சிக்கு வழங்க நேரிட்டிருக்கும்.

கடந்த காலங்களில் ஐக்கிய தேசிய கட்சி தேர்தலில் வெற்றியடைந்த சந்தர்ப்பத்தில் சுதந்திர கட்சியினரை தாக்கினார்கள். ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி வெற்றியடைந்ததும் ஐக்கிய தேசிய கட்சியினரை தாக்கினார்கள் அவ்வாறான தொரு நிலை தற்போது இல்லை.

இந்த இரண்டு கட்சிக்கும் இடையில் கடந்த காலங்களில் காணப்பட்டது வெறுப்பு மாத்திரமே ஆனால் இன்று சகோதரத்துவம் மாத்திரமே காணப்படுகின்றது. ஆனால் இந்த விடயத்தில் சிலர் இன்று குழம்பிப் போயுள்ளார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## ஸ்ரீலங்கன் விமானசேவை டுபாய் வங்கியில் அடகு

ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்தின் முன்னாள் தலைவர் நிஷாந்த விக்ரமசிங்க டுபாய் மஸ்ரேக் வங்கியில் 23079 மில்லியன் ரூபா பிணைக் கடன் கடந்த 2014 ஆம் ஆண்டில் பெற்றுக்கொண்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

திறைசேரி பிணையின் அடிப் படையில் பெற்றுக்கொள்ளப்படும் கடனானது அடகுக் கடனுக்கு நிகரானது என தெரிவிக்கப்படுகிறது. இதே வேளை டுபாய் வங்கி யிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் அடகுக கடனுக்கு நிகரானது என பொருளியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

2014ஆம் ஆண்டு நிறைவில் செலுத்தப்படாத கடன் தொகை 30712 மில்லியன் ரூபா எனத் தெரிவிக்கப்படுவதோடு இந்த ஆண்டில் செயற்பாட்டு நட்டம் 8400 மில்லியன் ரூபா என தகவல் வெளியாகியுள்ளது. ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனத்தின் முன்னாள் தலைவர் நிஷாந்த விக்ரமசிங்கவினால் மேற்கொள்ளப்பட்ட முறைகேடு தொடர்பாக ஆராயவதற்கு நியமிக்கப்பட்ட குழு தங்கள் அறிக்கையை பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவிடம் ஒப்படைத்துள்ளது.

நிசாந்த விக்ரமசிங்க முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மைத்துனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணாமற் போனவர்களின் உறவினர்கள் கல்முனையில் நேற்றும் கவனயீர்ப்புப் போர்

(கொழும்பு)

200 பேர் இறந்ததாய் சொல்லிய நீங்கள், கொன்றவர்கள் யார்? என ஏன் சொல்லவில்லை?, சர்வதேசத்தின் தராதரம் வேண்டாம் சர்வதேச விசாரணையே வேண்டும் என பல வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளுடன் காணாமற் போன உறவினர்களால் இரண்டாவது நாளாக நேற்று கல்முனை பிரதேச செயலகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது.

கடத்தப்பட்டோர், காணமற் போனோர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு கல்முனையில் இரண்டாவது நாளாகவும் விசார ணைகளை மேற்கொண்டு வரு கின்றது.

இந்நிலையில் இதனை பகிஷ்கரிக்கும் நோக்குடன் பாதிக்கப்பட்ட மக்கள் வாயில் கறுப்புத்துணியினை கட்டிக்கொண்டு இரண்டாவது நாளாகவும் விசாரணைக்கு செல்லாமல் வீதியில் அறவழி போராட்டத்தினை மேற்கொண்டிருந்தனர். (இ-5)

தண்ணீரூற்று பொதுச்சந்தைக்கட்டடம்

# 2 கோடியே 20 இலட்சம் ரூபா நிதியில் அமைக்கப்படவுள்ளது

## கரைதுறைப்பற்று பிரதேசசபை செயலாளர் தெரிவிப்பு

(மல்லாவி)

**முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள கரைதுறைப்பற்று பிரதேச சபைக்குட்பட்ட முள்ளியவளை தண்ணீரூற்று பொதுச்சந்தைக்கான புதிய கட்டடம் நவீன வடிவமைப்பில் இரண்டு மாடிகளைக் கொண்ட பொதுச்சந்தையாக 2 கோடியே 20 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளதாக முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச சபைச் செயலாளர் ஜெயசீலன் செல்வன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வன்னியில் நடைபெற்று முடிந்த இறுதிப்போர் நடவடிக்கையின் போது மிகவும் மோசமாக சேதமடைந்த கரைதுறைப்பற்று பிரதேச சபையின் கட்டடம் மக்கள் மீள்குடியேற்றத்தின் பின்னரும் பல்வேறு பௌதீக வளப்பற்றாக் குறைகளுடனும் ஆளணி வளப்பற்றாக் குறைகளுடனும் இயங்கி வந்தது.

இந்நிலையில் முள்ளியவளை தண்ணீரூற்று பொதுச் சந்தையானது இடப்பற்றாக்குறையுடன் தற்காலிக கொட்டகைகளில் ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வருகின்றது.

இதனைக் கருத்திற் கொண்டு நவீன வடிவமைப்பில் இரு மாடிகளைக் கொண்ட பொதுச்சந்தையாக அமைப்பதற்குரிய திட்டம் தயாரிக்கப்பட்டு அவுஸ்திரேலிய அரசின் 90இலட்சம் ரூபா நிதியுதவியுடனும் கரைதுறைப்பற்று பிரதேச சபையின் 130 இலட்சம் ரூபா நிதியுடனும் மொத்தமாக 2 கோடியே 20 இலட்சம் ரூபா செலவில் புதிய சந்தைக் கட்டடம் அமையப் பெறவுள்ளதாக அவர்மேலும்தெரிவித்துள்ளார். (2-15)

## முதியோர் சம்மேளன நிர்வாகத் தெரிவு

முல்லைத்தீவு மாவட்ட முதியோர் சம்மேளனம் அண்மையில் மாவட்ட செயலகத்தில் அமைக்கப்பட்டது.

முன்னாள் அரசாங்க அதிபர் நாகலிங்கம் வேதநாயகன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தலைவராக நடராசா சண்முகரத்தினம், செயலாளராக பேதுறுப்பிள்ளை அமிர்தநாதன், பொருளாளராக செல்லையா வீரையா, உப தலைவராக சின்னையா கதிரவேலு , உப செயலாளராக அழகிரி பண்டாரம் முருகேஸ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

மேலும் 5 பேரைக் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

இந் நிகழ்வில் மாவட்ட சமூக சேவைகள் அதிகாரி ந.தசரதன், சிரேஷ்ட சமூக சேவைகள் அதிகாரி க.குணசிங்கம், புதுக்குடியிருப்பு பிரதேச செயலக முதியோர் உரிமைகள் மேம்பாட்டு அதிகாரி கு.குணசீலன், துணுக்காய் பிரதேச செயலக முதியோர் உரிமைகள் மேம்பாட்டு அதிகாரி தி.ரவீந்திரன் ஆகியோர கலந்து கொண்டனர். (2-254)



வவுனியா தமிழ்ச்சங்கமும் ஒட்டுசுட்டான் செந்தணல் வெளியீட்டகமும் இணைந்து நடத்திய வாகைக்காட்டானின் "நாரறுத்த நிலவுகள்", புலவூரான் ரிஷியின் "சிறகு தரித்த சிலுவைகள்" ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு விழா அண்மையில் கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்ற போது...

## கலந்துரையாடல்

(கிளிநொச்சி)

திருவையாறு படித்த வாலிபத் திட்ட விவசாய உற்பத்தி நுகர்ச்சி கூட்டுறவு சங்கத்தின் அனுசரணையுடன் ILO நிறுவனத்தின் ஏற்பாட்டில் மேற்கொள்ளப்படவுள்ள பழம் மற்றும் கிழங்குச் செய்கையாளர்களுடனான கலந்துரையாடல் ஒன்று நாளை வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு திருவையாறு பொதுநோக்கு மண்டபத் தில் நடைபெறவுள்ளது.

இதன்போது பப்பாசி, அன்னாசி, மரவள்ளி, பசன் புரூட் ஆகிய பயிர்ச் செய்கைகளை மேற்கொள்ளும் விவசாயிகள், மேற்கொள்வதற்கு ஆர்வமுள்ள விவசாயிகள் ஆகியோரைத் தவறாது கலந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்கப்படுகின்றது. (2-272)




## தூக்கில் தொங்கிய நிலையில் மாணவி சடலமாக மீட்பு

(குருமன்காடு)

வவுனியாவில் பதின்ம வயது மாணவி ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வவுனியா, பட்டக்காடு பகுதியைச் சேர்ந்த பதின்ம வயது மாணவி ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

வவுனியா நகரப் பகுதியில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றில் கல்வி பயிலும் மாணவி ஒருவர் வவுனியா, பட்டக்காடு பகுதியில் உள்ள தனது வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக நேற்று முன்தினம் மாலை வவுனியா பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளார்.

வீட்டில் உள்ளவர்கள் வெளியில் சென்ற சமயம் இவ் அசம்பாவிதம் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு சடலமாக மீட்கப் பட்டவர் வவுனியா, பட்டக்காடு பகுதியைச் சேர்ந்த பரமானந்தம் வனஜா (வயது- 16) என்பவராவார். இது தொடர்பான விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (2-250)

## வாகனங்களுக்கு ஸ்ரிக்கர் ஒட்டும் கடை தீயில் எரிந்து முற்றாக நாசமாகியுள்ளது

(குருமன்காடு)

வவுனியாவில் வாகனங்களுக்கு ஸ்ரிக்கர் ஒட்டும் கடை தீயில் எரிந்து முற்றாக நாசமாகியுள்ளது.

வவுனியா, மூன்றுமுறிப்பு பகுதியில் வாகனங்களுக்கு ஸ்ரிக்கர் ஒட்டும் கடை ஒன்று நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் தீயில் எரிந்து முற்றாக நாசமாகியுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

கடை வியாபார நடவடிக்கைகள் முடிந்து பூட்டப்பட்ட பின்னரே இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது என கடை உரிமையாளரினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த கடையில் இருந்த வாகன ஸ்ரிக்கர்கள், டிஜிற்றல் இயந் திர சாதனங்கள், கணனிகள் என்பன தீயில் எரிந்து நாசமா கியுள்ளதுடன் கடைக் கட்டடமும் முற்றாக சிதைவடைந்துள்ளது.



தீ விபத்துக்கான காரணம் இது வரை கண்டறியப்படவில்லை.

இது தொடர்பான விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (2-250)

## க.பொ.த. சாதாரண தர பெறுபேறுகள்-2014

மு/விசுவமடு மகா வித்தியாலயம்

க.கஜநிதா-7ஏ2பி, சோ.துவாரகா- 7ஏபிஎஸ், து.சானுகா-6ஏ3பி,க.கோவர்த்தனி-6ஏ2பசி, [illegible] 3சி.

வவு/முஸ்லிம் மகாவித்தியாலயம்

ஜ.பாத்திமா மபாஸா-8ஏபி, பு.பாத்திமா ஷர்மிளா- 6ஏ2பிசி, அ.பாத்திமா அஸ்கா- 6ஏ2பிசி, மு.பாத்திமா சானாஸ்- 6ஏபி2சி, ச.பாத்திமா இல்மா-6ஏபி2சி, மு.பாத்திமா றிப்கா-5ஏ3பிசி, மு.பாத்திமா றுஸ்னா-6ஏ3சி, மு.பாத்திமா செளமியா- 6ஏ2பிஎஸ், நி.பாத்திமா புஸ்றா- 5ஏ2பிசிஎஸ், மு.பாத்திமா றுக்சான- 5ஏபி2சிஎஸ். (2-250)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org





# சிறுவர் அரங்கம்

1111

## தங்க முட்டையிடும் வாத்து!

...உடனே, தனது இரு வேலைக்காரர்களுடன் ராஜாவிடம் சென்றான்.

"மகாராஜா! என் பக்கத்து வீட்டு ஷியாம் என் வாத்தைத் திருடி விட்டான்.

வாத்தைத் திருடும் போது எனது இந்த இரு வேலைக்காரர்களும் பார்த்துவிட்டனர்.

மகாராஜா அவனை விசாரித்து என் வாத்தை தயவுசெய்து திருப்பிக் கொடுக்கச் சொல்லுங்கள்!" என்றான்.

உடனே, ராஜா ஷியாமை வாத்துடன் சபையில் ஆஜராகும் படி கட்டளையிட்டார்.

அவ்வாறே ஷியாம் வாத்துடன் வர, "என்னப்பா? தனராஜின் வீட்டு வாதததை நீ திருடி விட்டாயாமே! நேற்று நீ திருடியதைப் பார்த்த இரு வேலைககாரரர்கள் இங்கே சாட்சி சொல்ல இருக்கின்றனர்" என்றார்.

உடனே ஷியாமுக்கு தனராஜின் வஞ்சகம் புரிந்துவிட்டது.

அவன் மன்னனிடம் "ராஜா! இந்த வாத்து தனராஜ"டையதுதான்! ஆனால், நான் இதைத் திருடவில்லை.


என் கோழியைத் திருட்டுத் தனமாக ஒருநாள் கொன்று தின்றவன் இந்த தனராஜ்! அதற்குப் பதிலாக இந்த வாத்தை அவன்தான் எனக்குக் கொடுத்தான்!" என்றான்.

"இல்லை மன்னா! ஷியாம் பொய் சொல்கிறான்!" என்று தனராஜ் எதிர்வாதம் செய்தான். தனராஜ் கூறுவது உண்மையில்லை என்று ராஜாவிற்குத் தெரிந்துவிட்டது.

ஆயினும் "இந்த வாத்து இன்றிரவு அரண்மனையிலேயே இருக்கட்டும்! நாளை காலை இருவரும் வாருங்கள்!" என்று சொல்லி அவர்களை அனுப்பிவிட்டார்.

மறுநாள் காலை, அந்த வாத்து வழக்கம்போல் தங்க முட்டையிட்டது. செய்தியறிந்த ராஜா வியந்து போனார்.





மறுநாள், தனராஜ"ம், ஷியாமும் சபைக்கு வந்தனர். ஒரு சாதாரண வாத்து முட்டையை தனராஜிடம் காட்டிய ராஜா, "தனராஜ்! உன் வாத்து இந்த மாதிரி முட்டையிடுமா அல்லது இதை விடச் சிறியதாக முட்டையிடுமா?" என்று கேட்டார்.

சற்று யோசித்த பின், "இதை விடப் பெரியதாக இடும்!" என்றான் தனராஜ்.

பிறகு ராஜா அதே கேள்வியை ஷியாமிடம் கேட்க, "மகாராஜா! என்னுடைய வாத்து மகிமை வாய்ந்தது. அது தங்க முட்டையிடும்!" என்று உண்மையைக் கூறினான்.

உடனே தனராஜ், "பாருங்கள் ராஜா! ஷியாம் பொய் சொல்கிறான். வாத்து எங்காவது தங்க முட்டை இடுமா? இதிலிருந்தே அவன் பேசுவது பொய் என்று தெரிகிறது!" என்றான் உற்சாகத்துடன்.

உடனே ராஜா, "தனராஜ்! நீ சொல்வதுதான் சரி! இந்த வாத்து உன்னுடையதுதான்! நீ எடுத்துப் போ!" என்றார்.

தனராஜ் மிகுந்த மகிழ்ச்சியுடன தன் வாத்தை எடுத்துச் சென்று விட்டான்.

பிறகு மன்னர் ஷியாமிடம், "ஷியாம்! தனராஜ் எடுத்துச் சென்றது வேறு ஒரு வாத்து! உன்னுடைய தங்க முட்டையிடும் வாத்து வேறிடத்தில் பத்திரமாக உள்ளது!" என்ற ராஜா, "அதிருக்கட்டும்! உன் வாத்து தங்க முட்டையிடும் ரகசியம் என்ன?" என்று கேட்டதும், ஷியாம் தனது குடிசைக்கு ஒரு நாள் இரவு தங்க வந்த சாமியாரின் அருள் அது என்று அவருக்கு விளக்கினான்.

அதைக் கேட்டு வியந்த மன்னர் ஷியாமிடம் அவனுடைய வாத்தை ஒப்படைத்ததுடன், அவனுக்கு அரண்மனையிலேயே ஒரு நல்ல வேலையும் போட்டுக் கொடுத்தார். (முற்றும்)



04.2015 08

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 217 - உரோம் பேரரசின் மன்னன் கரகல்லா படு கொலை செய்யப்பட்டான்.
- 1767 - தாய்லாந்தின் அயுத்தயா பேரரசு பர்மியரிடம் வீழ்ந்தது.
- 1857 - பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனியின் வங்காள இராணுவத்தைச் சேர்ந்த மங்கல் பாண்டே என்ற சிப்பாய் பிரித்தானிய ஆட்சிக்கெதிராக கிளர்ச்சியில் ஈடுபட்டமைக்காக தூக்கிலிடப்பட்டான்.
- 1864 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: லூசியானாவில் மான்ஸ்ஃபீல்ட் என்ற இடத்தில் கூட்டமைப்பு படைகள் கூட்டுப் படைகளை தோற்கடித்தன.
- 1866 - ஆஸ்திரியா-ஹங்கேரிக்கு எதிராக இத்தாலியும் புரூசியாவும் அணி திரண்டன.
- 1867 - முதலாவது உலக கண்காட்சி பாரிஸ் நகரில் ஆரம்பமானது.
- 1899 - மார்த்தா பிளேஸ் என்பவர் மின் இருக்கையில் மரண தண்டனை பெற்ற முதற் பெண்.
- 1919 - பஞ்சாபில் நுழையக்கூடாதென்ற தடையை மீறியதால் மகாத்மா காந்தி டில்லி செல்லும் வழியில் கைது செய்யப்பட்டு பம்பாய்க்கு அழைத்துச் செல்லப்பட்டார்.
- 1929 - டில்லி நடுவண் அரசு கட்டடத்தில் பகத் சிங், மற்றும் பத்துகேஷ்வர் தத் ஆகியோர் துண்டுப் பிரசுரங்களையும் குண்டுகளையும் வீசி தாமாகவே சரணடைந்தனர்.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: ஜப்பானியர்கள் பிலிப்பைன்சின் பட்டான் மாநிலத்தைக் கைப்பற்றினர்.
- 1950 - இந்தியாவும் பாகிஸ்தானும் லியாக்கட்-நேரு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.
- 1957 - எகிப்தில் சூயஸ் கால்வாய் மீளத்திறக்கப் பட்டது.
- 1973 - சைப்பிரசில் 32 குண்டுவெடிப்புகள் இடம் பெற்றன.
- 1985 - போபால் அநர்த்தம்: போபாலில் நச்சு வாயுக் கசிவினால் 2,000 பேருக்கு மேல் கொல்லப் பட்ட நிகழ்வுக்காக இந்தியா யூனியன் கார்பைட் நிறுவனத்துக்கெதிராக வழக்குத் தொடர்ந்தது.
- 2004 - சூடான் அரசுக்கும் இரண்டு தீவிரவாத அமைப்புகளுக்கும் இடையில் போர் நிறுத்த உடன்பாடு எட்டப்பட்டது.


**பிறப்புகள**

- 1911 - மெல்வின் கால்வின், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (இ. 1997)
- **1938 - கோபி அன்னான், நோபல் பரிசு பெற்ற முன்னாள் ஐக்கிய நாடுகள் அவைப் பொதுச் செயலர்**

**இறப்புகள**

- 1857 - மங்கள் பாண்டே, பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனியின் படை வீரர் (பி. 1827)
- 1931 - எரிக் கார்ல்ஃபெல்ட், நோபல் பரிசு பெற்ற சுவீடன் எழுத்தாளர் (பி. 1864)
- 1936 - றொபேர்ட் பாரானி, மருத்துவத்துக்கான நோபல் பரிசு பெற்றவர் (பி. 1876)
- 1973 - பாப்லோ பிக்காசோ, ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த புகழ்பெற்ற ஓவியர் (பி. 1881)
- 1984 - பியோத்தர் காப்பிட்சா, நோபல் பரிசு பெற்ற ரஷ்யர் (பி. 1894)
- 1992 - டானியேல் போவெட், மருத்துவத்துக்கான நோபல் பரிசு பெற்றவர் (பி. 1907)

### கோபி அன்னான்



கோபி அன்னான் 1938 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி கானாவின் குமசியின் கோபேண்ட்ரோஸ் பகுதியில் பிறந்தார். இவரும் இவரது சகோதரியும் இரட்டையர்களாவர். கானா நாட்டின் கலாசாரப்படி இரட்டையர்கள் கௌரவமாகக் கருதப்படுவர்.

கானா நாட்டில ஓர் வழக்கமாக குழந்தைகள் பிறந்த நாளினையே அவர்களுக்கு பெயராகச் சூட்டுவர். அவ்வழக்கப்படியே இவருக்கு **"கோஃபி"** (அதாவது வெள்ளிக்கிழமை அவர்களின் மொழியில்) என்று பெயரிட்டனர்.

ஐக்கிய நாடுகள் அவையின் ஏழாவது செயலாளராக இருந்தவர். ஜனவரி 1, 1997 இல் இப்பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட கோபி அன்னான் டிசெம்பர் 31, 2006 அன்று ஓய்வு பெற்றார்.

2001இல் அன்னான், ஐக்கிய நாடுகளுக்கு கூட்டாக "ஒரு சிறந்த ஒழுங்கமைக்கப்பட்ட மற்றும் அமைதியான உலகத்திற்காக உழைத்ததற்காக" அமைதிக்கான நோபல் பரிசு, விருது பெற்றார்.

பெப்ரவரி 23, 2012 முதல் 31 ஒகஸ்ட் 2012 வரை, சிரியாவிற்கான ஐ.நா. அரபு லீக் கூட்டு சிறப்பு பிரதிநிதியாக இருந்தார். ஐ.நா.வின் பற்றாக்குறையான பங்களிப்பு குறித்து சலிப்படைந்த கோபி அன்னான் சிறப்பு பிரதிநிதி பதவியில் இருந்து விலகினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்

## வாழ்க்கை வரலாறு

100



பாலசந்தர் சார்கிட்டே, 'நான் ராகவேந்திரர் படம் பண்ண ஆசைப்படுகிறேன்' என்று சொன்ன போது அவருக்கு ஆச்சரியம்!

'சரிப்பா, உன் விருப்பம், அப்படியே செய்' என்று பாலசந்தர் சார் சொன்னார்.

அதன்படி, 'ஸ்ரீராகவேந்திரர்' படத்தில் நான் நடித்தேன்.

**மனக்கஷ்டம்**

படம் வெளியாகி, அந்தப் படம் சரியாக ஓடவில்லை என்ற நிலை ஏற்பட்டபோது என் மனசுக்கு ரொம்பக் கஷ்டமாக இருந்தது. ஸ்ரீராகவேந்திர சுவாமியிடம் மனமுருகிப் பிரார்த்தித்தேன்.

'நான் பிஸினசுக்காக இந்தப் படத்தில் நடிக்கவில்லை. நீங்கள் எவ்வளவு பெரிய மகான். உங்களுடைய அபாரமான சக்தியைப் பரப்புவதற்காகத்தான் இந்தப்படம் எடுத்தோம். இந்தப் படம் சரியாகப் போகவில்லை என்றால் நீங்கள் என்ன பெரிய மகான்! - ஆண்டவன்கிட்டே நான் எப்போதுமே டைரக்டாதான் பேசுவேன் - 'இல்லை, இல்லை ஸாரி! கொஞ்ச நாட்களுக்கு நான் உன்னைக் கும்பிடமாட்டேன்' என்று வைராக்கியத்தோடு சொல்லிவிட்டு பத்துப் பதினைந்து நாட்கள் நான் ராகவேந்திரரைக் கும்பிடவே இல்லை.

'உன் படத்தை நீயே ஓட்டிக கொள்ள முடியவில்லை. மற்றதெல்லாம் பேசி என்ன பயன்' என்று விட்டுவிட்டேன்.

இந்த சமயத்தில் எதேச்சையாக ராஜ்குமார் சாரை சந்திக்க நேரிட்டது.

ராகவேந்திரர் படம் பார்க்க வேண்டுமென்று சொன்னார். அவருக்கு ஒரு காஸெட் தயாரித்து அனுப்பி வைத்தேன்.

**ராஜ்குமார் அளித்த நம்பிக்கை**

அவர் படத்தைப் பார்த்துவிட்டு, 'நான் கன்னடத்தில் நடித்த ராகவேந்திரர் படம்கூட முதலில் சரியாகப் போகவில்லை. அதற்குப் பிறகு அமோகமாக எப்படிப் போச்சு என்று எனக்கே புரியவில்லை. நீங்கள் கவலைப்பட வேண்டாம். உங்கள் படம் போகப்போக எங்கே ரிலீஸ் ஆனாலும் வெற்றி பெறும்' என்று சொன்னார்.

அவர் படமும் சரி, என் படமும் சரி ஆரம்பத்தில் நன்றாக ஓடவில்லை என்றாலும் ராஜ்குமார் சொன்னபடியே ராகவேந்திரர் படம் அதன்பின் எங்கே போட்டாலும் பிரமாதமான வரவேற்பைப் பெற்றது.

ராஜ்குமார் மூலமாக, ஸ்ரீராகவேந்திர சுவாமிதான் இப்படி ஒரு செய்தியைச் சொல்ல வைத்திருப்பார் என்று நானும் நம்பி 'என்னை மன்னிச்சுடு, அப்பா' என்று மறுபடியும் ஸ்ரீராகவேந்திர சுவாமியைக் கும்பிடத் தொடங்கினேன்.

பிறகுதான் தெரிந்தது, ஸ்ரீராகவேந்திரர் தமிழ்ப்படம் எங்கே போட்டாலும் நல்ல ஆதரவைப் பெற்றது என்கிற விடயம். ஒவ்வொருவரும் இந்தப் படத்தை பக்தி பரவசத்துடன் பார்த்து ரசித்தார்கள்.

**பாட்டியின் 'அட்வைஸ்'**

என் மனதைத் தொட்ட சம்பவம் ஒன்று இந்த சமயத்தில் நிகழ்ந்தது. அப்போது 'மாவீரன்' படம் வெளியான சமயம். கோயம்புத்தூரிலிருந்து விமானத்தில் வந்து கொண்டிருந்தேன்.

எண்பது வயசுப் பாட்டி ஒருவர், என்னிடம் வந்து, 'தம்பி! சொன்னால் தப்பாக நினைக்கமாட்டாயே?' என்று பீடிகையுடன் பேச்சைத் துவக்கினார்.


'ஸ்ரீராகவேந்திரர் படம் பார்த்தேன். அந்தப் பட காஸெட்டையே நான் வாங்கி வச்சிருக்கேன். தினம் தினம் ஒவ்வொரு தடவை அந்தப் படத்தை நான் பார்க்கிறேன்.

உன்னைப் பார்த்தா ஸ்ரீராகவேந்திரர் மாதிரியே இருக்கு. அவ்வளவு பக்தி பரவசமாக மகான வேடத்தில் தோன்றுகிற நீ மோசமான வார்த்தைகளை மற்ற படங்களில் நடிக்கிறபோது பேசுகிறாயே? அப்படிப்பட்ட வார்த்தைகள் உன் வாயிலிருந்து வரலாமா? எனக்கு அது அவ்வளவு சரியாகப் படவில்லை' என்று அந்தப் பாட்டி சொன்னார்.

அந்தப் பாட்டி சொன்ன அன்றைய தினத்திலிருந்து அப்படிப்பட்ட மோசமான வார்த்தைகளை நான் பேசுவதில்லை'

இவ்வாறு ரஜினிகாந்த் கூறினார்.

*(தொடரும்)*



# கருவாச்சி காவியம்

**வைரமுத்து– 111**

**...அ**ஞ்சாறு நாளாவே சொகமில்ல பிள்ளைக்கு. அழுதுக்கிட்டேயிருக்கான் அழகுசிங்கம். ரவ்வும் பகலும் ஒறங்கல; சோறு தண்ணி செல்லல; இருட்டப் பாத்தா அலறி எந்திரிக்குது பிள்ள. வெளிச்சத்தப் பாத்தாலும் வீல்னு கத்துது. சுட்டுக் கெடக்கு நெத்தி; குளுந்து கெடக்கு வகுறு.

ஊர்ப்பட்ட மருந்து குடுத்துப் பாத்தா வைத்தியச்சி; ஒண்ணும் ஆகல.

இருளடிச்சிருக்கு; பிள்ள பயந்து போயிருக்கு. இனிமே மருந்து மாயம் கேக்காது ஆத்தா; மந்திரிச்சாத்தான் கேக்கும்.

வைத்தியச்சியே இப்பிடிச் சொன்னதுக்கு அப்புறம் அவளுக்கு மறு பேச்சு இருக்கா? பிள்ளையத் தூக்கி நடந்துட்டா வடவீர நாயக்கன் பட்டிக்கு.

வடவீர நாயக்கன்பட்டி நாயக்காரு மந்திரிக்கிறதுல மன்னன். வேப்பங் கொழ நாயக்கருன்னுதான் சொல்றது அவர. சொந்தப் பேரு மறந்து போற அளவுக்குத் தொழில் பெருத்த கையி. வத்திப் போனாலும் கரையெல்லாம் பச்சைகட்டி நிக்கிற ஆத்தாங்கர மாதிரி வயசானாலும் லட்சணம் மாறாத ஆளு.

பச்ச உருமா; செவப்புக் கடுக்கன்; கரும்புச் சக்கை மாதிரி கனத்த மீச.



கழண்டு விழுந்திர்ற மாதிரி ரெண்டு கண்ணு; ஈரக் கொலைய இழுத்து இறுக்கிப் புடிக்கிற பார்வை.

கனத்த கம்பளிய விரிச்சு உட்காந்தாரு; தாய்மடியில பிள்ளைய உக்கார வச்சாரு. பொங்கப் பானையில புதுத் தண்ணி ஊத்தி [illegible] கொழைய ஊறப்போட்டாரு கண்ண மூடி முணுமுணு முணுன்னு ஏதோ மந்திரம் சொன்னாரு. வேப்பங் கொழையச் சட்டுன்னு எடுத்து, பிள்ள மூஞ்சியில தண்ணி தெறிக்க அடிச்சு மந்திரிச்சாரு. வேப்பங் கொழத் தண்ணிய நீ குடி மொதல்லன்னு தாய் குடிக்க வச்சாரு; பிள்ளைக்கும் குடு[illegible]ன்னு குடுத்தாரு.

அழுகை அடங்கிப் போச்சு அழகுசிங்கத்துக்கு.

நாயக்கரு மந்திரிச்சதும் குணக்குறி தெரியுதேன்னு குளுந்துபோனா கருவாச்சி; மந்திரம் போட்டு மந்திரிச்சதுல புடிச்ச பீடை விட்டுப் போச்சுங்கறது அவ கணக்கு. ஆனா அது இல்ல காரணம்.

குண்டாச்சட்டியத் தலையில கவுத்த மாதிரி நாயக்கரு கட்டியிருந்த உருமா- சீவீர்ன்னு கண்ணுல அடிக்கிற கடுக்கன், வாயமூடித் தாடையத் தடவுற மீச, அழுதேன்னா கொன்னேபுடுவேன்னு கண்டிப்பாச் சொல்ற கண்ணு... இதுகளையெல்லாம் பாத்துப் பாத்து இந்தப் புதுப்பயத்துல பழைய பயத்த மறந்து போனான் பய.

இந்த நெசம் நாயக்கருக்கும் சின்னப் பயலுக்கும் மட்டும்தான் தெரியும்.

இதுதெரியாததனால கண்ணீர் முட்டுது கருவாச்சிக்கு.

*(தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய தேசியக் கூட்டணியில் மகிந்த பொதுத் தேர்தலில்!

## விமல் கூறுகிறார்

(கொழும்பு)

**முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பிரதமர் வேட்பாளராக நியமிப்பதற்கு ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்றால் புதிய தேசிய கூட்டணியில் மகிந்த ராஜபக்ஷவை பொதுத்தேர்தலுக்கு அழைத்து வருவதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.**

நேற்று முன்தினம் பிபிலயில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். நமது நாடு சந்திக்கும் பாரிய அனர்த்தத்திலிருந்து நாட்டை கட்டியெழுப்பக்கூடிய ஒரே தலைவர் மகிந்த ராஜபக்ஷ மாத்திரமே.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, மகிந்த ராஜபக்ஷ பற்றி குறிப்பிடும் கருத்துக்கள் எதுவும் அவருடைய சொந்த கருத்துக்கள் அல்ல.

தற்போதைய அரசாங்கம் அறிவிக்கும் அறிக்கைகள் அனைத்தும் பனி மழை போல் உருகிக்கொண்டிருக்கின்றது.

முன்னோக்கி சென்று கொண்டிருந்த நாடு இன்று ஒரு இடத்தில் அப்படியே நின்றுவிட்டது.

பொதுத்தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவை பிரதமர் வேட்பாளராக நியமிப்பதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரகட்சி நடவடிக்கை மேற்கொள்ள வில்லை என்றாலும் மகிந்தவை பிரதமர் வேட்பாளராக்கும் போராட் டத்தை கைவிடுவதாகவும் இல்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# மகிந்தவிற்காக 5000 பிக்குமார் நடை பவனி

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது கட்சிகாரர்களுக்கு எதிராக மேற்கொள்ளும் பழிவாங்கலை உடனடியாக நிறுத்துமாறு கோரி புத்த துறவிகள் நடை பவனி செல்ல தீர்மானித்துள்ளார்கள்.

புத்த துறவிகள் 5000இற்கும் அதிகமானோர் கலந்து கொள்ளும் நடை பவனி ஒன்றினை நடத்துவதற்கு தேசிய புத்த துறவிகள் சங்கம் ஆயத்தப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை இந்நடை பவனி மேற் கொள்ளவுள்ளதாக முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார் என சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

நல்லாட்சியில் பழிவாங்கல் இடம் பெற கூடாது. எனினும் தொடர்ந்து பழிவாங்கல் இடம் பெற்றுக்கொண்டே உள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

முன்னாள் ஜனாபதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு வாக்களித்த 58 இலட்ச மக்கள் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிற்கு வந்து அறிக்கை ஒன்று வழங்குவதற்கு சந்தர்ப்பம் ஒன்று ஏற்படுத்தி தருமாறு இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிடம் தேசிய புத்த துறவிகள் சங்கம் விசேட வேண்டுகோள் ஒன்றினை முன்வைப்பதாகவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (இ-5)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## நொச்சி

**Botanical Name:-** Vitex negundo
**Family**:-Verbenaceae
**Engl:**-Indian Privet
**Sinh:**-Nika

பூக்கும் இருவித்திலைத் தாவரம். புதர்ச்செடியாக அல்லது மரமாக வளரக்கூடியது. கூட்டிலை எதிரடுக்கில் 3 முதல் 7வரை சிற்றிலைகள் காணப்படும். பசிய சிற்றிலைகள் நீண்டு நுனி கூரியதாக இருக்கும். சிற்றிலைகளுக்கும் காம்புண்டு. கிளை நுனியில் மலர்கள் கொத்துக் கொத்தாகக் காணப்படும். நீலநிற மலர்கள் அரும்புகள் உருண்டை வடிவானவை. மலரடிச் செதில் சிறியது. 2 செல்களால் ஆன சூலகவட்டம். நடுவில் தடுப்புச் சுவர் உண்டாகி நான்கு பகுதிகளாகி விடும். முட்டை வடிவான விதைகள். விதையுறை கடினமானது. வித்திலைகள் சதைப்பற்றானவை.

உலர் மண்பிரதேசங்களில் இதன் பரம்பலை அதிகமாகக் காணலாம். விதைகள் மூலமும் தண்டுத் துண்டங்கள் மூலமும் இன விருத்தி செய்யலாம்.

இதில் கருநொச்சி, வெண் நொச்சி, நீர்நொச்சிஎனவகைகள்உண்டு. வெண்நொச்சி பரம்பல் பொதுவாகக் காணப்படும். கருநொச்சி அரிதானது.

நீர் நொச்சி ஆற்றங்கரைகளில் பரம்பலைக்காணலாம். வெண்நொச்சியின் மருத்துவ குணாங் களை நோக்கின் இதனுடைய இலை, பூ, வேர், பட்டை அனைத்தும் மருத் துவ குணமிக்கவை.

நொச்சியிலை ஒரு பங்கு எடுத்து 8 பங்கு நீர்விட்டு 1/8 ஆக வற்றக்காய்ச்சி 30 மில்லி காலை, மாலை அருந்த உடல் வன்மையை பெருக்கி வாத நோய்களை தன்னிலைப்படுத்தும்.

நொச்சியிலைகளை நீர்விட்டுக் காய்ச்சி பிள்ளை பெற்றவர்களுக்கு குளிப்பாட்ட இடுப்புவலி, உடல்வலி நீங்கும்.

தலைவலி, பீனிசம் உள்ளவர்கள் நொச்சியிலைகள்ள தலையணை



மாதிரி தயாரித்து தலையை அதில் வைத்துப்படுக்கலாம். அல்லது இலைகளை சுக்குடன் சேர்த்தரைத்து நெற்றியில் பற்றிடலாம்.

இதன் இலைகளை சிறிது சிறிதாக அரித்து ஒரு பொட்டாணியில் கட்டி, அப்பொட்டாணிய்ய ஆவியில் பிடித்து ஒற்றடமிட அல்லது இலையை வதக்கி ஒற்றடமிட கீல் வாயு எனப்படும் மூட்டுவலிகள் [illegible] மாகும்.

இதனுடைய பூக்களை உலர்த்திப் பொடித்து சிறிது பன்னீர், கற்கண்டு சேர்த்துக் கொடுக்க இரத்த வாந்தி குணமாகும்.

ஆஸ்துமா அதிகமாக இருக்கும் போது நொச்சி,மிளகு,பூண்டு, இலவங்கம் சேர்த்து சிறிதள வாகமென்று அச்சாற்றை விழுங்க ஆஸ்துமா நோயின் எழுச்சி அடங்கும்.

நொச்சி இலைகளை கொதிக் கும் தண்ணீரில் போட்டு நீராவி பிடித்தால் கெட்ட வியர்வை அதிகம் வெளியேறி காய்ச்சல் தணியும்.

நொச்சி இலைகளை உப்பு சேர்த்து வதக்கி இளஞ்சூட்டுடன் நெற்றியில் வைத்துக் கட்டினால் தலைவலி,தலைப்பாரம் குறையும். நொச்சி இலைகளை தண்ணீரில் போட்டுத் [illegible] ஏற்படும் உடல் வலி குணமாகும்.

நொச்சி இலைகளை நன் றாக அரைத்து 5 கிராம் அளவு சாப் பிட்டு வர ஈரல்வீக்கம் குறையும்.

நொச்சியிலை ஒரு கைப்பிடி, துளசி இலை ஒரு கைப்பிடி இரண்டையும் தண்ணீரில் போட்டுக் கொதிக்க வைத்து நீராவி பிடித்தால் தலைவலி,உடல்வலி,ஜலதோஷம் குணமாகும்.

நொச்சியிலைச்சாறு 200 மில்லி, நல்லெண்ணெய் 200மில்லி கலந்து தைலப்பதத்தில் காய்ச்சி தலைக்கு குளித்து வந்தால் தலைவலி, கழுத்துவலி,பிடரிவலி போன்றவை குணமாகும்.

நொச்சி இலைச்சாறு 1லீற்றர் எடுத்து நன்றாகக் கொதிக்கவைத்து நான்கில் ஒரு பங்காக சுண்டக் காய்ச்சி தினமும் 60 மில்லி அளவுக்கு குடிப்பதுடன் வலி உள்ள இடத்தில் தேய்த்தால் அனைத்து விதமான மூட்டுவலிகளும் விரைவில் தீரும்.

சீதக்கழிச்சலினால் உண்டாகும் கடுப்பு நீங்க நொச்சிக் கொழுந்து, சுக்குத்தூள் இரண்டையும் ஒரேயளவு சேர்த்து மத்தித்து,சீனி கலந்து பசு நெய் விட்டுக் கிளறி 40 நாட்கள் புசித்துவரின் அக்கடுப்பு முற்றாக நீங்கி உடலும் வன்மையுறும்.

**நொச்சிக்குடிநீர்**

நொச்சிக் கொழுந்து -1பிடி
மிளகு -10கிராம்
வெள்ளைப்பூடு -2கிராம்
வெற்றிலை -10

இலைகளை சேர்த்து 4 புங்கு நீர்விட்டு 1/4 பங்காக சுருக்கிக் காய்ச்சி 30-60 மில்லி வீதம் காலை, மாலை அருந்திவர குளிர்ச்சுரம் நீங்கி உடல்வலியும் தணியும்.

நொச்சியிலைச்சாற்றையும் நல்லெண்ணெயையும் கலந்து வேறு மூலிகைச் சரக்குகளையும் தயாரிக்கப்படும் பீனிசத்தைலமானது எல்லாவித பீனிசங்களையும் நாட்பட்ட ஜலதோஷம், தலைவலி என்பவற்றையும் நீக்கும் தன்மை வாய்ந்தது.

நொச்சியிலைச்சாற்றை பயன்படுத்தி தயாரிக்கப்படும் நொச்சித் தைலம் ஆனது பீனிசம் (நீர்க் கோர்வை), தலைவலி,வாதவில போன்றவற்றிற்கு பயன்படுத்த நல்லகுணம் கிடைக்கும். பீனிசம் உடையவர்கள் நாசியில் 2,3 துளிகள் நொச்சித்தைலத்தை நசியமாகவும் பயன்படுத்தலாம்.

டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைகுனிந்து ஸ்ரீல. சுதந்திரக் கட்சியில் செயற்படமுடியாவிட்டால் வெளியேறவும்

## மகிந்தவை நோக்கி சந்திரிகா



(கொழும்பு)

**முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு விரும்பமென்றால் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியுடன் இணைந்து தலைகுனிந்து செயற்பட முடியும், அவ்வாறு செயற்பட முடியாவிட்டால் வெளியேறவும் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.**

கம்பஹா மாவட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் செயற்பாட்டாளர்களை நேற்று முன்தினம் அழைத்து அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பிரதேச சபை, நகர சபை உறுப்பினர்களை அழைத்துக் கொண்டு செயற்பட்டாலும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை அசைக்க முடியாது.

மகிந்தவிற்கு விருப்பமென்றால் அமைதியாக தலைகுனிந்து தொடர்ந்து ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியில் செயற்பட முடியும். அதற்கான சந்தர்ப்பத்தையும் வழங்க முடியும்.

மகிந்தவிற்கு அவ்வாறு செயற்பட முடியாதென்றால் உடனடியாக கட்சியை விட்டு வெளியேறவும் என மேலும் அவர் தெரிவித்தார். (இ-5)

# 12 பக்கங்கள் களவாக இணைப்பு

(கொழும்பு)

அரசியலமைப்பின் 19 ஆவது திருத்த சட்டமூலம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள நிலையில் அரசாங்கம் மக்களை ஏமாற்றி 12 பக்கங்களை களவாக இணைத்துள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் ஊடகவியலாளர் மாநாடு, எதிர்க்கட்சி தலைவர் காரியாலயத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

12 பக்கங்களை களவாக இணைத்தமை சட்டவிரோதமானதாகும்.

ஒவ்வொருவரின் தேவைக்கேற்ப அரசியலமைப்பை திருத்துவது அபாயகரமான செயற்பாடாகும் என்றும் எதிர்க்கட்சி தலைவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி | சுன்னாகம் | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 30 | 40 | 40 | 40 | 30 | 25 |
| உருளைக்கிழங்கு | 100 | 80 | 90 | 90 | 90 | 90 |
| பச்சைமிளகாய் | 40 | 60 | 60 | 60 | 40-50 | 60 |
| தக்காளி | 60 | 50 | 50 | 60 | 40 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 50 | 60 | 40 | 40 |
| கோவா | 80 | 30 | 50 | 40 | 30 | 40 |
| கரட் | 180 | 140 | 110 | 120 | 100-120 | 120 |
| பூசணி | 30 | 40 | 40 | 40 | 40 | 30 |
| புடோல் | 30 | 40 | 40 | 40 | 30 | 40 |
| வாழைக்காய் | 80 | 60 | 70 | 60 | 40 | 60 |
| சின்ன வெங்காயம் | 80 | 80 | 70 | 80 | 50 | 60 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 90 | 80 | 90 | 90 |
| பாகற்காய் | 120 | 120 | 100 | 80 | 100 | 80 |
| வெண்டிக்காய் | 60 | 80 | 60 | 60 | 40 | 60 |
| கருணைக் கிழங்கு | 60 | 70 | 70 | 80 | 50 | 80 |
| பயற்றங்காய் | 60 | 50 | 70 | 80 | 40 | 40 |
| லீக்ஸ் | 200 | 160 | 140 | 200 | 120-150 | 140 |
| பீற்றூட் | 60 | 50 | 80 | 80 | 40 | 50 |
| கறிமிளகாய் | 200 | 100 | 130 | 80 | 50-70 | 100 |
| முருங்கைக்காய் | 300 | 400 | 300 | 400 | 400-500 | 400 |
| போஞ்சி | 200 | 80 | 100 | 120 | 80 | 100 |
| கத்தரிதம்புள்ள | 20 | 20 | 30 | 30 | — | — |
| கீரை – 1 பிடி | 20 | 20 | 20 | 20 | 30-40 | 25 |
| தேசிக்காய் | 100 | 120 | 80 | 60 | 100 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 25-70 | 60 | 50 | 50-60 | 60 | 60 |
| இராசவள்ளி | 150 | 120 | 100 | 100 | 120 | 120 |
| வெங்காயப்பூ | 100 | 100 | — | — | — | 80 |
| முள்ளங்கி | 40 | 20 | 40 | 60 | 50 | 40 |
| பொன்னாங்காணி | 30 | 20 | 40 | 30 | 30 | 25 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 15 | 10 | 20 |

# இலங்கைக்கு கடத்தப்படவிருந்த 110 கிலோகிராம் கஞ்சா பறிமுதல்

இலங்கைக்கு கடத்திச் செல்வதற்காக இராமேஸ்வரம் அருகேயுள்ள தீவுப் பகுதிகளில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 110 கிலோ கஞ்சாவை பொலிஸார் பறிமுதல் செய்தனர்.

இராமேஸ்வரம் அருகே மன்னார் வளைகுடா கடலில் உள்ள சிங்கிலி தீவு மற்றும் மனோழி தீவில் ஏராளமான கஞ்சா பதுக்கி வைக்கப்பட்டிருப்பதாக இராமேஸ்வர சுங்கத்துறை அதிகாரிகளுக்கு இரகசிய தகவல் கிடைத்தது.


இதனையடுத்து குறித்த தீவுகளில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை சோதனை மேற்கொண்ட சுங்கத்துறை அதிகாரிகள் 110 கிலோ கஞ்சாவை பறிமுதல் செய்தனர்.

பறிமுதல் செய்யப்பட்ட கஞ்சாவின் பெறுமதி 50 இலட்சம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

இதைப் பதுக்கி வைத்தது யார் என்பது தெரியாத நிலையில் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 335

மது மதுஷ்





மயூரதன் மயூரன்




சிந்து சிந்துஜா




லங்கா பாய் வாமன்




கஜன் கஜமுகன்




கண்ணன் ராதாரவி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.

அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க- சீன பூகோள அரசியல் போட்டியில் இந்தியாவின் நிலை!

அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையில் நிலவும் பூகோள-அரசியல் போட்டியில், இந்திய மாக்கடலின் அதிகார சக்தி என்ற வகையில் இந்தியா நிச்சயமாக ஒரு நடுநிலையாளராகவே செயற்படும்.

இவ்வாறு The diplomat ஊடகத்தில், Jhinuk Chowdhury எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய மாக்கடலில் அதிகரித்து வரும் சீனாவின் செல்வாக்கை முறியடிப்பதற்கான இராஜதந்திர முயற்சியாகவே இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, இலங்கை, செசெல்ஸ் மற்றும் மொரிசியஸ் தீவுகளுக்கான பயணத்தை மார்ச் மாதம் மேற்கொண்டிருந்ததாக நம்பப்படுகிறது. ஆனால இது உண்மையல்ல.

அதாவது இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையில் இந்திய மாக்கடல் பிராந்தியத்தின் அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கான போட்டி இடம்பெறவில்லை. மாறாக இப்பிராந்தியத்தில் அமெரிக்காவின் செல்வாக்கு நிலைநிறுத்தப்படுவதை எதிர்ப்பதே சீனாவின் பிரதான நோக்காகும்.

இந்திய மாக்கடல் பிராந்தியத்தில் அமெரிக்கா தன்னை ஒரு 'பாதுகாப்பு வழங்கும் வலைப் பின்னலாக' நிலைநிறுத்த விரும்புகிறது. இதற்கு இந்தியா தனது ஆதரவை வழங்குவது தற்போது அதிகரித்துள்ளது.

இந்திய மாக்கடலின் ஊடாக உலகின் மூன்றில் இரண்டு எண்ணெய்க் கப்பல்கள் பயணிக்கின்றன. அத்துடன் இதன் ஊடாக உலகின் மூன்றில் ஒரு சரக்குக் கப்பல்களும் பயணிக்கின்றன.

இதற்கும் மேலாக இந்திய மாக்கடலானது கிழக்காசியாவிற்கும் ஐரோப்பாவிற்கும் இடையிலான ஒரு முக்கிய கடல்வழிப் பாதையாக உள்ளது. இம்மாக்கடலின் ஊடாக உயர் வர்த்தகச் செயற்பாடுகளில் ஈடுபடும் நாடுகளாக சீனா மற்றும் அமெரிக்கா விளங்குகின்றன.

இதன் ஊடான தனது வர்த்தகப் பாதைகளைப் பாதுகாப்பதற்கான நம்பிக்கையுடன் அமெரிக்கா செயற்படும் அதேவேளையில், உலகின் மிகப்பெரிய எண்ணெய் இறக்குமதியாளராக விளங்கும் சீனா, மலாக்கா நீரிணையைப் பாதுகாக்க வேண்டிய பொருளாதார அவசியத்தைக் கொண்டுள்ளது. சீனா தனது எரிசக்தி இறக்குமதிப் பாதுகாப்புத் தொடர்பாக எப்போதும் அச்சமுற்றுள்ளது.

பேர்சியன் வளைகுடாவுக்கு வெளியே உள்ள எண்ணெய் வளக் கொள்கலன்கள் கொண்டு வரப்படும் பாதைகளைப் பாதுகாப்பது தொடர்பில் அமெரிக்காவின் கண்காணிப்பு நடவடிக்கைளில் தங்கியிருப்பதானது சீனாவுக்கு கவலை அளிக்கிறது.

'தேசிய கடல்சார் உரிமைகள் மற்றும் நலன்களைப் பாதுகாத்தல்' 'சீனாவின் வெளிநாட்டு நலன்களுக்கு நம்பகமான ஆதரவை வழங்கும் இராணுவப் படைகளை உருவாக்குதல்' போன்றன சீனாவின் முக்கிய இரு நோக்கங்களாக உள்ளதாக 2013 இல் வெளியிடப்பட்ட சீனாவின் பாதுகாப்பு அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இவ்விரு பிரதான இலக்குகளையும் அடைந்து கொள்வதற்காக சீனா மிகப் பாரியளவில் கடற் செயற்பாடுகளை நவீனமயப்படுத்தும் முயற்சியில் ஈடுபடத் தொடங்கியுள்ளது. தொலைதூர கப்பல் எதிர்ப்பு ஏவுகணைகள், கப்பல் எதிர்ப்பு ஏவுகணைகள் மற்றும் நீர்மூழ்கிக் கப்பல்கள் போன்ற கடல்சார் ஆயுதங்களை சீனா கொள்வனவு செய்துள்ளது.

இந்திய மாக்கடலில் கடற்படைக் கப்பல்களுக்கான போக்குவரத்துக் கண்காணிப்பு செயற்பாட்டை ஆரம்பித்துள்ளதாக ஜனவரியின் பிற்பகுதியில் சீனாவுக்கான தேசிய பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்தது.

குறிப்பிடத்தக்க எவ்வித பாதுகாப்பு முதலீட்டையும் இந்திய மாக்கடலில் மேற்கொள்ளாது மீண்டும் இங்கே உறுதித்தன்மை நிறுவ முடியும் என்ற நம்பிக்கையுடன் தென் கிழக்காசியாவில் தனது செல்வாக்கை நிறுவ முயற்சித்த அதேவேளையில், மத்திய கிழக்கில் தனது செல்வாக்கைச் செலுத்தும் பணியில் ஈடுபட்ட அமெரிக்கா ஆசியா மீதான தனது வெளியுறவுக் கோட்பாட்டில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்திய மாக்கடலின் மத்தியிலும் மலாக்கா நீரிணைக்கு அருகிலுமுள்ள இந்தியாவுடன் கூட்டுச் சேர்வதன் மூலம், தனது கோட்பாட்டை அடைய முடியும் என அமெரிக்கா கருதியது.



'இந்திய மாக்கடலுக்கும் பசுபிக் மாக்கடலுக்கும் இடையிலான வர்த்தக மற்றும் ஏனைய போக்குவரத்துக்கள் அதிகரித்த வரும் இந்நிலையில் இதை உறுதிப்படுத்துவதற்கான காரணியாக இந்தியாவின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்வது மிக முக்கியமாகும்.

இப்பிராந்தியத்தின் பாதுகாப்பிற்காக இந்தியா தனது இராணுவத் துறையைப் பலப்படுத்துவதானது வரவேற்கத்தக்க பங்களிப்பு என அமெரிக்கா கருதுகிறது' என அமெரிக்காவின் முன்னாள் பாதுகாப்புச் செயலர் சக் ஹக்கேல் 2013இல் குறிப்பிட்டிருந்தார்.

அவுஸ்திரேலியா, ஜப்பான் போன்ற தனது பிராந்தியக் கூட்டாளி நாடுகளுடனும், இந்தியா, பிலிப்பீன்ஸ் மற்றும் வியட்நாம் போன்ற பங்காளி நாடுகளுடனும் இணைந்து இந்திய மாக்கடல் பிராந்தியத்தில் தனது செல்வாக்கை விரிவுபடுத்துவதற்கான முயற்சியில் அமெரிக்கா ஈடுபடுகிறது.

வியட்நாமுடனான இந்தியாவின் நல்லுறவு மற்றும் சிங்கப்பூர், பிலிப்பீன்ஸ், இந்தோனேசியா மற்றும் மியான்மார் ஆகிய நாடுகளுடனான அரசியல்-இராணுவ உறவுகளை விரிவுபடுத்துதல் போன்றன இந்திய மாக்கடல் பிராந்தியத்தில் தனக்கான கூட்டணிகளை உருவாக்குவதற்கான அமெரிக்காவின் முயற்சிகளுக்கு இந்தியா மறைமுகப் பணியாற்றுவதை அடிப்படையாகக் கொண்டதாகும்.

இப்பிராந்திய நாடுகளுக்கு மோடி அண்மையில் பயணம் செய்ததானது தனது அயல்தீவுகளுடன் மிக நெருக்கமான பாதுகாப்பு உறவுகளைப் பலப்படுத்துவதற்காகவே எனக் கூறப்பட்டது.

இதற்கும் மேலாக, மொரிசியசுக்கு இந்தியாவால் உருவாக்கப்பட்ட கரையோர பாதுகாப்பு கண்காணிப்புக் கப்பலை இந்தியா கையளித்தமை, செசெல்சிடம் தனது கண்காணிப்பு வான்கலத்தை வழங்கியமை போன்றன அமெரிக்காவுக்கு இந்திய மாக்கடல் பிராந்தியத்தில் கூட்டணிகளை உருவாக்குவதையே மறைமுக நோக்காகக் கொண்டதாகும்.

இந்தியா, இலங்கை மற்றும் மாலைதீவு போன்ற நாடுகளுடன் இடம்பெறும் 'முத்தரப்பு' தேசிய பாதுகாப்பு ஆலோசனைப் பேச்சுகள் போன்று மொரிசியஸ் மற்றும் செசெல்ஸ் போன்றவற்றுடனும் பேச்சுக்கள் மேற்கொள்ளப்படும் என மோடி பரிந்துரைத்துள்ளார்.

ஏற்கனவே உருவாக்கப்பட்ட முத்தரப்பும் பயிற்சி வழங்குதல், கடற்படையினரின் திறனை வளர்த்தல், தொடர்ச்சியான கூட்டுப் பயிற்சிகள், தேசிய பாதுகாப்பு ஆலோசகர்களுடனான சந்திப்புக்கள் உட்பட பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபடுகின்றன.

அதிகரித்துவரும் இவ்வாறான உறவு மற்றும் உலகம் முழுவதிலிருந்தும் மேலதிக இராணுவத் தொழினுட்பத்தைப் பெற்றுக் கொள்வதற்கான இந்தியாவின் இலகுவான வழிமுறை போன்றன சீனாவைக் கவலைகொள்ள வைத்துள்ளது.

இந்தியாவால் அமெரிக்காவிடமிருந்து இராணுவத் தொழினுட்பத்தை துரிதமாகப் பெற்றுக் கொள்ள முடியும். 'அமெரிக்க-இந்திய உறவு வட்டம்' குறிப்பாக இந்திய மாக்கடலில் உருவாக்கப்படுவதாக யூன் 2013 இல் சீனாவின் சமூக விஞ்ஞானக் கற்கைகளுக்கான பல்கலைக் கழகத்தால் வெளியிடப்பட்ட உத்தியோகபூர்வ கைநூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாதுகாப்பு வர்த்தகம் மற்றும் தொழினுட்ப முயற்சியின் ஊடாக இந்தியாவுடன் அமெரிக்கா ஆழமான மூலோபாயப் பங்காளியாவதற்கான தெளிவான திட்டத்தை பென்ரகன் முன்வைத்துள்ளதாக 2104 இல் வெளியிடப்பட்ட பாதுகாப்பு மீளாய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியாவின் மிகப் பாரிய பாதுகாப்பு வழங்குனராக இருந்த ரஸ்யாவுக்குப் பதிலாக இன்று இந்த இடத்தில் அமெரிக்கா உள்ளது. அமெரிக்காவுடன் இந்தியா மிகப் பலமான உறவைப் பேணினாலும்கூட, இந்தியா தொடர்ந்தும் மூலோபாய தனித்துவத்தைப் பேணும் என சீனா நம்புகிறது.

இந்திய மாக்கடலில் சீனாவும் இந்தியாவும் தமது சொந்த நலன்களை அடைந்து கொள்வதற்கான பூச்சியக் கூட்டல் விளையாட்டில் முற்றிலும் ஈடுபடவிலலை என சீன ஊடகமான Global Times ஆசிரியர் உரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்திய மாக்கடலின் மிகப் பெரிய சக்திகளாக விளங்கும் இந்தியா மற்றும் சீனா என்பன பிராந்திய பாதுகாப்புத் தொடர்பில் பேச்சுக்களில் ஈடுபடுவதற்கான வாய்ப்பு மிகக் குறைவாகும்.

அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையில் நிலவும் பூகோள-அரசியல் போட்டியில், இந்திய மாக்கடலின் அதிகார சக்தி என்ற வகையில் இந்தியா நிச்சயமாக ஒரு நடுநிலையாளராகவே செயறபடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது மன்னிப்பு காலத்தில் 1619 பேர் இராணுவத்தை விட்டு விலகியுள்ளனர்

(கொழும்பு)

இலங்கையில் படையினருக்கு அறிவிக்கப்பட்ட பொதுமன்னிப்பு காலத்தில் 1619 பேர் இரா ணு வத்தை விட்டு விலகியுள்ளனர். உத்தியோகபூர்வமாக அறிவிக்காமல் அல்லது விடுமுறை எடுக்காமல் இராணுவ சேவையிலிருந்து வெளியேறியவர்கள், முறையாக இராணுவத்தை விட்டு விலகிக்கொள்ள சந்தர்ப்பம் அளிக்கும் வகையில் பொது மன்னிப்பு காலம் அறிவிக்கப்பட்டது.கடந்த 2 ஆம் திகதி முதல் 5 ஆம் திகதி வரையில் இவ்வாறு படையினர் விலகிக் கொண்டுள்ளனர்.

பதவி விலகுவதற்காக இராணுவத்திற்குச் சென்ற 1619 பேரில், 1239 பேர் வந்த தினத்திலேயே பதவி விலகிக் கொண்டுள்ளனர்.

எதிர்வரும் 16 ஆம் திகதி வரையில் இந்தப் பொது மன்னிப்புக் காலம் அமுலில் இருக்கும்.

புத்தாண்டுக்கு முன்னதாக பதவி விலகி, சுதந்திரமாக புத்தாண்டை கொண்டாடுமாறு இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ஜயனாத் ஜயவிர தெரிவித்துள்ளார்.பதவி விலக வரும் இராணுவ வீரர்கள் ஆவணங்களுடன் வங்கி கணக்கு விபரங்களையும் கட்டாயம் கொண்டு வர வேண்டுமென அவர் மேலும் கோரிக்கை விடுத்துள்ளார். (இ-5)

# வெளி அழுத்தமே தடைக்கு காரணம்

## குமார் குற்றச்சாட்டு

(கொழும்பு)

வெளியில் இருந்து பிரயோகிக்கப்பட்ட அழுத்தமே தமது செவ்வியை ஐடிஎன் தொலைக்காட்சி ஒளிபரப்பாமைக்கான காரணம் என்று முன்னிலை சோசலிசக் கட்சியின் நடவடிக்கையாளர் குமார் குணரட்ணம் குற்றம் சுமத்தியுள்ளார்.

சுற்றுலா விசாவில் இலங்கைக்கு வந்து அரசியலில் ஈடுபட்டார் என்ற காரணத்துக்காக அவரை நாடு கடத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

எனினும் நீதிமன்றம் அவருக்கான நீதிப்பாதுகாப்பை வழங்கியுள்ளது.


இந்தநிலையில் கடந்த ஏப்ரல் 2ஆம் திகதி இரவு 10 மணிக்கு ஒளிபரப்புவதற்காக குமார் குணரட்ணத்தின் செவ்வியை ஐடிஎன் முன்கூட்டியே பதிவு செய்தது.

எனினும் இரவு 7 மணியளவில் இந்த நிகழ்ச்சி ஒளிபரப்பப்பட மாட்டாது என்று அறிவிக்கப்பட்டது. இதற்கு காரணமாக ஐடிஎன் நிறுவன சட்டஆலோசகர்களின் பரிந்துரையே என்று அந்த நிறுவனம் சுட்டிக்காட்டியிருந்தது.

நிகழ்ச்சி தற்காலிகமாக தடை செய்யப்பட்டதே தவிர நிறுத்தப்படவில்லை என்று அந்த நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இருப்பினும், இதற்கு வெளியில் இருந்து பிரயோகிக்கப்பட்ட அரசியல் அழுத்தமே காரணம் என்று முன்னிலை சோசலிசக்கட்சி குற்றம் சுமத்தியுள்ளது. (இ-5)

# அனல்மின் நிலையங்கள் இனி இலங்கையிலில்லை



(கொழும்பு)

நாட்டில், எதிர்வரும் காலங்க ளில் அனல் மின்நிலையங்கள் நிர்மாணிக்கப்படமாட்டாது என மின் சக்தித் துறை அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

வாயு மூலம் செயற்படும் மின் உற்பத்தி நிலையங்களை அமைக்கவே அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதனிடையே, எதிர்வரும் 2020 ஆம் ஆண்டில் வாயு மூலம் மன்னார் குடாவில் ஆயிரம் மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யக் கூடிய நிலையம் அமைப்பது குறித்த தகவல்களை அமைச்சர் சம்பிக்க ரணவக்க கடந்த வாரம் வெளியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத் தக்கது. (இ-5)

# மனைவி கொலை செய்யப்பட்டுள்ளார் பொலிஸில் கணவர் முறைப்பாடு

சவுதி அரேபியாவுக்கு பணிப் பெண்ணாகச் சென்ற தனது மனைவி அங்கு கொலை செய்யப்பட்டுள்ளதாகவும் அவரது சடலத்தை இலங்கைக்கு எடுத்துவர நடவடிக்கை எடுக்குமாறும் கோரி, அப்பெண்ணின் கணவர் மஸ்கெலியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

மஸ்கெலியா, பிரவுன்ஸ்விக் தோட்டத்தைச் சேர்ந்த கந்தையா தர்ஷினி என்பவரே இவ்வாறு சவுதிக்கு பணிப்பெண்ணாக சென்று அங்கு உயிரிழந்துள்ளார். அவரது கணவரான டபிள்யூ.ஏ.வசந்த குமார என்பவரே மேற்படி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டைச் செய்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

குடும்பத்தில் நிலவிய வறுமை காரணமாக மேற்படி பெண், இரண்டு வருடங்களுக்கு முன்பு வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவரொருவரின் உதவியில் சவுதி அரேபியாவுக்கு பணிப்பெண்ணாகச் சென்றுள்ளார். அப்பெண் பணிபுரிந்த வீட்டிலிருந்து கடந்த 2014.8.24 ஆம் திகதி காணாமல் போயுள்ளார். இந்நிலையில் 4 மாதங்களுக்கு பிறகு அவரது சடலம் பண்ணையொன்றிலிருந்து மீட்கப்பட்டது.

இதுதொடர்பில், குறித்த பண்ணையின் உரிமையாளரால் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்ட நிலையில் சவுதி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வந்துள்ளனர். தனது மனைவி தொடர்பில் அறிந்துகொள்வதற்கு தனக்கு உதவுமாறு குறித்த பெண்ணின் கணவர், வெளிவிவகார அமைச்சிடம் கோரியிருந்தார்.

இந்நிலையில், வெளிவிவகார அமைச்சின் ஆலோசனைக்கமையவே, அவர் இந்த பொலிஸ் முறைப்பாட்டைச் செய்துள்ளார். தனது மனைவியை சவுதிக்கு அனுப்பிய வெளிநாட்டு முகவருக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்குமாறும் மனைவியின் சடலத்தை இலங்கைக்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அவர் அந்த முறைப்பாட்டில் கோரியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இச்சம்பவம் தொடர்பில் மஸ்கெலியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-5)

# நேரக்கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் சித்திரை புத்தாண்டை முன்னிட்டு சிகை அலங்க ரிப்பு நிலையங்களுக்கு நேற்றுத் தொடக்கம் எதிர்வரும் 13 ஆம் திகதி திங்கட்கிழமை வரை நேரக்கட்டுப்பாடு தளர்த்தப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட சிகை ஒப்பணையாளர் சங்கங்களின் ஒன்றிய செயலாளர் ஜி.சுரேந்தர் அறிவித்துள்ளார்.

12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நிலையங்களைத் திறந்து சேவையாற்ற முடியும். 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தொடக்கம் வழமை போன்று நேரக்கட்டுப்பாடு அமுலில் இருக்கும். அத்துடன் சனிக்கிழமைகளில்காலை 7 மணிக்கு நிலையங்களைத் திறந்து சேவையாற்ற முடியும் என்பதுடன் மூடும் நேரம் தளர்த்தப்பட்டுள்ளது.

இதனை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

# இன்று ஒரு தகவல்

## துரும்பு

காவியங்களைப் படைக்கிற மேதைகள் சிறந்த கவிதைகளை எல்லாம் எழுதுகிறார்கள். ஆனால் அந்தக் கவிதைகளை எப்படிப் படித்து அனுபவிக்க வேண்டும் என்று எங்களுக்கு எடுத்துச் சொல்கிறவர்கள் யாரென்றால் அவற்றிற்கு வியாக்கியானம் செய்கிறவர்கள்தான். அவர்களுடைய அணுகுமுறையினால்தான் அந்தக் கவிதைக்குள் புதைந்து கிடக்கின்ற கருத்துக்களையெல்லாம் எங்களால் புரிந்துகொள்ள முடிகின்றது.

சில நேரங்களில் மூலத்தைவிட விளக்கம் இன்னும் அழகாயிருக்கும். விதைகளைவிடப் பூக்கள் அழகாய் இருப்பதில்லையா? அதுமாதிரி . அப்படிக் கம்பனுடைய கவிதைகளுக்கு மிகச் சிறந்த வியாக்கியானம் செய்தவர் விக்கியானச் சக்கரவர்த்தியான பெரிய வாச்சான் பிள்ளை. அவர்கள் ஓர் இடத்தை எடுத்துக்கொண்டு அதை எத்தனை விதமாக அணுகிப் பார்க்கிறார்கள். எத்தனை விதமாக அதை அனுபவித்துப் பார்க்கிறார்கள் என்பதுதான் பிரமிப்பாக இருக்கின்றது. இப்ப பாருங்கள் கம்பனுடைய காவியத்தில் ஒரு காட்சி.

இலங்கையில் அசோகவனத்தில் சீதாபிராட்டி, சோகமே வடிவாக உட்கார்ந்திருக்கிறார்கள். அப்ப காமவசப்பட்ட இராவணன் அங்கே போய் நின்று பல்வேறு விதமான வார்த்தைகளினால் சீதையை வசீகரம் செய்யலாமென்று முயற்சி செய்கிறார். ஆனால் சீதாபிராட்டி அதை பொருட்படுத்தவே இல்லை. ஆனால் அதே சமயத்தில் தன்னுடைய எதிர்ப்பை இராவணனுக்குக் காட்ட வேண்டுமென்று நினைக்கிறார். அதற்காக என்ன செய்தார்களென்றால் ஒரு துரும்பை அப்படிக் கிள்ளிப் போட்டாராம். சீதை அந்தத் துரும்பைப் பார்த்து பேசுகின்ற மாதிரி அந்த இடத்தில் ஒரு காட்சி வருகின்றது.

அந்தத் துரும்பைக் கிள்ளிப் போட்டு ஏன் பேசினார்கள் என்பற்குத்தான் அவ்வளவு வியாக்கியானம் வருகின்றதாம். அதில் ஒரு காரணம் என்னென்று சொல்லப்படுகின்றதென்றால் பிற ஆடவரை உற்றுப் பார்த்துப் பேசுவது, பெண்கள் செய்யத்தகாத காரியங்களில் ஒன்று. அதனால் புல்லைக் கிள்ளிப் போட்டு அதைக் காரணமாக வைத்து அதைப் பார்த்துப் பேசுகின்ற மாதிரி சீதாபிராட்டி தன்னுடைய எண்ணக் கருத்துக்களை அங்கே வெளியிட்டார்கள். அதற்காகத்தான் அந்தத் துரும்பைக் கிள்ளிப் போட்டார்கள் என்பது ஒரு காரணம். அடுத்துச் சொல்லப்படுகின்ற ஒரு காரணம் கேலியானது.

அதாவது இந்தப் புல்லு நான் சொல்வதைக் கேட்கவா போகின்றது. அதேபோல அந்தப் புல்லுக்குச் சமமாக இருக்கின்ற நீ நான் சொல்வதைக் கேட்கவா போகின்றாய் என்ற பாவனையிலேயேயும் அவர்கள் பேசினார்களாம்.

இராவணா, நீ அறிவில்லாதவன். உன்னோடு ஒப்பிடுகின்ற போது இந்தப் புல்லு கொஞ்சமாவது அறிவுடையது. அதனால் தான் நான் இந்தப் புல்லைப் பார்த்துப் பேசினேன் என்று சொல்கின்ற மாதிரி அந்தப் புல்லைக் கிள்ளிப் போட்டுப் பேசினார்களாம்.

அடுத்துப் பார்த்தீர்களென்றால் அந்தப் புல்லைத் தன்னுடைய சக்தியினால் அறிவுடையதாக்கி அந்தப் புல்லைக் கேட்பதைப்போல பாவனை செய்வதன் மூலமாக அந்தச் சக்தியை இராவணன் உணர்ந்து கொள்ள முடியுமென்று காட்டுவதற்காக அந்தத் துரும்பைக் கிள்ளிப் போட்டார்களாம்.

இன்னொன்று நெருப்பை நெருங்கினால் அப்படி நெருங்குகிற துரும்பு எரிந்து சாம்பலாவதுபோல என் கற்பு என்கின்ற நெருப்பிடம் தவறா நடந்துகொண்டால் சாம்பல் ஆகிவிடுவாய் என்பதைக் காட்டுவதற்காகவும் துரும்பைக் கிள்ளிப்போட்டுப் பேசினாங்களாம்.

இன்னொரு முக்கியமான காரணம் என்னவென்றால் இந்தப் புல்லைக்கிள்ளி எடுத்ததை மாதிரி என்னுடைய கணவன் இராமன் உன்னுடைய தலையைக் கிள்ளி எறிவான் என்பதை உணர்த்துகிறது மாதிரி அப்படித் துரும்பைக் கிள்ளிப் போட்டதாகவும் சொல்கிறார்கள்.

ஒருவிடயத்தைப் பற்றி மேலும் மேலும் ஆராய்ச்சி செய்து அதன் பொருளை உணர்ந்து அனுபவிக்கிறது நல்லதுதான். ஆனால் சில பேர் தப்பான அர்த்தத்தில் ஒன்றைப்பற்றிப் புரிந்து கொண்டு திண்டாடிட்டு இருப்பாங்க.

ஒருத்தர் இன்னொருத்தரிடம் கேட்டார். இந்த உலகத்தில் ஆவி என்பது இருக்கின்றதா. அதற்கு அவர் நிச்சயமாக இருக்கென்று சொன்னார். எப்படி இவ்வளவு கரெக்டா சொல்கிறீர்கள் என்று கேட்டதற்கு, ஆவி இல்லையென்றால் எப்படீங்க இட்லி அவிக்க முடியும் என்றாராம் அவர். இவர் சொல்கின்ற ஆவி வேற. அவர் சொல்கின்ற ஆவி வேற இல்லையா?

*கலைமாமணி முனைவர் இளசை சுந்தரம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் விடுதலைப் புலிகள்?



முக்கியமான தருணமொன்றில் இத்தகைய குற்றச்சாட்டு ரணில் மீது சுமத்தப்பட்டபோது, ஐக்கிய தேசியக் கட்சி ஆடிப்போய் விட்டது.

உடனடியாகவே அந்தத் தடையை மறுபடியும் நீடிக்க வேண்டும் என்று கோரி, ஐரோப்பிய ஒன்றியத்துக்கு கடிதம் எழுதினார் ரணில்.

அதனை நாடாளுமன்றத்தில் வெளியிட்டு, தனக்கும் விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கிய நீதிமன்றத் தீர்ப்புக்கும் எந்த தொடர்பும் இல்லை என்று நிரூபிக்கமுயன்றார்.

அந்த நாடகத்தின் தொடர்ச்சி இப்போது நடந்துகொண்டிருக்கிறது.

ஐரோப்பிய ஒன்றியத்திடம், முன்னர் ரணில் விக்கிரமசிங்க விடுத்த வேண்டுகோளை அடுத்தே, விடுதலைப் புலிகள் மீதான தடை நீடிக்கப்பட்டுள்ளது என்கிறார் பிரதி வெளிவிவகார அமைச்சர் அஜித் பெரேரா.

இந்த தடைக்காக பிரசெல்ஸ், லண்டன், புதுடெல்லி, வோஷிங்டன் உள்ளிட்ட தலைநகரங்களில் இலங்கை அரசாங்கம் பேச்சுக்களை நடத்தியதாகவும் இது இலங்கை அரசாங்கத்தின் மிகப்பெரிய இராஜதந்திர வெற்றி என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

அதாவது, விடுதலைப் புலிகளுக்கும் ஐ.தே.க. வுக்கும் இடையில் தொடர்புகள் இருப்பதாக முன்னர் மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் கூறிய குற்றச்சாட்டுகளை பொய் என்று நிரூபிக்கவும் தாமும், விடுதலைப் புலிகளுக்கு எதிரானவர்களே என்று காட்டுவதற்கும் இப்போதைய அரசாங்கம் முயற்சிக்கிறது.

தேர்தல் ஒன்று மீண்டும் வரவுள்ள சூழலில், விடுதலைப் புலிகளை வைத்து அரசியல் ஆதாயம் தேடவே கொழும்பு அரசியல் களம் முயற்சிக்கிறது.

விடுதலைப் புலிகளின் பெயரை பயன்படுத்தும் பாத்திரங்கள் மாறியுள்ளனவே தவிர, அந்தப் பாத்திரங்களின் அடிப்படை நோக்கம் மாறவில்லை.

விடுதலைப் புலிகளை வைத்து அரசியல் ஆதாயம் தேடும் நோக்கமும் பெரும்பான்மையின மக்களிடத்தில் உள்ள விடுதலைப் புலிகள் எதிர்ப்புணர்வை தமது அரசியல் நலனுக்காக திருப்பிக் கொள்வதிலும இன்றுவரை நாட்டம் காண்பிக்கப்படுகிறது. இப்போது நடந்திருப்பதும் அது தான்.

விடுதலைப் புலிகள், இலங்கையில் ஆயுதம் ஏந்திப் போராடிய ஓர் இயக்கமாக இருந்தாலும், அதன் நேர்மறையானதோ, எதிர் மறையானதோ செல்வாக்கு இலங்கை அரசியலில் எங்கும் வியாபித்திருக்கிறது.

புலிகள் இயக்கம் அழிக்கப்பட்டு ஆறு வருடங்களாகிவிட்ட நிலையிலும், அதனை வைத்து அரசியல் நடத்தப்படுகிறது என்றால், அதனை சுற்றியே இலங்கையின் அரசியல் அச்சு சுழல்கிறது என்றால், புலிகள் இயக்கம் தோற்று விட்டதாக கருத முடியாது.

இந்த தோல்வி கொள்கை ரீதியான, கோட்பாட்டு ரீதியான தோல்வியையே சுட்டிக்காட்டுகிறது.

விடுதலைப் புலிகளின் அடையாளமே இருக்கக்கூடாது என்பதற்காக ஒரு புல்பூண்டு கூட மிஞ்சாமல் அதன் தடயங்களை அழித்த அரசாங்கமே, அவர்களை மக்களின் முன்பாக அவ்வப்போது நினைவுபடுத்திக் கொள்கிறது. அதனை வைத்து அரசியல நடத்துகிறது.

இது, விடுதலைப் புலிகள் இயக்கம் கொள்கை ரீதியாக செத்து விடவில்லை என்பதற்கு சிறந்த உதாரணம்.

விடுதலைப் புலிகள் இயக்கம் உயிர்ப்புடன் செயற்பட்ட காலத்தில், அதனைச் சுற்றியே தெற்கின் அரசியலும் பின்னப்பட்டுக் கிடந்தது.

விடுதலைப் புலிகளுடன் போரிடுதல் அல்லது அவர்களுடன் சமாதானத்தை ஏற்படுத்திக்கொள்ளுதல் என்று ஏதாவதொரு மையத்தை முன்வைத்தே கொழும்பு அரசியல் நகர்ந்தது.

காலத்துக்குக் காலம் அந்த போக்கு மாற்றம் இருந்தாலும், அதன் அச்சாணியாக இருந்தது விடுதலைப் புலிகள்.

உதாரணத்துக்கு, சந்திரிகாவை சமாதான தேவதையாக ஆட்சியில் அமர்த்தியதுக்கும் விடுதலைப் புலிகளுடன் அவர் சமாதானம் செய்துகொள்வார் என்ற நம்பிக்கையே காரணம்.

பின்னர் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கமும் அதுபோன்றதொரு நம்பிக்கையிலேயே. 2001 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது.

அவையிரண்டும் விடுதலைப் புலிகளுடன் அமைதியான இணக்கப்பாட்டுக்காக ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள்.

2005 ஆம் ஆண்டுக்கு பின்னர், மஹிந்த ராஜபக்ஷவின் அரசியல் வெற்றிகள் அனைத்துமே விடுதலைப் புலிகளை தோற்கடிப்பதற்காகத் தான்.

ஆக, காலத்துக்குக் காலம் விடுதலைப் புலிகளை மையப்படுத்தியே, கொழும்பு அரசியலின் நிலை மாற்றங்கள் தோற்றம் பெற்றன.

இப்போதும்கூட அந்த நிலை பெரியளவில் மாற்றம் காணவில்லை.

அதேவேளை, இப்போது விடுதலைப் புலிகள் இலங்கையில் இயங்கு நிலையில் இல்லை. அவர்களால் இப்போதா அல்லது இன்றும் சிறிது காலத்துக்குள்ளாகவோ, ஒரு ஆயுதப் போராட்டத்தை மீள ஆரம்பிக்க முடியாது என்ற கருத்தே எல்லா படைத்துறை வல்லுனர்களிடமும் உள்ளது.

அத்தகையதொரு ஆயுதபபோராட்டத்துக்கான முகிழ்நிலை ஏதும் இப்போது இல்லை என்பதுடன், அத்தகைய வாய்ப்புகளை தடுப்பதற்கான எல்லா முன்னேற்பாடுகளுடனும் அரசாங்கம் இருக்கிறது.

இப்படியான நிலையில், ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றம், புலிகள் இயக்கம் மீதான தடையை நீக்க எடுத்த முடிவினால் எந்தப் பயனும் ஏற்பட்டிருக்காது.

அது புலிகள் இயக்கத்தில் புலம் பெயர்ந்துள்ளவர்கள் மத்தியில் முரண்பாடுகளையே தீவிரப்படுத்தியிருக்கும்.

அதுபோலவே, இப்போது மீண்டும் தடை விதிக்கப்பட்டுள்ளதிலும், பெரிய நன்மைகள் என்று கூற முடியாது. ஆனால், அதனை பூதாகாரப்படுத்திக் காட்ட முனைகிறது அரசாங்கம்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தடைமீளவிதிக்கப்படாதுபோனால, தடைசெய்யப்பட்டுள்ள புலிகளின் சொத்துக்கள் விடுவிக்கப்பட்டு விடும் என்றும் பில்லியன் கணக்கான டொலர்பணத்தை வைத்து அவர்கள் ஆயுதப் போராட்டத்தை மீள ஆரம்பித்துவிடலாம் என்றும் பிரதி வெளிவிவகார அமைச்சர் அஜித் பெரேரா கூறியிருக்கிறார்.

ஆயுதப் போராட்டம் ஒன்றுக்கு வெறும் பணம் மட்டும் அடிப்படையாகிவிட முடியாது. அந்த உண்மை அரசாங்கத்துக்கு தெரியவில்லை.

வெறும் நிதியை வைத்து போராட்டத்தை நடத்திவிட முடியாது.

ஓர் ஆயுதப் போராட்டத்துக்கான முகிழ்நிலை அதற்கும் அப்பால் பல விடயங்களை உள்ளடக்கியது.

தமிழர்கள் மீண்டும் ஆயுதம் ஏந்தமாட்டார்கள், அதற்கான வாய்ப்புகள் முற்றிலும் இல்லை என்று கூறமுடியாது.

அதற்காக வாய்ப்புகள் இப்போது இல்லை. அத்தகைய வாய்ப்புகளை இனியும் உருவாகாமல் தடுக்கும் பொறுப்பு அரசாங்கத்திடமே உள்ளது.

தமிழர்களுக்கான உரிமைகள் விடயத்தில், அரசாங்கம் கடைப்பிடிக்கும் கொள்கையே அந்த முகிழ்நிலையை தீர்மானிக்கும் முக்கிய விடயமாக இருக்கும்.

இதனை தற்போதைய அரசாங்கம் எந்தளவுக்கு புரிந்து கொண்டுள்ளது என்று தெரியவில்லை.

ஆனால், விடுதலைப் புலிகளை வைத்து நன்றாகவே அரசியல் நடத்தலாம் என்று மட்டும் தெரிந்துவைத்திருக்கிறது.

(முற்றும்)

-கே.சஞ்சயன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசுப்படை- கிளர்ச்சியாளர்கள் கடும்மோதல்;53 பேர் உயிரிழப்பு

**ஏமனில் கிளர்ச்சியாளர்களுக்கும், அரசு ஆதரவுப் படையினருக்கும் இடையில் நடைபெற்று வரும் மோதலில் நேற்று முன்தினம் மட்டும் 54 பேர் உயிரிழந்ததாக மருத்துவ, இராணுவ வட்டாரத் தகவல்கள் உறுதிப்படுத்தியுள்ளன.**



ஏடன் நகரைக் கைப்பற்றுவதற்காக கிளர்ச்சியாளர்களும், அதனைப் பாதுகாக்க ஜனாதிபதி அபெத் ரப்போ மன்சூர் ஹாதிக்கு ஆதரவான படையினரும் கடந்த சில வாரங்களாக சண்டையிட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், அந்த நகரின் மருத்துவ அதிகாரி ஒருவர் கூறுகையில், இரு தரப்பினருக்கும் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற மோதலில் 17 பொது மக்கள் உயிரிழந்தனர். அரசு ஆதரவுப் படையினர் 10 பேர் கொல்லப்பட்டனர் என்றார்.

இதுதவிர, 26 கிளர்ச்சியாளர்கள் மோதலில் உயிரிழந்ததாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. கடந்த பெப்ரவரி மாதம் ஹூதி கிளர்ச்சியாளர்கள் ஏமன் தலைநகர் சனாவைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து, ஜனாதிபதி மன்சூர் ஹாதி ஏடன் நகரில்தான் தங்கியிருந்தார்.

எனினும் கிளர்ச்சியாளர்கள் ஏடன் நகரை நோக்கி முன்னேறி வந்ததையடுத்து, கடந்த மாதம் அங்கிருந்து வெளியேறி சவுதி அரேபியாவில் அடைந்தனர் தஞ்சம் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## ஜெயலலிதா தொடர்பான வழக்கின் தீர்ப்புக்கு உச்சநீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவு

(சென்னை)

சொத்துக் குவிப்பு வழக்கில் இந்தியாவின் தமிழ்நாட்டு முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மேன்முறையீட்டு மனு மீது தீர்ப்பு வழங்க, எதிர்வரும் 15ஆம் திகதி வரை இடைக்காலத் தடை விதித்து உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஜெயலலிதா மேன்முறையீடு வழக்கில் அரசு தரப்பு சட்டத்தரணி பவானி சிங்கை நீக்கக் கோரி திமுக பொதுச்செயலாளர் க.அன்பழகன் தரப்பில் உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

பவானி சிங் நடுநிலையாக செயற்படவில்லை. எனவே அவரை நீக்கிவிட்டு, அரசு தரப்பில் வாதாட வேறு சட்டத்தரணியை நியமிக்கும் வரை ஜெயலலிதா வழக்கு விசாரணையை நிறுத்தி வைக்க வேண்டும் என்றும் அந்த மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த மனு நேற்று உச்ச நீதிமன்ற நீதிபதிகள் மதன் பி லோக்கூர், பானுமதி கொண்ட அமர்வு முன்னர் விசாரணைக்கு வந்தது.

அன்பழகன் தரப்பில் சட்டத்தரணிகள் அர்ஜுனா, சண்முக சுந்தரம் ஆகியோரும், ஜெயலலிதா தரப்பில் மூத்தசட்டத்தரணிகள் பாலி எஸ்.நாரிமன், துளசி ஆகியோரும் ஆஜராகி வாதாடினர்.

இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள், அன்பழகன் மனு மீதான தீர்ப்பு எதிர்வரும் 15ஆம் திகதி வழங்கப்படும் என்றனர்.

மேலும், சொத்துக் குவிப்பு வழக்கில் ஜெயலலிதா, சசிகலா, இளவரசி, சுதாகரன் உள்ளிட்ட 4 பேரின் மேன்முறையீட்டு மனு மீதான தீர்ப்பை எதிர்வரும் 15ஆம் திகதி வரை வழங்க இடைக்கால தடை விதித்து உத்தரவிட்டனர்.

சொத்துக் குவிப்பு மேன்முறையீட்டு மனு மீதான தீர்ப்பு இன்று வழங்கப்படலாம் என அதிமுகவினர் எதிர்பார்த்து வந்த நிலையில், தீர்ப்புக்கு இடைக்கால தடை விதித்துள்ளது அதிமுகவினர் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை ஜெயலலிதா தொடர்பான வழக்கின் தீர்ப்பு அதிமுகவினருக்கு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என அரசியல் ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## சோமாலியாவில் தீவிரவாதிகளின் முகாம் மீது கென்யா விமானங்கள் குண்டு வீசித்தாக்குதல்

(நைரோபி)

கென்யாவில் காரிஸ்சா பல்கலைக்கழகத்தில் சோமாலியாவின் அல்ஷபாப் தீவிரவாதிகள் புகுந்து துப்பாக்கி சூடு நடத்தியதில் 142 மாணவர்கள், 3 பொலிஸ் அதிகாரிகள் மற்றும் 3 இராணுவ வீரர்கள் பலியாகினர்.

அதற்கு பழி வாங்கும் நடவடிக்கையாக கென்யா இராணுவம் சோமாலியாவில் கெடோ மாகாணத்தில் உள்ள அல்ஷபாப் தீவிரவாதிகளின் 2 முகாம்கள் மீது நேற்று முன்தினம் குண்டு வீசி தாக்கின.

அதில் 2 முகாம்களும், 2 நிலைகளும் முற்றிலும் அழிக்கப்பட்டன. இந்த தகவலை கென்யா இராணுவ செய்தித் தொடர்பாளர் டேவிட் ஒபோன்யோ தெரிவித்துள்ளார்.

ஆனால் இத்தாக்குதலில் உயிரிழப்பு குறித்த எந்த தகவலும் வெளியிடவில்லை. பல்கலைக்கழக தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்காக கென்யா அரசு தேசிய அஞ்சலி தினம் அறிவித்துள்ளது.

அதன் 2 ஆவது நாளில் பழிக்கு பழி வாங்கும் நடவடிக்கையாக அல்ஷபாப் தீவிரவாதிகள் முகாம்கள் மீது கென்யா போர் விமானங்கள் குண்டு வீசியுள்ளது. (இ-5)

## உலகின் முதல் அணுகுண்டு வெடித்து 70ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன

உலகில் முதல் முறையாக அணுகுண்டு வெடித்து பரிசோதிக்கப்பட்ட அமெரிக்காவின் "ஒயிட் சாண்ட்" ஏவுகணை சோதனை மையத்தில், அந்த நிகழ்வின் 70ஆம் ஆண்டு நினைவு தினம் கடந்த சனிக்கிழமை கடைப்பிடிக்கப்பட்டது.

இதையொட்டி நியூ மெக்ஸிகோ மாகாணத்தில் அமைந்துள்ள பரிசோதனை நினைவுச் சின்னத்தைப் பார்வையிட நாடு முழுவதிலும் இருந்து ஏராளமானோர் வந்தனர்.

இதுகுறித்து "ஒயிட் சாண்ட்" சோதனை மைய செய்தித் தொடர்பாளர் எரின் டாரன்ஸ் கூறியதாவது,

70 ஆண்டுகளுக்கு முன் இங்கு நிகழ்த்தப்பட்ட அணுகுண்டுப் பரிசோதனை, உலக வரலாற்றின் போக்கையே மாற்றியமைத்தது.

இரண்டாம் உலகப் போரை உடனடியாக முடிவுக்குக் கொண்டு வர இந்தச் சோதனைதான் உதவியது என்றார் அவர்.



1945-ஆம் ஆண்டு ஜூலை 16 ஆம் திகதி, அலேமாகோடா நகருக்கு அருகிலுள்ள பகுதியில் உலகின் முதல் அணுகுண்டை விஞ்ஞானிகள் பரிசோதித்துப் பார்த்தனர். அந்தப் பரிசோதனைக்கு "டிரினிட்டி" என அவர்கள் இரகசியக் குறியீட்டுப் பெயரிட்டிருந்தனர்.

அந்தப் பரிசோதனை வெற்றியடைந்ததைத் தொடர்ந்து, ஜப்பானின் ஹிரோஷிமா, நாகசாகி நகரங்கள் மீது அடுத்தடுத்து இரண்டு அணு குண்டுகள் வீசப்பட்டன.

அந்த அணுகுண்டுகள் ஏற்படுத்திய பேரழிவால் நிலைகுலைந்த ஜப்பான், அமெரிக்காவிடம் நிபந்தனையின்றி சரணடைந்தது.

அதனைத் தொடர்ந்து பல ஆணடுகளாக, பல கோடி உயிர்களை பலிவாங்கி வந்த இரண்டாம் உலகப் போர் முடிவுக்கு வந்தது.

அதற்கு வித்திட்ட "டிரினிட்டி" அணுகுண்டுப் பரிசோதனையை பலர் பாராட்டினாலும், அந்தப் பரிசோதனையினால் ஏற்பட்ட அணுக்கதிர்வீச்சில், சுற்றியுள்ள பகுதிகளில் பலர்பாதிப்புக்குள்ளாகி வருவதாக "டுலாரோஸா படுகையின் பாதிக்கப்பட்டோர்" என்ற அமைப்பினர் கடந்த சனிக்கிழமை கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## சுற்றுலாத்தளங்களாக மாறிய பிரதமர் மோடியின் பிறந்தவீடு

(சென்னை)

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி பிறந்த வீடு, அவர் தேநீர் விற்ற புகையிரத நிலையம் ஆகியவை தற்போது பிரபலமான சுற்றுலா தளங்களாக மாறியுள்ளள.

குஜராத் சுற்றுலா கழகம் தனியார் நிறுவனத்துடன் சேர்ந்து ஏற்பாடு செய்துள்ள ஒரு சுற்றுலா திட்டத்தில் 600 ரூபாய் செலுத்தினால் மோடியின் பூர்வீக பூமியூான வாட்நகருக்கு சென்று வரலாம்.

இத்திட்டத்திற்கு "மோடியின் கிராமத்தில் இருந்து ஒரு எழுச்சி" என பெயரிடப்பட்டுள்ளது.

அகமதாபாத் மற்றும் காந்தி நகரில் இருந்து மேற்கொள்ளப்படும் இந்த பயணத்தின் போது மோடி பிறந்த அவரின் மூதாதையர் வீடு, அவர் படித்த தொடக்கப்பள்ளி, மேடை நாடகங்களில் கலந்து கொண்ட உயர்நிலை கல்லூரியையும் சுற்றுலா பயணிகள் பார்க்க முடியும்.

மோடியை பற்றி மேலும் தெரிந்துகொள்ள விரும்பினால் அவருடைய பாடசாலை நண்பர்களையும் பார்த்து பேசுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது.

மேலும் மோடி வாத்தியங்கள் வாசித்து வந்த கோவிலுக்கும் அழைத்து செல்லப்படுகிறார்கள்.

இந்த பயணத்தின் முக்கிய இடமாக மோடி தேநீர் விற்ற வாட்நகர் புகையிரத நிலையம் இடம்பெற்றுள்ளது.

சாதாரண தேநீர் விற்கும் சிறுவன் எப்படி இந்திய நாட்டின் அதிகாரம் மிக்க பிரதமர் பதவியை அடைந்தார் என்பதை தெரிந்து கொள்ள சுற்றுலா பயணிகள் அதிகம் ஆர்வம் காட்டுகிறார்கள் என குஜராத் சுற்றுலா கழகம் தனது இணையதளத்தில் தெரிவித்துள்ளது. (இ-5)

## சூரியனைவிட 8 மடங்கு பெரிய நட்சத்திரம் ஒன்று உதயமானது

### 300 மடங்கு பிரகாசமானதாம்

பூமியில் இருந்து 4200 ஒளி ஆண்டுகள் தொலைவில் புதிய நட்சத்திரம் உதயமாகி உள்ளது. இந்த நட்சத்திரம் சூரியனைவிட எட்டு மடங்கு பெரிதாகக் காணப்படுகிறது. மேலும் சூரியனைவிட 300 மடங்கு அதிகமாக பிரகாசிக்கிறது.

அமெரிக்காவின் நியூ மெக்ஸிகோ பாலைவனத்தில் அமைக்கப்பட்டுள்ள சக்திவாய்ந்த தொலைநோக்கிகள் மூலம் கார்லஸ் காரனேகா கொன்சாலேஸ் தலைமையிலான விஞ்ஞானிகள் 1996 ஆம் ஆண்டில ஒரு ஐதரசன் வாயுக் கூட்டம் ஒன்று சேருவதை கண்டுபிடித்தனர். அதனை விஞ்ஞானிகள் தொடர்ந்து கண்காணித்து வந்தனர்.

அந்த வாயு கூட்டம் கடந்த 18 ஆண்டுகளாக ஒன்றோடு ஒன்று கலந்து இப்போது புதிய நட்சத்திரமாக உதயமாகியுள்ளது.

இந்த குழந்தை நட்சத்திரத்துக்கு விஞ்ஞானிகள் W75N(B)-VLA2 என்று பெயரிட்டுள்ளனர். இது பூமியில் இருந்து 4200 ஒளி ஆண்டுகளுக்கு அப்பால் உள்ளது. சூரியனைவிட எட்டு மடங்கு பெரிதாகக் காணப்படுகிறது. மேலும் சூரியனைவிட 300 மடங்கு அதிகமாகப் பிரகாசிக்கிறது.

இந்த நட்சத்திரத்தை விஞ்ஞானிகள் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர். இதன்மூலம் சூரிய குடும்பம் உட்பட விண்வெளியின் பல்வேறு இரகசியங்களை கண்டறிய முடியும் என்று விஞ்ஞானிகள் உறுதியாக நம்பிக்கை தெரிவித்துள்ளனர். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 100 நாட்கள் திட்டம் குறித்து மன்னாரில் கலந்துரையாடல்

(மன்னார்)

**ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் 100 நாட்கள் வேலைத்திட்டத்தின் கீழ், மன்னார் மாவட்டத்தில் உள்ள கிராம சேவையாளர் பிரிவுகளில் முன்னெடுக்கப்பட வேண்டிய அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பாக ஆராயும் அவசர கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் மன்னார் மாவட்ட செயலகத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் எம்.வை.எஸ்.தேசப்பிரிய தலைமையில் இடம்பெற்றது.**

வீட்டுக்கு வீடு-கிராமத்துக்கு கிராமம் என்ற அடிப்படையில் 15 ஆயிரம் கிராமங்களை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்தின் கீழ், மன்னார் மாவட்டத்தில் மன்னார், நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு, மடு ஆகிய ஐந்து பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் உள்ள ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவுகளிலும் கிராம அபிவிருத்தித்திட்டத்துக்காக 10 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த கிராமங்களில் மேற்கொள்ளப்படவுள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பாக இதன்போது விரிவாக ஆராயப்பட்டது.

குறித்த கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர் திருமதி நந்தினி ஸ்ரான்லி டி மேல், வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சின் பணிப்பாளர் முஹமட் வஹாப்தீன், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், செல்வம் அடைக்கலநாதன், முத்தலிப்பாபா பாரூக், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான பிரிமூஸ்சிறாய்வா, என்.குணசீலன், அயூப் அஸ்மி பிரதேச செயலாளர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள், உப தலைவர்கள், உறுப்பினர்கள், திணைக்கள தலைவர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவுகளிலும் ஒதுக்கப்பட்டுள்ள 10 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்பட வேண்டிய முக்கிய அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-2)

## க.பொ.த. சாதாரண தர பரீட்சைப் பெறுபேறுகள்

***யா/நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி***

சி.தர்சிகா- 8ஏசி, வி.நிரேஜனா-6ஏ2சிஎஸ், இ.துளசிதா-7பிசிஎஸ், க.அரவிந்தன்-5ஏபிசி, யோ.கிந்துசா- 5ஏபி3சி, தெ.வளர்மதி-5ஏபி2சிஎஸ், சி.சாருஜன்-4ஏபி2சி2எஸ், சி.தசோதரன்-4ஏபி3சி, கி.டினோஜா-4ஏ2பி2எஸ், ஜெ.நிசாந்தினி-4ஏ2பி2எஸ், வி.இளவேனி-3ஏ5பிசி, ம.கிருத்திகர்-3ஏ3பி3சி, யோ.எமில்டன்-3ஏ3பி2சி, சி.ஜகதீசன்-3ஏபி2சி2எஸ், வா.குகதாசன்-3ஏபி3சிஎஸ், த.சங்கவி-3ஏ2பி2சி2எஸ், ச.சாதனி-3ஏ2பி2சிஎஸ், செ.ஜனந்தன்-2ஏ2பி4சி, க.மதுமிதா-2ஏ4பி2சிஎஸ், பா.கஜலக்சன்-2ஏ3பி3சிஎஸ், செ.வாரணன்-2ஏ2பி4சிஎஸ், ர.ஹம்சா-2ஏ3பி2சிஎஸ்.

**யா/ஞானசாரியார் கல்லூரி**

பே.சங்கீத்-2ஏபி5சி, இ.றஜீகரன்-ஏபி4சி3எஸ், ர.பிரசீன்-ஏ4சி3எஸ், ச.எழிலினி-ஏ3பிசி2எஸ், ற.மதுசியா-2பி2சி2எஸ், க.யசிந்தன்-பி6சி2எஸ், சி.சிந்துஜன்-3சி6எஸ்.

## நான் அரசியலுக்குவர தீர்மானித்துள்ளேன்!

### கோத்தபாய கூறுகின்றார்

முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ எதிர்வரும் காலங்களில் அரசியலில் ஈடுபடவுள்ளதாக தெரிவித்துள்ளார்.



நேற்று முன்தினம் சிங்கள ஊடகமொன்றுடன் இடம்பெற்ற சந்திப்பில் கலந்து கொண்டு அவர் இவ்வாறு தெரிவித்தார்.

முக்கியமாக நடைமுறையில் உள்ள அரசாங்கத்தில் செயற்படுவதற்கு எனக்கு யோசனை இல்லை.


பல காரணங்களுக்காகவும் பலரின் வேண்டுக்கோளிற்கமையவும் இறுதியாக அரசியலுக்கு வர தீர்மானித்துள்ளேன்.

எப்படியிருப்பினும் அரசியலுக்கு வருவதற்கான கட்சியை நான் இதுவரை தீர்மானிக்கவில்லை.

எனது அவசியமாக இருப்பது எதாவது ஒருவகையில் நாட்டிற்கு சேவை செய்ய செய்வதும், அதிகாரி என்ற ரீதியில் அதனை என்னால் செய்ய முடியும் எனவும் நான் நம்புகிறேன்.

நான் கடந்த காலங்களில் பல்வேறு சேவைகளை நாட்டிற்கு செய்துள்ளேன். எதிர்வரும் காலங்களில் அரசியலுக்கு சென்று மேலும் பல சேவைகளை நாட்டிற்கு வழங்குவதற்கு நான் எதிர்பார்க்கிறேன் என கோத்தபாய ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார். (இ-5)


## பிரிவுத்துயர் பகிர்வு



**செல்லப்பா கணேசலிங்கம்**
(ஓய்வுநிலை அதிபர்)

வடமராட்சி கரணவாய் மூத்த விநாயகர் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா கணேசலிங்கம் கடந்த 2ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று புதன் கிழமை மு.ப 10.30மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் கரணவாய் கிராய். இந்து மயானத்தில் தகனம் செல்லப்படும்.



**திருமதி சடகோபன் கமலாதேவி**

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சடகோபன் கமலாதேவி கடந்த 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று புதன் கிழமை 30/02 நிக்கலஸ் லேன் கச்சேரி நல்லூர் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் மு.ப 10மணிக்கு அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



**வேலுப்பிள்ளை கணேஸ்**

புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் தெற்கு மாதா கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை கணேஸ் கடந்த 4ஆம் திகதி அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று புதன் கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் இருபாலை செக்கடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



**திருமதி செல்வநாயகம் மேரி யோசேப்பின்**

ஒட்டகப்புலத்தைப் பிறப்பிடமாகவும் சக்கடத்தார் ஒழுங்கை, அச்சுவேலியை வசிப்பிடமாக வும் கொண்ட செல்வநாயகம் மேரி யோசேப்பின் கடந்த 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் திருவுடல் இன்று புதன்கிழமை பி.ப. 2.45 மணியளவில் புனித சூசையப்பர் தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் புனித சூசையப்பர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.



**திருமதி சுப்பிரமணியம் இராசம்மா**

மட்டுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் குமரபுரம் பரந்தன், கொழும்பு வெள்ளவத்தை ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் இராசம்மா கடந்த 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இன்று புதன்கிழமை மகிந்த மலர்ச்சாலை கல்கிசையில் காலை 9 மணிக்கு பார்வைக்கு வைக்கப்பட்டு மு.ப 11 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



**மிதுலன் கருணானந்தன்**

புத்தூர் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மிதுலன் கருணானந்தன் கடந்த 4ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



**எட்வேட் வில்ஷன் சூசைதாசன்**

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வவுனியா, பிரான்ஸ் ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட எட்வேட் வில்ஷன் சூசைதாசன் கடந்த 25ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் திருப்பலி நாளை வியாழக்கிழமை பி.ப 2.30 மணியளவில் Cimetiere Communal De Gou ssainville, 5Rue Simon Bolivar, 95190 Gou ssai nville,France என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.



**ஆறுமுகம் விஜயரட்ணம்**

புங்குடுதீவு 10ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பு , கனடா ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் விஜயரட்ணம் கடந்த 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை வியாழக்கிழமை காலை 8.30மணி தொடக்கம் மு.ப 10.30 மணிவரை St james Cemetery & Crematorium, 635 Parliament St, Toronto, ON M4X 1R1, Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



**தாமோதரம்பிள்ளை வேலுப்பிள்ளை**

நவற்கிரியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி, கனடா ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை வேலுப்பிள்ளை நேற்று முன்தினம் திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை வியாழக்கிழமை அன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் பி.ப 4மணியளவில் நிலாவரை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டிப்பர் வாகனங்கள் மோதுண்டு விபத்து



(கிளிநொச்சி)

ஏ-9 வீதி கிளிநொச்சியில் இரண்டு டிப்பர் வாகனங்கள் மோதுண்டு விபத்துள்ளானதில் அதில் பயணித்தவர்கள் சிறுகாயங்களுடன் உயிர் தப்பினர்.

இச் சம்பவம் கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்திற்கு முன்பாக அண்மையில் நடைபெற்றுள்ளது.

இதுதொடர்பில்தெரியவருவதாவது,

முறிகண்டியிலிருந்து பரந்தன் நோக்கி பயணித்த டிப்பர் வாகனத்துடன் அதே வழியாக பின்புறமாக பயணித்த டிப்பர் வாகனம் மோதி விபத்துக்குள்ளானது. இதன்போது பின்புறமாக பயணித்த வாகனம் பலத்த சேதம் அடைந்தது.

இதனையடுத்துஅவ்விடத்திற்கு விரைந்த கிளிநொச்சி வீதி போக்குவரத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர். (2-27)

## நாய்களுக்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களிலுள்ள நாய்களுக்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்நடவடிக்கை நேற்று கரைதுறைப்பற்று பிரதேச சபைக்குட்பட்ட கணுக்கேணி கற்பக பிள்ளையார் கோவில் முன்பாக உள்ள பொது மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (2)

# சிறுமியின் சடலம் தோண்டி எடுக்கப்பட்டு உடற்கூற்று பரிசோதனைக்கு அனுப்பிவைப்பு



(குருமன்காடு)

பாலியல் வல்லுணர்விற்கு உள்ளாக்கப்பட்டு உயிரிழந்தார் என்று கூறப்படும் வவுனியா கனகராயன் குளத்தைச் சேர்ந்த செல்வராசா சரண்ஜா (வயது-16) என்ற சிறுமியின் உடல் வவுனியா மாவட்ட நீதவான் நீதிமன்றின் உத்தரவிற்கு அமைய நேற்றைய தினம் மன்னகுளம் மயானத்தில் இருந்து தோண்டி எடுக்கப்பட்டு சடலம் மேலதிக உடற்கூற்று பரிசோதனைக்காக கனகராயன்குளம் பொலிஸாரால் கொழும்பு சட்ட வைத்திய அதிகாரி காரியாலயத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதி வவுனியா, கனகராயன்குளம், மன்னகுளத்தில் வசித்து வந்த செல்வராஜா சரண்ஜா என்ற சிறுமி சுகயீனம் காரணமாக கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் உயிரிழந்திருந்தார். இருப்பினும் அவர் கூட்டு வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டிருந்ததாக வைத்திய அதிகாரி தெரிவித்ததாக உறவினர்கள் பொலிசாரிடம தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில் இச் சிறுமியின் மரணத்தில் சந்தேகம் உள்ள தாகவும், சிறுமி வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாகவும் உறவினர்கள் சந்தேகம் வெளியிட்டதையடுத்து சட்டத்தரணிகள் ஊடாக வவுனியா நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

சிறுமியின் மரணம் தொடர்பாக வைத்திய அறிக்கையிலும் குழப்பமான நிலை காணப்பட்டிருந்தது.

இதன் அடிப்படையில் நீதிமன்றத்தினால் மார்ச் மாதம் 6 ஆம் திகதி சடலத்தை தோண்டியெடுத்து கொழும்பு சட்ட வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு மருத்துவ பரிசோதனைக்காக அனுப்புமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இதனடிப்படையில், பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி மன்னகுளம் மயானத்தில் புதைக்கப்பட்ட சிறுமியின் சடலத்திற்கு நீதிமன்ற உத்தரவிற்கமைய பொலிஸாரினால் பாதுகாப்பு அளிக்கப்பட்டு வந்த நிலையில் ஒரு மாதமும் 8 நாட்களும் கடந்த நிலையில் வவுனியா மாவட்ட நீதிவான் முகமட் ரிஸ்வான், யாழ்.மாவட்ட சட்ட வைத்திய நிபுணர் ருத்திரபதி மயூரதன், கனகராயன்குளம் பொலிஸார் மற்றும் உறவினர்கள் முன்னிலையில் நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் சடலம் தோண்டியெடுக்கப்பட்டது.

இதனையடுத்து உறவினர்களிடம் சடலம் அடையாளம் காண்பதற்காக பார்வையிடப்பட்டதன் பின்னர் கனகராயன்குளம் பொலிஸாரால் கொழும்பு சட்ட வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. (2-250)




# பத்து பாடசாலைகளின் அதிபர்களுக்கு அதிபர் தரம்-1 இற்கான பதவியுயர்வு

## முல்லை.வலயக்கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

முல்லைத்தீவு கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் அதிபர்களாக கடமையாற்றிவருகின்ற 10 பேருக்கு அதிபர் தரம்-1இற்கான பதவி உயர்வு மத்திய அரசின் கல்வியமைச்சரினால் அண்மையில் கொழும்பில் வைத்து வழங்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி உதயராணி முனீஸ்வரன் தெரிவித்துள்ளார். இதுதொடர்பில்அவர்தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு கல்வி வலயத் திற்குட்பட்ட பாடசாலைகளில் அதிபர் தரம்-2 இல் கடமையாற்றிய நிலையில், அதிபர் வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தி அடைந்த 10 அதிபர்களுக்கு அதிபர் தரம்-1 இற்கான பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் மு/வித்தியானந்தா கல்லூரியின் (தேசிய பாடசாலை) அதிபர் கு.சிவலிங்கம், மு/முல்லைத்தீவு மகா வித்தியாலய அதிபர் எஸ்.அல்பிரட், மு/முள்ளியவளை தமிழ் வித்தியாலய அதிபர் கே.நடராஜா, மு/உண்ணாப்புலவு தமிழ் வித்தியாலய அதிபர் கே.திருக்குமரன், மு/முள்ளிவாய்க்கால் கிழக்கு அ.த.க.பாடசாலை அதிபர் கே.மாசிலாமணி, மு/அளம்பில் றோ.க. வித்தியாலய அதிபர் எஸ்.நேவிற் ஜீவராஜா, மு/புதுக்குடியிருப்பு றோ.க.வித் தியாலய அதிபர் எஸ்.அன்ரன் குலதாஸ், மு/இரணைப்பாலை றோ.க. வித்தியாலய அதிபர் ஞா.ஜெபநேசன், மு/உடையார்கட்டுமகாவித்தியாலய அதிபர் எஸ்.சிறீகரன், மு/தேவிபுரம் அ.த.க.பாடசாலை அதிபர் எஸ்.அந்தோனிப்பிள்ளை ஆகிய 10 அதிபர்களுக்கு அதிபர் தரம்-1இற்கான பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதாக மேலும் அவர் தெரிவித்துள்ளார். (2-15)

# சிறுபோக நெற்செய்கை கூட்டங்களில் பெரும்பாக உத்தியோகத்தர்கள் கலந்து கொள்வதில்லை

## முறைகேடுகள் இடம்பெறுவதாக விவசாயிகள் சுட்டிக்காட்டு

(குருமன்காடு)

சிறுபோக நெற்செய்கை கூட்டங்களில் பெரும்பாக உத்தியோகத்தர்கள் கலந்துகொள்ளாமையால் முறைகேடுகள் இடம்பெறுவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.


வவுனியாவின் பல பிரதேசங்களிலும் இடம்பெறும் சிறுபோக நெற்செய்கை தொடர்பான கமக்காரர் அமைப்பின் கூட்டங்களில் பெரும்பாக உத்தியோகத்தர்கள் சிலர் கலந்து கொள்ளாமையினால் பல்வேறு முறைகேடுகள் இடம் பெறுவதாக விவசாயிகள் சுட்டிக் காட்டுகின்றனர்.

குறிப்பாக பம்பைமடு கமநல கேந்திர நிலையத்திற்கு உட்பட்ட கமக்காரர் அமைப்புக்களிலும் இவ்வாறான நிலை காணப்படுவதாகவும் இதனூடாக விவசாயிகள பல்வேறு அசௌகரியங்களை எதிர் கொள்வதாகவும் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, பெரும்பாக உததியோகத்தர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் கலந்துகொள்ளாமையால் கமக்காரர் அமைப்புக்கள் தன்னிச்சையாக முடிவுகளை எடுக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் வவுனியா மாவட்ட விவசாய உதவி ஆணையாளர் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாதிக்கப்பட்ட விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-250)





வவுனியா பிதேச செயலகமும் பிரதேச கலை இலக்கிய பேரவையும் இணைந்தும் நடத்தும் கலை இலக்கிய பெருவிழா நகரசபை கலாசார மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

காலை, மாலை என இரு அமர்வுகளாக இந்நிகழ்வில் நாட்டிய நடனம், கவியரங்கம், பட்டிமன்றம், நாடகம், கோலாட்டம், பிரதேச கலாசார நிகழ்வுகள் என பல நிகழ்வுகள் நடைபெற்றன.

இதன்போது,ந.புவிகரனின் பள்ளிப் பட்டாம் பூச்சிகள் என்னும் பாடலின் இறுவெட்டு வெளியீடும் இடம்பெற்றது. பாடசாலை பருவத்தை மீட்டு பார்க்கும் வகையில் இப் பாடல் காட்சிகள் அமைக்கப் பட்டுள்ளது.

இந் நிகழ்வில் பிரதேச கலைஞர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், மாணவர்கள் ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(படங்கள்:-குருமன்காடு செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அரசுகளுக்கெதிரான கட்சிகளை ஓரணியில் திரட்ட தி.மு.க.முடிவு!

(சென்னை)

மத்திய, மாநில அரசுகளுக்கு எதிரான மனநிலையில் இருக்கும் கட்சிகளை ஒன்றிணைத்து மெகா கூட்டணியை உருவாக்கி சட்டப் பேரவைத் தேர்தலை சந்திக்க. தி.மு.க. திட்டமிட்டுள்ளது.

கடந்த 2004 ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலின்போது, மத்தியில் பா.ஜ.கவும் மாநிலத்தில் அ.தி.மு.கவும் ஆட்சி செய்தன. மத்தியில் பா.ஜ.க. அணியில் இடம் பெற்றிருந்த தி.மு.க., தேர்தலுக்கு சில மாதங்களுக்கு முன்புதான் கூட்டணியில் இருந்து விலகியது. இதையடுத்து காங்கிரஸ், பா.ம.க., ம.தி.மு.க., கம்யூனிஸ்ட்கள், இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக் உள்ளிட்ட கட்சிகளை இணைத்து மெகா கூட்டணியை உருவாக்கி, மக்களவைத் தேர்தலைச் சந்தித்தது. அந்தத் தேர்தலில் தி.மு.க. கூட்டணி, புதுச்சேரி உட்பட 40 தொகுதிகளிலும் வெற்றி பெற்றது.

இப்போதும் அதேபோன்ற மெகா கூட்டணியை அமைத்து தமிழக சட்டப்பேரவைத் தேர்தலை சந்திக்க தி.மு.க. திட்டமிட்டுள்ளது. இதற்காக மத்திய, மாநில அரசுகளுக்கு எதிரான மனநிலையில் உள்ள கட்சிகளை ஒருங்கிணைத்து, புதிய அணியை உருவாக்க தி.மு.க. தலைமை வியூகம் வகுத்து வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பாக தி.மு.க. தலைமைக்கழக நிர்வாகிகள் சிலர் கூறியதாவது,

தமிழக சட்டப்பேரவைக்கு முன்கூட் யே தேர்தல் நடத்தப்படலாம் என அ.தி.மு.க. வட்டாரங்களிலேயே பேச்சு நிலவுகிறது. இல்லாவிட்டாலும் பொதுத்தேர்தலுக்கு இன்னும் ஓராண்டே உள்ளது. இதனால், தேர்தல் பணிகளை தி.மு.க. இப்போதே தொடங்கி விட்டது. தேர்தல் நிதி வசூலுடன், கூட்டணி தொடர்பான வியூகங்களை வகுக்கவும் தி.மு.க. தலைமை தயாராகியுள்ளது.

கடந்த மக்களவைத் தேர்தலின் போது தே.மு.தி.க., பா.ம:க., ம.தி.மு.க. உள்ளிட்ட கட்சிகளை உள்ளடக்கிய தேசிய ஜனநாயக கூட்டணியும், காங்கிரஸ் மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகளும் வாக்குகளை பெருமளவில் பிரித்ததே தி.மு.கவுக்கு சரிவைத் தந்தது. எனவே, இம்முறை வாக்குகள் சிதறுவதைத் தடுக்க, முக்கிய கட்சிகளை ஓரணியில் திரட்ட வேண்டும் என்பதில் தி.மு.க. உறுதியாகவுள்ளது.

தே.மு.தி.க., காங்கிரஸ், பா.ம.க., கம்யூனிஸ்ட்கள், தமாகா என தமிழகத்தின் பிரதான கட்சிகள் அனைத்துமே மாற்றம் வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளன எனவும் அவர்கள் தெரிவித்தனர். (இ-5)

# பன்றிக் காய்ச்சலால் 2123 பேர் உயிரிழப்பு 35000 பேர் பாதிப்பு

(சென்னை)

**இந்தியாவில் பரவி வரும் பன்றிக் காய்ச்ச லால் இதுவரை நாடு முழுக்க 2,123 பேர் பலியாகியுள்ளனர் என்றும், இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 35 ஆயிரத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறது என்றும் அதிர்ச்சித் தகவல் வெளியாகி யுள்ளன.**

மத்திய சுகாதாரத்துறை அமைச்சகத்தின் கணக்குப் படி, ஏப்ரல் 4 ஆம் திகதி வரை 2 ஆயிரத்து 123 பேர் பலியா கியுள்ளனர் என்று தெரிய வந்துள்ளது. இந்தக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 34ஆயிரத்து636 ஆக வுள்ளது.

நாட்டிலேயே குஜராத்தில்தான் பன்றிக்காய்ச்சலால் அதிகம் பேர் பலியாகியுள்ளனர். இங்கு பலி எண்ணிக்கை 436 ஆகவும், பாதிகப்பட்டவர்களின் எண்ணிக்கை 6ஆயிரத்து 544 ஆகவுமுள்ளது.

ராஜஸ்தான் (426), மகாராஷ்டிரா (431), மத்தியப் பிரதேசம் (309), கர்நாடகா (85), தெலுங்கானா (77), பஞ்சாப் (56), ஹரியாணா (53), உத்தரப் பிரதேசம் (38), மேற்கு வங்கம் (26), இமாச்சல பிரதேசம், ஆந்திரப் பிரதேசம் மற்றும் சத்தீஸ்கர் (23), ஜம்மு காஷ்மீரில் (20), கேரளம் (14), உத்தராகண்ட் மற்றும் டில்லி (12) என இதர மாநிலங்களில் பன்றிக்காய்ச்சல் பலி எண்ணிக்கை மேற்கண்டவாறு உள்ளது.

இதற்கிடையே ஜெய்பூரில் உள்ள எஸ்.எம்.எஸ். மருத்துவக் கல்லூரி மற்றும் வைத்தியசாலையில் நடத்தப்பட்ட ஓர் ஆய்வில், அங்கு பன்றிக் காய்ச்சலால் அனுமதிக்கப்பட்டு இறந்த 65 சதவீத நோயாளிகள், ஏற்கனவே நீரிழிவு, காசநோய் மற்றும் இதர நுரையீரல் பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டிருந்தனர் என்பது தெரிய வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## ஏமனில் இருந்து மேலும் 8 தமிழர்கள் நாடு திரும்பினர்

ஏமனில் இருந்து மீட்கப்பட்ட தஞ்சாவூர், மதுரை உள்ளிட்ட மாவட்டங்களைச் சேர்ந்த மேலும் 8 தமிழர்கள் நேற்று இந்தியா வந்தடைந்தனர். ஏமனில் பணி புரிந்து வந்த தமிழகத்தைச் சேர்ந்த மேலும் 8 தமிழர்கள் மீட்கப்பட்டு மும்பை விமான நிலையத்துக்கு ஏர் இந்தியா விமானம் மூலம் வந்தடைந்தனர். அவர்கள் தமிழக அதிகாரிக ளால் வரவேற்கப்பட்டு பின்னர், சொந்த ஊருக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (இ-5)

# காஷ்மீர் எல்லைப்பகுதியில் 110 கி.மீ.நீளத்திற்கு சுவர்

(டில்லி)

பாகிஸ்தான் தீவிரவாதிகளின் ஊடுருவலை தடுக்க காஷ்மீர் எல்லையில் தடுப்புச் சுவர் கட்டப்படும் என மத்திய அரசு அறிவித்துள்ளது.

கதுவா மற்றும் ஜம்மு மாவட்டங்களில் 110 கி.மீ. நீளத்திற்கு இந்த தடுப்புச் சுவர் கட்டப்படவுள்ளது. 10 மீற்றர் உயரம் உள்ள இந்த தடுப்புச் சுவரால் பாகிஸ்தான் தீவிரவாதிகளின் ஊடுருவல் தடுக்கப்படுவதுடன், அந்நாட்டின் போர் நிறுத்த மீறலை முடிவுக்கு கொண்டு வர முடியும் என இராணுவ உயர் அதிகாரி ஒருவர் ஸ்ரீநகரில் தகவல் தெரிவித்தார். இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையேயான எல்லையில் ஏற்கனவே கம்பிச்சுருள் தடுப்பு வேலி போடப்பட்டுள்ளது.

ஆனால் அதையும் மீறி ஊடுருவல் நடப்பதால் கூடுதலாக தடுப்புச் சுவரையும் அமைக்க முடிவு செய்துள்ளதாக அந்த அதி காரி தெரிவித்துள்ளார். (இ-5)




# இஸ்ரோ மைய புதிய இயக்குநராக மயில்சாமி அண்ணாதுரை நியமனம்



பெங்களூர் இஸ்ரோ செயற்கைக் கோள் மையத்தின் இயக்குநராக விஞ்ஞானி மயில்சாமி அண்ணாதுரை நியமிக்கப்பட்டுள்ளார். தமிழர் ஒருவருக்கு இஸ்ரோவில் முக்கிய பொறுப்பு வழங்கப்பட்டுள்ளதால் தமிழர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

இது தொடர்பாக இஸ்ரோ மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

இஸ்ரோவின் முக்கிய விஞ்ஞானியும், சந்திரயான்-1 திட்ட இயக்குநருமான மயில்சாமி அண்ணாதுரை, பெங்களூர் இஸ்ரோ செயற்கைக் கோள் மையத்தின் இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்த மையத்தின் இயக்குநராக இருந்த விஞ்ஞானி சிவகுமாரின் பதவிக் காலம் கடந்த மார்ச் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்தது. இதையடுத்து, கடந்த ஏப்ரல் 1 ஆம் திகதி மயில்சாமி அண்ணாதுரை புதிய இயக்குந ராக பொறுப்பேற்றுக் கொண்டார்.

கடந்த 1958 ஆம் ஆண்டு ஜூலை 2ஆம் திகதி கோவை மாவட்டத்தில் மயில்சாமி அண்ணாதுரை பிறந்தார். அங்குள்ள கல்லூரியில் பொறியியல் பயின்ற அவர் 1982 ஆம் ஆண்டு இஸ்ரோவில் சேர்ந்தார்.

சிறு செயற்கைக்கோள் உருவாக்க திட்டங்கள், இன்சாட் செயற்கைக் கோள்கள் உருவாக்கத்தில் முக்கிய பங்கு வகித்துள்ளார். உலக அளவில் இஸ்ரோவுக்கு நற்பெயரை பெற்றுத் தந்த சந்திரயான்-1 இன் திட்ட இயக்குநராகவும் இருந்துள்ளார்.

இதுமட்டுமல்லாமல் மங்கள்யான் உருவாக்கத்திலும் அண்ணாதுரை முக்கிய பங்காற்றியுள்ளார். விண்வெளித் துறையில் பல்வேறு சாதனைகளை புரிந்துள்ள மயில்சாமி அண்ணாதுரைக்கு தேசிய அளவிலும், சர்வதேச அளவிலும் பல்வேறு விருதுகள் கிடைத்துள்ளன என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மயில்சாமி அண்ணாதுரைக்கு இஸ்ரோவின் முக்கிய பொறுப்பு வழங்கப்பட்டு இருப்பதால் தமிழர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். (இ-5)

# ஆந்திராவில் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் தமிழக தொழிலாளர்கள் உட்பட 20பேர் மரணம்





ஆந்திர மாநிலம் சித்தூரில் செம்மரங்களை வெட்டியவர்கள் மீது நேற்றுக் காலை நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் 20 பேர் கொல்லப்பட்டனர். இவர்களில் 10 இற்கும் மேற்பட்டோர் தமிழகத்தைச் சேர்ந் தவர்கள் எனக் கூறப்படுகிறது.

திருப்பதியில் உள்ள சேஷாசலம் வனப்பகுதியில் ஸ்ரீவாரிமெட்டு எனும் இடத்திலிருந்து விலைமதிப்பு மிக்க செம்மரங்கள் நாள் தோறும் கடத்தப்படுகின்றன.

இதனைத் தடுக்க ஆந்திர பொலிஸார், வனத்துறை அதிகாரிகள் தினமும் தீவிர வாகன சோதனைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும் மலையேறும் பயிற்சி பெற்ற ஆயுதப் படை பொலிஸார் சிறப்பு காவறபடை யினர் வனப் பகுதிகளில் தேடுதல் வேட்டைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில், நேற்றுக் காலை நடந்த பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் தமிழகத்தை சேர்ந்த தொழிலாள ர்கள் உட்பட 20 பேர் கொல் லப்பட்டனர்.

இறந்தவர்களில் ஒருவர் சர்வதேச செம்மரக் கட்டை கடத்தல் கும்பலை சேர்ந்தவர் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழகத்தில் உள்ள வேலூர், திருவண்ணாமலை, சேலம், காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களில் இருந்து செம்மரங்களை வெட்டி கடத்த கூலி தொழி லாளர்கள் அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

ஒரு நாள் வெட்டுக்கூலியாக ரூ.2000 முதல் ரூ.5000 முதல் கிடைப்பதாலேயே தமிழக கூலித் தொழிலாளர்கள் அதிகளவில் செம்மரம் வெட்ட செல்கின்றனர் என்பது குறிப்படுகிறது.

சம்பவம் குறித்து பொலிஸ் டி.ஜி.பி. கண்டா ராவ் கூறும்போது, "காலை 5 மணியளவில் சேஷாசலம் வனப்பகுதியில்செம்மரங்களை வெட்டியவர்களை பொலிஸார் சுற்றி வளைத்தனர். வனப்பகுதியில் 100 இற்கும் மேற்பட்ட கொள்ளையர்களும், கூலித் தொழிலாளர்களும் இருந்துள்ளனர்.

அப்போது, பயங்கர ஆயுதுங்களுடன் பொலிஸார் தாக்க கடத்தல் கும்பல் காரர்கள் முயற்சித்தனர். தற்காப்புக்காக பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தினர்.இதில் 20 பேர் பலியாகினர்.

தமிழக தொழிலாளர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதற்கு பாஜக மாநில தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். விசாரணை நடத்தாமல், துப்பாக்கிச் சூடு நடத்தியது கண்டனத்துக்குரியது என அவர் தெரிவித்துள்ளார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணுற அடுக்கிய விறகில் வெந்தணல்
நுண்ணிய தீ புகில் ஒன்றுமில்லையாம்.
~ திருநாவுக்கரசர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# முல்லை.நாயாற்று கடற்பகுதியில் தெற்கு மீனவர்கள் மீன்பிடிக்க தடை

## வட மாகாணசபையில் பிரேரணை நிறைவேற்றம்

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு நாயாற்று கடல் பகுதியில் தென்பகுதி மீனவர்கள் மீன் பிடிப்பதை தடுத்து நிறுத்த உரிய நடவடிக்கை எடுக்கக்கோரி சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் முன் வைத்த பிரேரணை வடமாகாண சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

வட மாகாண சபையில் மாதாந்த அமர்வு கைதடியில் அமைந்துள்ள வட மாகாண சபையில் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் நேற்று நடைபெற்றபோது, ரவிகரன் இந்தப் பிரேரணையை கொண்டுவந்தார்.

அக்கடற்பரப்பில் மீன்பிடிக்க தென் பகுதி மீனவர்களுக்கு தற்காலிக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அனுமதியின்றி அத்துமீறி தென்னிலங்கை மீனவர்கள் பலர் முல்லைத்தீவு நாயாற்றில மீன்பிடிக்கின்றனர் என ரவிகரன் தெரிவித்திருந்தார்.

இந்தப் பிரேரணைக்கு வட மாகாண மீன்பிடி அமைச்சர் பா.டெனீஸ்வரன் மற்றும் உறுப்பினர்கள் ஆதரவுக் கருத்துக்களைத தெரிவித்தனர்.

இங்கு தென்னிலங்கை மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடியினால் முல்லைத்தீவு மீனவர்கள் கடும் சவால்களை எதிர்நோக்குவதாகவும் இதனால் அவர்களின் வாழ்வாதாரம் பறிக்கப்பட்டு வறுமை நிலைக்குள் முல்லைத்தீவு மீனவர்கள் தள்ளப் படுவதாகவும் சபையில் சுட்டிக் காட்டப்பட்டே தென்னிலங்கை மீனவர்கள் நாயாற்றில் மீன் பிடிப்பதற்கு தடை கோரும் பிரேரணை நிறைவேற்றப் பட்டுள்ளது. (செ-4)

# ஜனாதிபதி மாளிகைகளின் விலாசங்களில் தேசிய பாடசாலைகளில் மாணவர் சேர்ப்பு

## கல்வி அமைச்சர் காரியவசம் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மாளிகைகளின் விலாசங்களை பயன்படுத்தியும் வேறு சட்ட விரோதமான முறையில் மாணவர்கள் தேசிய பாடசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

கொழும்பு றோயல் கல்லூரியில் நடைபெற்ற கட்டிட அங்குரார்ப்பண நிகழ்வு ஒன்றில் பங்கேற்றபோது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

புதிய அரசாங்கம் என்ற ரீதியில் பௌதிக அபிவிருத்தியை விடவும் பண்புசார் அபிவிருத்தியை ஏற்படுத்தவே நாம் முனைப்பு காட்ட வேண்டும்.

நான் தைரியமாக சொல்கின்றேன், கார்ல்டன் பாலர் பாடசாலைகளிலிருந்து ஆயிரக் கணக்கான மாணவர்கள் தேசிய பாடசாலைகளுக்கு சேர்க்கப்பட்டுள்ளனர்.

முழுக்க முழுக்க அரசியல் செல்வாக்கின் அடிப்படையில் மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி மாளிகைகளின் முகவரிகளைப் பயன்படுத்தியும் மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். இவை அனைத்தும் சட்டவிரோதமான நடவடிக்கைகளாகும்.

நாம் இந்த அனைத்து முறைமைகளையும் மாற்றியமைக்க வேண்டும். இதன் காரணமாகவே அரசியல் தலையீடுகள் இன்றி மாணவர்களை பாடசாலைகளுக்கு சேர்க்க எமது அமைச்சு தீர்மானித்துள்ளது என அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார். (செ-11)

# அரசாங்கம் வீழ்ச்சியடைவதாக ஜனாதிபதி ஏன் சொன்னார்?

அரசாங்கம் வீழ்ச்சி அடைகிறது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார். ஒரு நாட்டின் ஜனாதிபதியாக இருக்கக் கூடிய ஒருவர், தனது அரசாங்கம் வீழ்ச்சியடைகிறது எனக் கூறியதற்குள் அவரின் இயலாமை தெரிகிறதா? அல்லது தேசிய அரசாங்கம் என்பது ஒருபோதும் சாத்தியமற்றது என்பதைக் குறிக்கிறதா? என்ற ஐயம் எழுகிறது.

கூடவே, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் போக்கு ஆளுமையற்றது என்பதைச் சொல்லாமல் சொல்வதற்காக அரசு கீழ் இறங்கிப் போகின்றது என்ற வார்த்தையை ஜனாதிபதி மைத்திரி பிரயோகித்தாரா? என்றெல்லாம் எண்ணத்தோன்றும்.

எதுவாயினும் மகிந்த ராஜபக்ஷ இருந்த கதிரையில் இன்னொருவர் இருப்பதாக இருந்தால், அவர் மகிந்தவைவிட மிகவும் வல்லமை பொருந்தியவராக, அதிரடியான நடவடிக்கைகளை எடுக்கக் கூடியவராக இருக்க வேண்டும்.

ஆனால், ஜனாதிபதி மைத்திரியைப் பொறுத்தவரை அவர் ஒரு நல்ல மனிதராகவே இருக்க நினைக்கிறார்.

நல்ல மனிதர் என்பது வேறு. உத்தம வினைத்திறன் உடைய அரசாட்சி செய்வதென்பது வேறு. நல்ல மனிதராக இருக்கக் கூடிய ஒருவர் அரசாங்க நிர்வாகத்திலும் அரசுடன் சம்பந்தப்பட்டவர்கள் தொடர்பிலும் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும்.

ஆனால் ஜனாதிபதி மைத்திரி தன்னை எதிர்த்தவர்களுக்கு – மகிந்த ராஜபக்ஷவுடன் கூட இருந்தவர்களுக்கு மந்திரிப்பதவி வழங்க நினைத்து அதனை நிறைவேற்றினார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்தவுக்கு நெருக்கமானவர்களை அமைச்சர்களாக ஆக்கினால், அவர்கள் நிச்சயம் தமது ஆதரவை மகிந்த ராஜபக்ஷவுக்கே வழங்குவர். அத்தகையதொரு சூழ்நிலை தற்போது ஏற்பட்டுவிட்டது என்றே கூறவேண்டும்.

மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவானவர்களுக்கு அமைச்சுப்பதவி கொடுத்த சில நாட்களிலேயே அரசு வீழ்ச்சியடைகிறது என ஜனாதிபதி மைத்திரி கூறியுள்ளதிலிருந்து நிலைமை என்ன என்பதைப் புரிந்து கொள்ளலாமல்லவா?

ஆக, ஜனாதிபதி மைத்திரி அடுத்துவரும் ஆண்டுகளுக்கு தன்னை பாதுகாப்பதாக இருந்தால், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையில் கைவைக்காமல் இருப்பதே ஒரே வழியாகும்.

மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியாக்குவதில் பெரும் பங்காற்றியவர்கள் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் தமிழ், முஸ்லிம் மக்களுமாவர்.

எனினும் ஜனாதிபதி மைத்திரியின் அரசைப் பலப்படுத்துவதற்குத் தேவையான அரசியல் சக்தி சந்திரிகாவிடமோ அல்லது தமிழ்–முஸ்லிம் மக்களிடமோ இல்லை. அதேநேரம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது பதவி என்பதைத் தவிர; மைத்திரியைப்பலப்படுத்துதல், அரசாங்கத்தின் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்துதல் என்ற சிந்தனை அறவே இல்லாதவராக உள்ளார்.

இந் நிலையில் மகிந்தவின் ஆதரவாளர்கள் ஊடுருவியுள்ள அரசாங்கத்தை வழிப்படுத்திச் செல்வதென்பது ஜனாதிபதி மைத்திரிக்கு கடினமான காரியமாகவே இருக்கும்.

இதன் காரணமாகவே அரசாங்கம் வீழ்ச்சியடைகிறது என மனம் திறந்து மைத்திரி சொன்னார் என்று கருத இடம் உண்டு.

என்ன செய்வது ஆளும் கட்சி எது? எதிர்க்கட்சி எது? என்று இனங்காண முடியாமல், ஆளும் கட்சிக்குள் எதிர்க்கும் கட்சி; எதிர்க்கட்சிக்குள் ஆளும் கட்சி என்ற மிக மோசமான குழப்பம் இருப்பதால், நடப்பது நடக்கட்டும் என்ற துணிச்சலோடு பாராளுமன்றத்தைக் கலைத்து, பொதுத்தேர்தலை நடத்துவதைத் தவிர ஜனாதிபதி மைத்திரிக்கு வேறேதேனும் வழியிருப்பதாகத் தெரியவில்லை.

# அடுத்த அமர்வு ஏப்ரல் 30 இல்

(கொழும்பு)

வடமாகாண சபையின் அடுத்த அமர்வு எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெறும் என அவைத்தலைவர் அறிவித்துள்ளார்.

கைதடியில் அமைந்துள்ள மாகாண சபைக்கட்டடத்தில் வட மாகாண சபை அமர்வு நேற்றுக் காலை 9.00 மணியளவில் ஆரம்பமாகி நடைபெற்றது.

இதன்போது பிரேரணைகளை முன் வைத்து விவாதிக்கப்பட்டது எனினும் விவாத உரை எதிர்வரும் 30ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டு நேற்றைய சபை அமர்வுகள் 2.30 உடன்நிறைவுக்கு வந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

# மாகாண சபையில் கைபேசிக்கு தடை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபை அமர்வு நடைபெறும் அவைக்குள் மாகாணசபை உறுப்பினர்கள் கைபேசியை பாவிக்க முடியாது என அவைத்தலைவர் சீ.வீ.கே சிவஞானம் தெரிவித்துள்ளார்.

மேலும் மாகாண சபை அவைக்கு இருக்கவேண்டிய ஒழுங்கு விதிகளை கருத்திற் கொண்டே இதனை நேற்றிலிருந்து நடைமுறைப்படுத்துவதாகவும் அவர் தெரிவித்தார். (செ-11)

# சங்கடஹர சதுர்த்தி

(யாழ்ப்பாணம்)

யாழ்/ வண்.வடகிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் விசேட சங்கடஹர சதுர்த்தி பூஜை இன்று 8-ம திகதி புதன்கிழமை மாலை 5.30 மணிக்கு நடைபெறவுள்ளது. விஷேட பூஜையை தொடர்ந்து வசந்த மண்டப பூஜை நடைபெற்று விநாயகப் பெருமான் திரு வீதி வலம் வரவுள்ளார். (செ)

# பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

## இறைவனை மட்டும் நம்புங்கள்



✦ பக்தனுடைய பிரேமைக்கு வசப்பட்டு பகவான் அவனிடம் அகப்பட்டுக் கொள்கிறார். சாதனைகள் பழகப் பழக இறைவனின் அருள் ஏற்படும்போது அவரது காட்சி கிட்டுகிறது. பக்தன் பகவானைத் தன் இதயத்தில் தாங்கிக் கொண்டு உலகில் வாழ்கிறான்.

✦ இறைவனைக் காணவேண்டும் என்று மனம் ஏங்குகிறது. உயிர் துடிக்கிறது, இந்த நிலையில்தான் இறைவனின் தரிசனம் கிட்டும். இறைவனை அடைய வேண்டுமானால் பிரம்மச்சரியத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். இறைவன் தூய பக்தர்களிடம் அதிக அளவில் பிரகாசிக்கிறான்.

✦ அவதார புருஷரை நினைப்பது இறைவனை நினைப்பதற்குச் சமம். எவ்வளவு இடையூறுகள், ஆபத்துக்கள் வந்தாலும் ஞானி மனம் கலங்க மாட்டான்.

✦ இறைவனை அடைந்தபிறகு ஒருவனுக்கு உலகப் பொருள்களில் மயக்கம் தோன்றாது. இறைவனே உலகத்திலுள்ள எல்லாப் பொருட்களாகவும் ஆகியிருக்கிறான்.

✦ எவன் இறைவனை அடைய ஏங்கி நிற்கிறானோ, அவன்மீது இறைவனின் கருணை விழுகிறது. இறைவன் நாமத்தில் பக்தனுக்குத் தீவிர நம்பிக்கை இருக்க வேண்டும். இறைவனே உலகம் என்ற இந்த நம்பிக்கை ஏற்பட்டால் எல்லாச் சிக்கல்களும் ஒழிந்து தீர்வு காண முடியும்.

✦ "ஆண்டவனே கர்த்தா, நான் கர்த்தா அல்ல" என்ற நம்பிக்கை எவனிடம் இருக்கிறதோ அவன் ஜீவன் முக்தன். மனதில் தீய வாசனைகள் இருக்கும் வரையில் தூய பக்தி உண்டாவதில்லை.

✦ இறைவனை ஆராய்ச்சியால் அறிந்துகொள்ள முடியாது, எல்லாம் நம்பிக்கையைச் சார்ந்தது.

✦ தனித்த ஓர் இடத்தில் மங்கைப் பருவமுள்ள ஒரு பெண்ணைக் கண்டால், அவளைத் தன் மனதில் தாய் என்று வணங்கிப் போகிறவனே உண்மைத் துறவின் தன்மைகளை கொண்டவன்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஐ.பி.எல்.கோலாகலமாக இன்று ஆரம்பம்

## மும்பை கொல்கத்தா பலப்பரீட்சை




8ஆவது ஐ.பி.எல் போட்டி இன்று ஆரம்பமாகிறது. மேமாதம் 24ஆம் திகதிவரை 47 நாட்கள் இந்த கிரிக்கெட் போட்டி நடக்கவிருக்கிறது.

சென்னை, மும்பை, கொல்கத்தா, பெங்களூர், ஐதராபாத்.டில்லி உட்பட 12 மைதானங்களில் இந்தப்போட்டி நடக்கவிருக்கிறது.

இன்று நடைபெறும் தொடக்க ஆட்டத்தில் நடப்பு சம்பியனான கம்பீர் தலைமையிலான கொல் கத்தா நைட்ரைடர்ஸ் ரோகித் சர்மா தலைமையிலான மும்பை இந்தி யன் அணிகள்மோதுகின்றன.(க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்



## இளையோருக்கான சதுரங்கப் போட்டிகள்

இலங்கை சதுரங்க சம்மேளனத்தின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்ட இளையோருக்கான சதுரங்கப்போட்டிகள் யாழ்.இந்துக்கல்லூயில் எதிர்வரும் 9,10,11 ஆம் திகதிகளில் நடத்தப்படவுள்ளன.

ஆண்,பெண் இருபாலாருக்கும் தனித்தனியாக 6,8,10,12,14,16,18 வயது பிரிவுகளில் நடத்தப்படும் இப்போட்டியானது 9ஆம் திகதி காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும். காலை 9மணிக்கு பின் வருகை தரும் போட்டியாளர்கள் எக்காரணம் கொண்டும் போட்டியில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.

பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ள விரும்புபவர்கள் போட்டிக்குரிய கட்டணத்தை செலுத்தி 8ஆம் திகதி மாலை 3மணி தொடக்கம் 6மேணி வரை யாழ்.இந்துக்கல்லூரியில் பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

அனைத்து போட்டியாளர்களும் தமக்குரிய விளையாட்டு உபகரணங்கள் கொண்டு வருதல் வேண்டும்.


## ஹொக்கி போட்டி

யாழ்ப்பாண மாவட்ட ஹொக்கி சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்ட ஹொக்கி அணிகளுக்கிடையிலான ஹொக்கி சுற்றுப் போட்டியொன்று எதிர்வரும் 9ஆம் திகதி முதல் நடத்தப்படவுள்ளது.

யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் இந்தச் சுற்றுப்போட்டி, 9,10மற்றும் 11 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 10 ஹொக்கி அணிகள் இந்தச் சுற்றுப்போட்டியில் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-23)

# சென். மேரிஸை வென்றது பலாலி விண்மீன் வி.கழகம்



யாழ்மாவட்டசென்மேரிஸ்அணியை வெற்றி கொண்டது பலாலி விண் மீன் விளையாட்டுக் கழகம்.

புத்தூர் வளர்மதி விளை யாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியிலான பதிவு செய்த கழகங்களுக்கு இடையிலான 7 பேர் கொண்ட மாபெரும் உதை பந்தாட்ட சுற்றுப் போட்டி உரும் பிராய் இந்துக் கல்லூரி மைதா னத்தில் இடம் பெற்று வருகின்றது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற போட்டியில் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நாவாந்துறை சென்மேரிஸ் அணி மோதியது.

விறுவிறுப்பாக போட்டி இடம் பெற்றது. ஆட்ட நேர முடிவில் இரு அணிகளும் தலா இரு கோல்களுடன் சமநிலை பெற்றது. பின் சமநிலை தவிர்ப்பு உதை வழங்கப்பட்டது.

இதில் இரு அணிகளும் 7:7 என்ற ரீதியில் சமநிலை பெற்றது.

பின்வெற்றியை தீர்மானிக்க நாணயச் சுழற்சி இடம்பெற்று நாணயச் சுழற்சியில் பலாலி விண் மீன் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று லீக் சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது.(க-23)

# முதலிடத்தை நெருங்கும் சானியா

இந்தியாவின் முன்னணி டென்னிஸ் வீராங்கனை சானியாமிர்சா இரட்டையர் போட்டியில் அவர் தற்போது மிகவும் சிறப்பாக விளையாடி வருகிறார்.

அமெரிக்காவில் நடந்த மியாமி ஓபன் போட்டியில் மார்டினா ஹிங்சுடன் (சுவிட் சர்லாந்து) இணைந்து சானியா மிர்சா பட்டம் பெற்றார்.

இந்த ஆண்டில் மட்டும் அவர் 3ஆவது இரட்டையர் பட்டத்தை பெற்று உள்ளார். சிட்னி, இந்தியன்வெல்ஸ் போட்டியில் வென்று இருந்தார்.

ஐதராபாத்தை சேர்ந்த 28 வய தான சானியா மிர்சா 2004 ஆம் ஆண்டில் முதல் முறையாக இரட்டையரில் பட்டம் வென்றார். இது வரை அவர் 25 இரட்டையர் பட்டங்களை வென்று முத்திரை பதித்துள்ளார்.

சானியா மிர்சா தற்போது பெண்கள் இரட்டையர் தரவரிசையில் 3ஆவது இடத்தில் இருக்கிறார். அவர் 7ஆயிரத்து 495 புள்ளிகள் பெற்றுள்ளார்.

முதல் இடத்தை பிடிக்க அவருக்கு இன்னும் [illegible] புள்ளிகளே தேவை. இதனால் சானியா மிர்சா நம்பர் 1' இடத்தை நெருங்கி உள்ளார்.

இத்தாலியைச் சோந்த சாரா இராணி, ராபர்ட்டோ வின்சி ஆகியோர் தலா 7 ஆயிரத்து 649 புள்ளிகள் பெற்று முதல்இடத்தில் உள்ளனர். (க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கமலினி செல்வராஜன் நேற்று காலமானார்



(யாழ்ப்பாணம்)

இலங்கை தமிழ் கலைத் துறையில் பல்துறைக் கலைஞராக திகழ்ந்த கமலினி செல்வராஜன் நேற்றுப் பகல் காலமானார்.

தமிழ் நாடகம், திரைப்படத் துறைகளில் திறமையான நடிகையாகவும் வானொலி, தொலைக் காட்சி ஒலி, ஒளிபரப்பாளராகவும் விளங்கிய கமலினி கடுமையான சுகவீனமுற்றிருந்த நிலையில் நேற்றுக் காலமானார்.

ரூபவாஹினியில் ஒளிபரப்பான அருணா செல்லத்துரையின் நெறியாள்கையில், கே.எஸ். பாலச்சந்திரன் எழுதிய "திருப்பங்கள்", எஸ். ராம்தாசின் "எதிர்பாராதது", எஸ். எஸ். கணேசபிள்ளை எழுதிய "சமூக சேவகி" போன்ற பல தொலைக்காட்சி நாடகங்களில் நடித்துப் புகழ் பெற்ற கமலினி செல்வராஜன் ரூபவாஹினியிலும், ஐ.ரி.என். தொலைக்காட்சியிலும் நிகழ்ச்சிகளை தயாரித்து வழங்கி வந்தார்.

இலக்கியவாதியும், எழுத்தாளருமான தென்புலோலியூர் மு.கணபதிப்பிள்ளை, வயலின் கலைஞர் தனபாக்கியம் ஆகியோருக்கு மூத்த மகளாகப் பிறந்த கமலினி சில்லையூர் செல்வராசனை திருமணம் புரிந்து கொண்டார். (ந-11)

## 19ஆம் திருத்...

என எதிர்த்து வருகிறார். இந்நிலையில் அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் ராஜிதவிடம் வினவிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அமைச்சர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,


19ஆவது திருத்தத்தை அவசர அவசரமாக நிறைவேற்ற எடுக்கும் நடவடிக்கைகளே தற்போது எழுந்துள்ள பிரச்சினைகளுக்குக் காரணம. நிறைவேற்று அதிகாரம் இல்லாதொழிக்கப்பட வேண்டும். அல்லது அதிலுள்ள பலமான அதிகாரங்கள் இல்லாதொழிக்கப்பட வேண்டும். இவை இரண்டையும் நான் ஏற்றுக்கொள்வேன்.

ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகார பலத்தைப் பிரதமர் அபகரித்துக்கொள்ள முயற்சிக்கும் சூழ்ச்சியாகவே 19ஆவது அரசியலமைப்புத் திருத்தம் அமைந்துள்ளதென அமைச்சர் சம்பிக்க ரணவக்க விமர்சித்து வருகிறார். எது எவ்வாறெனினும் மக்கள் ஆணையைப் பெற்று பதவிக்கு வந்துள்ள ஜனாதிபதியின் அதிகாரங்களை அவ்வாறு எதுவுமில்லாத பிரதமர் பெற்றுக்கொள்ள முனைவதை எவரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

அவவாறென்றால் நிறைவேற்று அதிகாரம் பிரதமருக்கன்றி அமைசசரவைக்கே வழங்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

நீதிமன்றத்துக்குக் கீழ்ப்படிதல் மற்றும் பாராளுமன்றத்துக்குப் பொறுப்புக் கூறல் என்பவற்றை முறையாக நடைமுறைப்படுத்தவே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்நிலையில் அவசர அவசரமாக 19ஆவது அரசியலமைப்பை நிறைவேற்ற முற்படுவது உகந்ததல்ல. இரு தரப்பினரிடையேயும் சுமுகமான கலந்துரையாடல்கள் இடம்பெற்று தீர்மானத்துக்கு வரவேண்டியுள்ளது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (செ-11)

# கண்கவர் வண்ணங்களுடன் களைகட்டிய ஐபிஎல் தொடக்க விழா





உலக ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்துக் கிடக்கும் 8 ஆவது ஐபிஎல் தொடரின் தொடக்க விழா நேற்றிரவு பிரம்மாண்டமாக நடைபெற்றது.

8ஆவது இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்) தொடர் இன்று ஆரம்பமாகிற நிலையில், நேற்றிரவு 7.30 மணிக்கு கொல்கத்தாவில் உள்ள சால்ட் லேக் மைதானத்தில் மிக பிரமாண்டமாக தொடக்க விழா நடைபெற்றது.

"இந்தியாவின் விழா" என்ற பெயரில் சுமார் 2 மணி நேரம் விழா நடைபெற்றது.

நடப்பு சம்பியன் கொல்கத்தா அணியை சிறப்பிக்கும் வகையில் ஸ்பெஷல் நிகழ்ச்சியும், நடன கலைஞர் ரெமோ டி சவுசா, சந்தோஷ் ஷெட்டி மற்றும் 300 உள்ளூர் கலைஞர்களுடன் சேர்ந்து மொத்தம் 400 பேர் பங்கேற்கும் நடன நிகழ்ச்சியும் இடம்பெற்றது.

இதற்கிடையே இன்று முதல் போட்டி நடக்கும் ஈடன் கார்டன் மைதானத்தை சுற்றிலும் 5000 பொலிசார் குவிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் வீரர்கள் 'ரெஸ்ஸிங் ரூம்' மற்றும் முழு மைதானத்தை சுற்றிலும் 24 மணி நேரமும் கண்காணிக்கும் சி.சி.டி.வி கமெராவும் பொருத்தப்பட்டுள்ளன.

இன்றைய முதல் போட்டியில் மும்பை - கொல்கத்தா அணிகள் மோதுகின்றன.

அணி விபரம்

**மும்பை-** ரோகித் ஷர்மா (கப்டன்), கோரி அண்டர்சன், பிளிசார்டு, ஜஸ்பிரித் பூம்ரா, உன்முக்த் சந்த், மெர்சன்ட் டி லாங்கே, பிஞ்ச், ஷ்ரேயாஸ் கோபால், ஹர்பஜன் சிங், ஹேசல்வுட், சித்தேஷ் லாட், மிட்செல் மெக்லநாகன், மாலிங்க, அபிமன்யு மிதுன், ஓஜா, ஹர்திக் பாண்டியா, பார்திவ் பட்டேல், பொலார்ட், நிதிஷ் ராணா, ராயுடு, லெண்டில் சிம்மன்ஸ், ஜெகதீஷா சுசித், பவான் சுயல், ஆதித்யா தாரே, வினய் குமார், அக்ஷய் வாகரே.

**கொல்கத்தா-** கம்பீர் (கப்டன்), அசார் முகமது, போத்தா, கே.சி. கரியப்பா, பியுஷ் சாவ்லா, கம்மின்ஸ், அகர்வால், பிராட் ஹாக், ஷெல்டன் ஜாக்சன், குல்தீப் யாதவ், மார்கெல், நரைன், சுமித் நார்வால், பாண்டே, யூசுப் பதான், வீர் பிரதாப் சிங், வைபவ் ராவல், ஆந்த்ரே ரஸ்ஸல், ஷாகிப் அல் ஹசன், ரியான் டென்டஸ்சேட், ராபின் உத்தப்பா, சூர்யகுமார் யாதவ், உமேஷ் யாதவ்.(க)

## தூய நீருக்காக...

முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தூய நீருக்கான மக்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இப்போராட்டம் யாழ்.நல்லூர் கந்தன் ஆலயம் முன்பாக நேற்றுக் காலை பத்து மணியளவில் ஆரம்பமாகியது. இப்போராட்டத்தில் முதலமைச்சர், ஆளுநர் அலுவலகங்களிற்கும் யாழ்.மாவட்ட செயலகத்திற்கும போராட்டக்காரர்கள் பேரணியாக சென்று மகஜர்களை கையளித்துள்ளனர்.

சுன்னாகத்தில் உள்ள தனியார் மின்னுற்பத்தி நிறுவனமொன்றிலிருந்து வெளியேறும் கழிவு எண்ணெய் நிலத்தடி நீரில் கலந்து நிலத்தடி நீர் பாதிப்படைந்து வருகின்றது என பொதுமக்களால் குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்ற நிலையில், குறித்த பாதிப்புக்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும், இப்பிரச்சினையை தீர்ப்பதற்கு ஏற்படுகின்ற காலதாமதத்தை கண்டித்தும், மாறுபட்ட அறிக்கைகள் தொடர்பிலும் உண்மை நிலையினை வெளியிடக்கோரியும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இப்போராட்டத்தில் கலந்து கொண்டிருந்தவர்கள் நீர் எமது அடிப்படை உரிமை, குடிநீர் வாழ்வுக்கான உரிமை என்பதனை ஒன்றுதிரண்டு வெளிப்படுத்துவோம், முதலமைச்சரே தூய நீருக்கான செயலணியின் இணைத தலைமையை பொறுப்பேற்குக, பொறுப்பு கூறவேண்டியவர்கள் மௌனம் ஏன்?, மாசாக்கலுக்கு பொறுப்புக்கூறுவது யார்?, என எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியிருந்தனர்.

இதில் பல்கலைக்கழக மாணவர்கள், பொதுமக்கள், வைத்தியர்கள், பொது அமைப்புக்கள் என பலதரப்பட்டவர்களும் கலந்து கொண்டிருந்தனர். ஆயிரக்கணக்கானவர்கள் கலந்து கொண்ட இப்போராட்டத்தினால் நல்லூர் ஆலய சூழல் நேற்றைய தினம் சனத்திரளினால் நிறைந்து காணப்பட்டது. மேலும் பேரணியாக சென்ற வீதிகளில் போக்குவரத்து நெரிசலும் காணப்பட்டிருந்தது.

போராட்ட பேரணியின் முடிவில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், வடக்கு மாகாண ஆளுநர் டபிள்யு. எச்.எம்.பள்ளிக்கார.யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் என்.வேதநாயகன் ஆகியோருக்கு ஆர்ப்பாட்டகாரர்களால் மகஜர் ஒன்றும் தனித்தனியாக கையளிக்கப்பட்டிருந்தது.

மேலும் தமது பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு உரியவர்களால் தரப்படும் வரையில் இப்போராட்டத்தை சாகும் வரையிலான தொடர் உண்ணாவிரத போராட்டமாக முன்னெடுக்கவுள்ளதாக அறிவித்து நல்லூர் கந்தன் ஆலயம் முன்பாக நேற்று முதல் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தினையும் முன்னெடுத்துள்ளனர். இந்த நிலையில் நேற்று இரவு முதலமைச்சர் அடங்கிய வடக்கு மாகாண உறுப்பினர்கள் உண்ணாவிரதம் போராட்டத்தில் ஈடுபட்டவர்களைச் சந்தித்து கலந்துரையாடினர். இதன்போது எதிர்வரும் 12 ஆம் திகதிவரை பொறுத்திருக்குமாறும், அதன் பின்னர் தாம் பதில் தருவேன் எனவும் வடக்கு மாகாண முதலமைச்சர் போராட்டத் தில் ஈடுபட்டிருந்தவர்களைக் கேட்டுக் கொண்டார். அதுவரை பொறுத்திருக்க முடியாது என்று குறிப்பிட்ட போராட்டக்காரர்கள், சுன்னாகம் பகுதிகளில் ஓயில் கலந்த தண்ணீரில் பாதிப்பு இல்லை என்றால் அதைப் பருகலாமா, இல்லையா? என்று எழுத்து மூலம் தமக்கு பதில் தர வேண்டும் என்றும் கோரினர். அதற்கும் 12ஆம் திகதிவரை அவ காசம் கேட்ட முதலமைச்சர், அமைச்சர்கள், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களிடம், 78 மணி நேரத்துக்குள் தமக்கு தீர்ப்பு அறிவிக்க வேண்டும் எனக்கோரி போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் கூச்சலிட்டுள்ளனர்.

அதனையடுத்து முதலமைச்சர் அடங்கிய குழுவினர் அவ்விடத்தைவிட்டு அகன்று சென்றுள்ளனர். தொடர்ந்து போராட்டம் நடைபெற்றுக் கொண்டுள்ளது. (செ-4,11)

## இராவணன் போல் தோனியின் கதை முடியும்

ராவணன் போல் இந்திய அணித்தலைவர் டோனியின் கதை முடியும் என யுவராஜ் சிங்கின் தந்தை யோகராஜ்சிங் கூறியுள்ளார்.

2015ஆம் ஆண்டு உலகக் கிண்ண போட்டியில் யுவராஜ் சிங் இடம்பெறாததற்கு தோனிதான் காரணம் என்று யோகராஜ்சிங் குற்றம்சாட்டியிருந்தார்.

இந்நிலையில், இந்தி தொலைக்காட்சி ஒன்றுக்கு யோகராஜ் சிங் அளித்துள்ள பேட்டியில், தோனி ஒன்றும் பெரிய வீரர் கிடையாது. தோனியை போற்றி புகழும் ஊடகங்களுடன் அவர் நன்றாக பழகி வருகிறார்.

தோனி ஒரு சர்வாதிகாரி. ராவணனின் கதை முடிந்தது போல ஒருநாள் தோனியின் கதையும் முடிவடையும். ஆனால் தோனி ராவணனுக்கும் மேல் என்றும் ஒருநாள் காசின்றி பிச்சை எடுக்கும் நிலைக்கு அவர் தள்ளப்படுவார் எனவும் விமர்சித்துள்ளார். (க)

## அரசின்...

உண்டியல் விநியோகம் குறித்த யோசனை 21 வாக்குகளினால் தோற்கடிக்கப்பட்டுள்ளது.

19ஆம் திருத்தச் சட்டம் விரைவில் சமர்ப்பிக்கப்பட உள்ள நிலையில், உண்டியல் விற்பனை குறித்த யோசனைக்கே எதிர்க்கட்சிகளின் ஆதரவினை திரட்ட முடியாத அரசாங்கம் எவ்வாறு மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் 19ஆம் திருத்தச் சட்டத்தை நிறைவேற்றும் எனவும் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலமைச்சரிடம்...

ஆவது அமர்வு அவைத்தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் தலைமையில் கைதடியிலுள்ள பேரவைச்செயலகத்தில் நேற்று நடைபெற்றது. இதன் போது உரையாற்றும் போதே சிவாஜிலிங்கம் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

பிரதமர் ரணில் பகிரங்க மன்னிப்பு கோரவேண்டும் அவ்வாறு மன்னிப்பு கோராவிடின் ரணிலிக்கு எதிராக நாம் போராடுவோம். என ஆவேசமாக சிவாஜிலிங்கம் சபையில் கர்ச்சித்தார்.

எனினும் மத்திய அரசு தொடர்பிலான விடயங்களை மாகாண சபையில் பேச முடியாது என கூறி சிவாஜிலிங்கத்தின் ஒலிவாங்கியினை அவைத்தலைவர் நிறுத்தி வைத்ததோடு மேலும் பேசுவதற்கு மறுத்திருந்தார்.

சிவாஜிலிங்கத்தின் இக்கருத்தினை வரவேற்கும் பொருட்டு ஒருசில உறுப்பினர்கள் மட்டும் மேசைகளில் தட்டி ஆதரவு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-4)

G.C.E (O/L) பரீட்சை எழுதிய மாணவர்களின் உயர் கல்வி மற்றும் எதிர்கால நலன் கருதி குறுகிய காலப் பயிற்சிநெறிகள்

பல்கலைக்கழக கல்வி,
வேலைவாய்ப்பு,
வெளிநாட்டில் உயர்கல்வி,
ஏனைய கற்கை நெறிகளை
மேற்கொள்ள காத்திருக்கிறீர்களா?



(சி-609)

ஆங்கில அறிவு இல்லாமல் இவை எதுவுமே சாத்தியப்படாது.

சர்வதேச தராதரத்திற்கு அமைய நவீன தொழில்நுட்பத்துடன் உங்களுக்காக எமது நிறுவனம் வழங்கும்

SPOKEN ENGLISH WITH GRAMMAR
(Quick Learning Course) 80 Hours

DIPLOMA IN ENGLISH 110 Hours

- இப்பாடநெறிகளை பூர்த்தி செய்பவர்கள் City & Guilds இன் English examக்கு தோற்ற முடியும்.
- British Council இனால் நடாத்தப்படும் Cambridge ESOL பரீட்சைகளுக்கும் தோற்ற முடியும்.
- Excellent Teachers' Panel & Individual attention

NEW BATCHES STARTS ON

Batch I : 08.04.2015
Batch II : 10.04.2015
BatchIV : 11.04.2015
Batch V : 15.04.2015

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

BCHS
No.15 2/1, Chirambiyadi Lane (Off Stanley Road),
Above Sathosa SM, Jaffna. Tel : 021-2224550

Hotlines: 0777585913, 0777222422, 0714299935

## 31ஆம் நாள் நினைவலைகளும் நன்றி நவிலலும்

### திருமதி ரதி மயிலேறும்பெருமாள்

தோற்றம் 30 - 10 - 1953



மறைவு 11 - 03 - 2015

அம்மா என்ற சொல் இன்று பொருள் இழந்தது... வெறுமை எங்கள் வீட்டில் வந்து குடியமர்ந்து...
வாய் விட்டு அழுது தொலைக்க முடியா துக்கம் தொண்டையை அடைக்கின்றது.
அம்மா... அம்மா... என்று மனது ஓலமிட்டு உங்களை தேடியலைகின்றது.

கடந்த 11.03.2015 செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்திய எமது குடும்ப தலைவியின் மறைவுச் செய்தி கேட்டு எமக்கு எல்லா வகையிலும் அனுதாபம் தெரிவித்து இறுதி வரை இணைந்து நின்ற உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

10.04.2015 வெள்ளிக்கிழமை காலை 7 மணியளவில் பருத்தித்துறை வியாபாரிமூலை அந்தியேட்டி மடத்தில் கிரியைகள் நடைபெற்று அதன் பின் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நாகலிங்கம் முதலியார் வீதி,
பருத்தித்துறை.

தகவல்:-மயிலேறும்பெருமாள்
குடும்பத்தினர்.

(019)

ALLIANCE FRANÇAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af



- வடமாகாணத்தில் FRENCH EMBASSY யின்கீழ் இயங்கும் ஒரே சர்வதேச நிறுவனம்.
- உலகம் முழுவதும் 1040+ கிளைகள்.
- INTERNATIONAL DIPLOMAS.
- ஆசிரியர்கள்: யாழ்.பல்கலைக்கழக பிரெஞ் விரிவுரையாளர்கள் (பிரான்ஸ் நாட்டவரும்)

வகுப்புகளுக்கு உடன் அழையுங்கள்
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்

(032)

FRENCH MOVIES – JAFFNA
Alliance Française de Jaffna
cordially invites you to the screening of
INITIATION
5 short movies from Africa
(1983-1999, 71 min.)
on Thursday 09 April 2015 at 4:00 p.m.
at Alliance Française de Jaffna,
61, Kachcheri-Nallur Road, Jaffna.
Phone: 0212228093
French language. English subtitles. Free entrance.

(031)

நியூ அபிராமி புடைவையகத்தின் வருடாந்த விலைக்கழிவு

சாறி, சல்வார் 50% விலைக்கழிவில் விற்பனை செய்யப் படுகின்றது. அது தவிர இந்தியாவில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட புதிய ரக ஆடைகளின் விற்பனையும் சித்திரைப் புதுவருடத்தை முன்னிட்டு 225, மின்சார நிலைய வீதியில் (C.பொன்னம்பலம் வீதி புதிய காட்சியறையுடன் இயங்குகின்றது. ஒருமுறை விஜயம் செய்து உங்கள் மனங்கவர் ஆடைகளை தெரிவு செய்யுங்கள்.

விலைக்கழிவு ஆடைகள் கையிருப்பு உள்ளவரை மட்டுமே. இன்றே விஜயம் செய்யுங்கள்.

(024)

10,000/=க்கு மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு அழகிய வர்ணக் குடை ஒன்று இலவசம்.

PATRICIAN INSTITUTES

பற்றீசியன் தொழிற்பயிற்சி நிறுவனங்கள்
ஆரம்பம் 15.04.2015

I.Computer Course
A.Information & Communication Technology (ICT) — Duration 4 months
(O/L மாணவர்களின் நலன்கருதி ஆரம்பிக்கப்படுகின்றன)
B.Advanced in Co Computer Programming — Duration 8 months
C.Diploma in Microsoft office — Duration 4 months
D.Diploma in desktop publishing — Duration 4 months
E.Diploma in video editing — Duration 4 months
F.Diploma in type setting — Duration 6 months
G.Diploma in computerized accountion — Duration 4 months
H.Diploma in software engineering — Duration 4 months
I.Diploma in Micro media — Duration 6 months
J.Diploma in Web Multimedia — Duration 4 months
K.Professional Diploma in Graphic Design — Duration 4 months
L.Computer Hardware Technology — Duration 4 months
M.Internet & Email — Duration 3 months
N.General Information Technology (GIT) — Duration 4 months
கணனி பயிலும் மாணவர்களின் நன்மை கருதி ஆங்கில தட்டெழுத்து (ENGLISH TYPING) தமிழ் தட்டெழுத்து (TAMIL TYPING) இலவசமாக கற்பிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.
II.Short Hand Typing (English)
(சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (ஆங்கிலம்)
கணனி மூலம் தட்டெழுத்துப் பயிற்சி அளிக்கப்படும். — Duration 6 months
III.Short Hand Typing (Tamil)
சுருக்கெழுத்தும் தட்டெழுத்து (தமிழ்) — Duration 6 months
கணனி மூலம் தட்டெழுத்துப் பயிற்சி அளிக்கப்படும்.
IV.General motor Mechanism
(Petrol & Diseal வாகனங்கள் — Duration 6 months
மோட்டார் வாகனம் திருத்துதல்)
V.General Electrician (Wiring & Re Winding
ஜெனறல் எலக்ரிஸன் மின்சார இணைப்பு — Duration 6 months
மோட்டார் றிவைண்டிங்)
VI.Lathe machine Poeration (Milling Machine,
Shaping Mechine என்பன கற்றுக் கொடுக்கப்படும்) — Duration 6 months
கடைச்சல் இயந்திரப் பயிற்சி
(on the Job training வழங்குதல்)
VII.Carpentery (with Use of Machinery)
மரவேலை (on the Job training வழங்குதல்) — Duration 6 months
VIII.Refrigeration and Air Conditioning
குளிர்சாதனப் பெட்டி திருத்துதல் — Duration 6 months
IX.Motorcycle Mechanism — Duration 6 months

குறிப்பு:
1.பயிற்சிக் கட்டணம் தவணை முறையில் செலுத்தலாம்.
2.பயிற்சி நெறிகள் சம்பந்தமான சகல விபரங்களையும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு:
Registrar, Patrician Institutes
61(59), St.Patrick's Road, Jaffna.
T.P.0212226148, Fax 021 222 6148
Email:patricianjaffna@yahoo.com

(சி-608)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.04.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org